# மனித உரிமைகள்

## ஓர் அறிமுகம்

வாழ்வு



சுதந்திரம்

மாண்பு



சமத்துவம்

அய்க்கிய நாட்டவையின் மனித உரிமைக் கல்விக்கான உலகத் திட்டத்தின் கீழ் (2005 - 2007)
பள்ளிகளில் மனித உரிமைக் கல்விக்கான தேசியத் திட்டம்

# உட்புகுமுன்

***மனித உரிமைக் கல்வி ஏன்?***

மானுடம் அதன் நீண்ட நெடிய வரலாற்றில் கண்ட மாற்றங்களில். சிறப்பு மிக்க புரட்சி மக்களாட்சியென்பதாகும். மக்களாட்சி வெறும் அரசியல் கோட்பாடு மட்டுமல்ல, இது போற்றுதற்குரிய ஒரு மதிப்பீடுமாகும். இம்மக்களாட்சியில் தான் மக்கள் மையப்படுத்தப்பட்டனர். அறிவுக்கெட்டா சக்திதனையும், தனிமனிதரின் பேராண்மையையும் மேன்மைப்படுத்தியிருந்த சமூக வரலாறு, இங்கு தான் மக்களை மையப்படுத்தியது. இம்மக்களின் மாண்பையும், மரியாதையையும் மதிக்கத் தொடங்கியது. இவர்கள் மீது நம்பிக்கை வைத்தது. இம்மக்களாட்சி, மக்களின் மாண்பையும், மரியாதையையும் காக்க வேண்டுதலை உரிமையாக்கியது. இவ்வுரிமை காக்க அரசியல் சாசனங்கள் உருவாக்கப்பட்டன. சாசனங்களைப் போற்ற நிறுவனங்கள் உருவாயின.

***ஆம் ! மக்களாட்சி மக்களின் உரிமை காக்கும் கேடயமாயிற்று.***

***மக்களாட்சியின் மகத்துவமே உரிமைகள் பாதுகாப்பில்தான் அடங்கியுள்ளது.***

மக்களாட்சி மூலம் மனித உரிமை காத்திட மக்களாட்சியை நடைமுறைப்படுத்திய அரசுகள் அரசியல் சாசனங்களை உருவாக்கின. இவ்வரசுகள் மட்டுமல்ல, அகில உலக அளவிலும், மனித உரிமைகள் காக்க, சாசனங்களும், உடன்படிக்கைகளும், சட்டங்களும் உருவாயின. இவற்றை ஏற்று, நடைமுறைப்படுத்துவதாக உலக நாடுகளும் ஒப்புக் கொண்டன.

**மனித உரிமைக் கல்வி**

மனித உரிமைக் கல்வி பொது மக்களின் வாழ்வோடும் அவர்தம் திறமையோடும் தேவைகளோடும் பொருந்தியிருக்க வேண்டும். இக்கல்வி நெகிழ்ச்சி உடையதாயிருக்க வேண்டும். இக்கல்வி அறிவு சீவிகள், தலைவர்களின் சொத்தாக மட்டும் இருக்கக் கூடாது. மக்கள் அனைவரும் அவரவர்க்கு இயைந்த வகையில் பயன் பெறும் பொதுச் சொத்தாக இருத்தல் வேண்டும்

***எனினும் என்ன?***

மனித உரிமைப் பாதுகாப்புக்கென எழுத்து வடிவில் உருவாக்கப்பட்ட சட்டங்களும், சாசனங்களும் மனித மாண்பைக் காத்தனவா? மனித உரிமைகளைப் பேணினவா? இன்று உலகெங்கும் ஒவ்வொரு நாளும் மனித உரிமைகள் மீறப் பெறுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமையிழந்து வாடுகின்றனர் என்பதோடு, உரிமைகள் உள்ளன என்பது கூட அறியாமல் வாழ்கின்றனர். அரசியல் சாசன பொன்விழா கண்ட இந்தியாவில், மனித உரிமைகளின் நிலை என்ன? இக்கேள்விக்கான விடையாக, அய்க்கிய நாட்டவை கண்ட பதில் தான் ***அய்க்கிய நாட்டவையின் மனித உரிமைக் கல்விக்கான பத்தாண்டுகள்*** **(1995–2004)** என்பதாகும். உரிமைகளைச் சட்டங்களால் மட்டும் பாதுகாக்க முடியாது. உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய ஓர் உயரிய மதிப்பீடு என்பதால், சட்டங்களையும் தாண்டி, மதிப்பீடாக வளர்த்தெடுக்க வேண்டிய தேவையை ஐக்கிய நாட்டவை உணர்ந்தது. சமூகத்தின் பலதரப்பட்ட பிரிவினரும் உரிமைக் கண்ணோட்டம் பெறும் வகையில் திட்டங்களைத் தீட்டியது. இத்திட்டத்தின் ஒரு பகுதிதான் பள்ளிகளில், கல்லூரிகளில், இன்று நடைமுறைப்படுத்தப்படும் மனித உரிமைக் கல்வியாகும். அய்க்கிய நாட்டவையின் இத்திட்டத்தை, அய்க்கிய நாட்டவையின் உறுப்பு நாடாம் இந்திய அரசும் அங்கீகரித்ததோடு, நடைமுறைப்படுத்தும் முயற்சிகளிலும் இறங்கியுள்ளது.

***பள்ளிகளில் மனித உரிமைக் கல்வி***

அய்க்கிய நாட்டவையின் ***மனித உரிமைக் கல்விக்கான பத்தாண்டுகள்*** எனும் திட்டம் பள்ளிகளில் மனித உரிமைக் கல்வியை கொண்டு செல்ல வற்புறுத்துகிறது. அய்க்கிய நாட்டவையின் இவ்வறைகூவலை ஏற்று, நாட்டின் பலதரப்பு மக்களுக்கும் மனித உரிமை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வந்தாலும், பள்ளிகளில் மனித உரிமைக் கல்வி தமிழகத்தில் தான் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பது சிறப்பாகும்.

மதுரையில் இயங்கும் மனித உரிமைப் பாதுகாப்பு அமைப்பான மக்கள் கண்காணிப்பகம் – தமிழ்நாடு, மனித உரிமை மீறல்களைக் கண்காணித்தலோடு, பயிற்சி மற்றும் கல்வி மூலம் மனித உரிமைப் பண்பாட்டை வளர்த்தெடுக்கும் நோக்குடன் மனித உரிமைக் கல்வியை பள்ளிகளில் அறிமுகப்படுத்தி வருகிறது. 1997–ஆம் ஆண்டிலிருந்து 2002 வரை, மூன்று கட்டங்களாக தமிழகப் பள்ளிகளில் மனித உரிமைக் கல்வியை தொடர்ந்து நடத்தி வருகிறது.

| கட்டம் | ஆண்டு | மாவட்டம் | பள்ளிகள் | மாணவர்கள் | வகுப்பு | ஆசிரியர்கள் |
|---|---|---|---|---|---|---|
| கட்டம் I | 1997 | சென்னை | 9 | 1756 | 9 | 90 |
| கட்டம் II | 1998-2000 | 10 மாவட்டங்கள் | 122 | 21,320 | 8, 9 | 315 |
| கட்டம் III | 1999-2002 | 29 மாவட்டங்கள் | 238 | 33,785 | 7, 8, 9 | 730 |

ஆண்டின் இறுதியில், இத்திட்டம் பற்றிய திறனாய்வும் செய்யப்பட்டு வருகிறது. இந்தத் திறனாய்வு மூலம், இக்கல்வி, மாணாக்கர்களிடையே, ஆசிரியர்களிடையே, பள்ளி வளாகத்தில், குடும்பத்தில் என்னென்ன தாக்கங்களை நிகழ்த்தியுள்ளது என்பது ஆவணப் படுத்தப்பட்டுள்ளது. மனித உரிமைக் கல்வியின் பரந்துபட்ட வளர்ச்சியில் மக்கள் கண்காணிப்பகத்தின் தனித்துறையாக 'மனித உரிமைக் கல்விக்கான நிறுவனம்' இன்று செயற்படுகிறது.

**பாடத் திட்டமும், பாடநூல்களும்**

- மனித உரிமைக் கல்வி – ஓர் அறிமுகம்
- குழந்தை உரிமைகள்
- பெண்ணுரிமைகள்

இம்மூன்று பாடநூல்களும் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- சுற்றுச்சூழல் உரிமைகள்
- சாதி, சமய ரீதியிலான பாகுபாடுகள்
- அகதிகள் உரிமைகள்

ஆகிய மூன்று நூல்கள் தயாரிப்பில் உள்ளன.

இப்பாடநூல்கள் ஒரு சிறு ஆசிரியர் குழுவினரால் உருவாக்கப்பட்டாலும், துறை சார்ந்த வல்லுனர்களின் யோசனைகளோடு இந்நூல்கள் செழுமையாக்கப்பட்டன. மனித உரிமைக் கல்விக்கென்று தமிழகத்தில் முதன் முதலாக எழுதப்பட்ட முதல் முயற்சி என்பதால், இவ்வுருவாக்கத்தில் குறைபாடுகள் இருக்கலாம். குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவார்களானால் இனிவரும் காலங்களில் திருத்திக் கொள்வதில் ஆசிரியர் குழு மகிழ்ச்சி கொள்ளும்.

**பாடநூல் 1. மனித உரிமைக் கல்வி - ஓர் அறிமுகம்**

இவ்வாண்டு ஆறாம் வகுப்பு மாணாக்கருக்கு அறிமுகப்படுத்தப்படவிருக்கும் இந்நூல், கடந்த ஐந்தாண்டுகளாகத் தமிழகப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு, பாடமாக நடத்தப்பட்ட நூலாகும். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, இப்பாடத்தைக் கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் வல்லுநர் கருத்துக்களைக் கேட்டு, இந்நூல் இவ்வாண்டு தேவையான சிறிய மாற்றங்களைச் செய்து மீண்டும் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்நூல் மனித உரிமைக் கல்வியின் அறிமுக நூலாக இருப்பதாலும், கற்கவிருக்கும் மாணாக்கரின் தகுதி, வயது, இவைகளைக் கருத்தில் கொண்டு, எளிய நடையில், மனித மாண்பும், மரியாதையும் குழந்தைகள் மனத்தில் எளிதில் ஏற்றும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது. மனிதம் போற்றுதற்குரியது. இம்மனிதம், எப்படியெல்லாம் சிதைக்கப்படுகிறது என்பதும் சிதைக்கப்படும் மனிதத்தை காக்க என்னென்ன உரிமைகள் வேண்டும் என்பதும் இந்நூலின் உள்ளடக்கமாகவுள்ளது. உரிமைகளை, சாசனங்களாக, சட்டங்களாக மட்டும் கொடுக்காமல், மதிப்பீட்டின் அடிப்படையில் மாணாக்கர் புரிந்து கொள்ளும் வண்ணம் புதிய முறையில் தரப்பட்டுள்ளன.

இந்நூல் நான்கு பெரும் பிரிவுகளைக் கொண்டது.

1. ***மனிதத்தைத் தேடி***
2. ***மனிதச் சிதைவு***
3. ***மனிதம் வளர***
4. ***மனிதம் காக்க***

ஒவ்வொரு பிரிவும் பல உட்பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

**மனித உரிமைக் கல்வி**

ஓர் அறிவு சார்ந்த பயிற்சியன்று
செயலாற்றும் நடவடிக்கை.
பள்ளியெனும் புள்ளியில்
நடப்பெறும் இவ்வேர்
சமூகம் எனும் ஆலாய் விரியும்
பள்ளி தரும் இம்மகிழ்ச்சியனுபவம்
சமூகப் புத்துறவை உருவாக்கும்

**பாட அமைப்பும் கற்பிக்கும் முறையும்**

மனித உரிமைக் கல்வி வாழ்வுக்கான கல்வி. எனவே, இது ஒரு வாழ்க்கைக் கல்வி. வாழ்க்கைக் கல்விக்கான பாடங்களும், கற்பிக்கின்ற முறையும் ஏனைய பாடங்களைப் போன்றோ, அப்பாடங்களை கற்பிக்கின்ற முறை போன்றோ அமைய முடியாது. இக்கல்வி, ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். மாணவர்கள் கற்கின்றனர் என்ற ஒரு வழிப் போக்கில் அமைய முடியாது. வாழ்க்கைக் கல்வியாம் மனித உரிமைக் கல்வி, ஒரு அனுபவக் கல்வி. ஆசிரியரும், மாணவரும் தம் அனுபவங்களைப் பகிரக் கூடிய வாய்ப்பு தரும் கல்வி. உரையாடல் தான் இக்கல்வியின் மையம். எனவே, ஆசிரியர், மாணவர் உரையாடும் வகையில், இவ்வுரையாடல் மூலம் ஒரு மக்களாட்சி மதிப்பீட்டை வளர்க்கும் வகையில், இப்பாடங்களும், கற்பிக்கும் முறையும் அமைக்கப்பட்டுள்ளன. இப்பாடம், தேர்வு சார்ந்த பாடமல்ல ; வகுப்பறை சார்ந்த பாடமுமல்ல ; கற்கின்ற மாணவர் இப்பாடங்களைச் சுமையாகக் கருதாமல் கற்றலில் இனிமையாக சுவைபட கற்கும் விதத்தில் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடத்தின் தலைப்பும் கதை வழியாகவோ, உரையாடல் வழியாகவோ, வரலாற்று நிகழ்வுகள் வழியாகவோ அனுபவங்கள் வழியாகவோ கதாப்பாத்திரம் பேசுவது போலவோ பேட்டிகள் வழியாகவோ அறிமுகப்படுத்தப்பட்டு விளக்கம் தரப்படுகிறது. பாடத்தின் இறுதியில் இந்திய அரசியல் சாசனத்திலும் ஐ.நா.வின் மனித உரிமைப் பிரகடனத்திலும் ஏனைய மனித உரிமை சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகளிலும் தெரிவு செய்யப்பட்ட பகுதிகள் இடம் பெறுகின்றன.

பாடத்தின் கருத்துக்களை உள்வாங்க வகுப்புப் பயிற்சி, வீட்டுப் பயிற்சி என்று இருவகைப் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. பயிற்சிகள் மாணாக்கரின் மனித உரிமைக் கண்ணோட்டம் வலுப்பெறும் வகையில் தரப்பட்டுள்ளன. அவை :

1. **வினாக்கள்**
2. **குழு ஆய்வு**
3. **வகுப்பில் பகிர்ந்து கொள்ளுதல்**
4. **வரைபடம் வரைதல்**
5. **கட்டுரை, கவிதை எழுதுதல்**
6. **கடிதம் எழுதுதல்**
7. **பிறரிடம் கேட்டறிந்து பகிர்தல்**
8. **அடையாளப் பொருட்களை வைத்துப் பகிர்தல்**

9. பேட்டி காணுதல்

10. சரியா, தவறா என்று குறித்தல்

11. விளையாட்டு

12. இடங்களைப் பார்வையிடல்

13. மனு கொடுத்தல்

இப்பயிற்சி மாணாக்கர்க்குத் தன்னைப் பற்றியும் தன் சமூகத்தைப் பற்றியும் விழிப்புணர்வைக் கொடுக்கிறது. காலங்காலமாக மனிதரிடையே இருக்கின்ற பழைய தவறான அடிமைப்படுத்துகின்ற மதிப்பீடுகளைக் கேள்விக்குட்படுத்தி மனித மாண்பு அடிப்படையில் மனித உரிமை மதிப்பீடுகளை வளர்க்க உதவி செய்கிறது. அதனடிப்படையில் செயல்படவும் தூண்டுகிறது.

> **மனித உரிமைப் பாதுகாப்பு**
>
> அகில உலக சட்டங்களாலோ சட்டங்களை
> நடைமுறைப்படுத்தும் அரசுகளாலோ அல்ல -
> குடிமக்களின் தீவிர பங்கேற்பில்தான் சாத்தியம்.

**மனித உரிமைக் கல்வித் திட்டம் IV**

ஐக்கிய நாட்டவையின் மனித உரிமைக் கல்விக்கான பத்தாண்டுகள் தரும் அறை கூவலை ஏற்று இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழகப்பள்ளிகளில் மனித உரிமைக் கல்வியை மூன்று கட்டங்களாக நடத்தி வெற்றி கண்ட மக்கள் கண்காணிப்பகம்– தமிழ்நாட்டின் மனித உரிமைக் கல்வி நிறுவனம், இவ்வாண்டு (2002) முதல் தமிழக அரசின் ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் மனித உரிமைக் கல்வியை அறிமுகப்படுத்துவதில் மகிழ்வடைகிறது. இவ்வாண்டு ஆறாம் வகுப்பில் தொடங்கவிருக்கும் இத்திட்டம் மூன்றாண்டுத்திட்டமாக எட்டாம் வகுப்பு வரை நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

## ஆதி திராவிடர் நலப்பள்ளிகளில் மனித உரிமைக் கல்வி

இந்தியச் சமூகம் ஒரு சாதியச் சமூகம். இச்சமூகம் பிறப்பினடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பித்து இப்போக்கை நியாயப்படுத்தி நிலைப்படுத்தியுள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சமூக, பொருளாதார அரசியல் நிலையில் சமூகத்தின் ஒரு பிரிவினர் பிறப்பின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்பெற்று வந்துள்ளனர். ஒடுக்கப்பட்டவர்களாய், ஓரங்கட்டப்பட்டவர்களாய் வாழ்ந்து வரும் இம்மக்கள் இந்திய சனநாயக அமைப்பில் கவனிக்கப்பட வேண்டியவர்களாக்கப்பட்டு இவர்களும் சமூக பொருளாதார அரசியலமைப்பில் முழுமையான பங்கேற்பு பெறும் வகையில் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. தனித்துப் பிரித்து நடத்தப்படும் மக்களின் உரிமை காக்க தனிச்சட்டங்கள் உருவாயின. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று கூறிய இந்திய அரசியல் சாசனமும் சமனற்ற சமூக அமைப்பில் சமத்துவம் உருவாக ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தனிச்சலுகை கொடுத்தது. ஆதி திராவிடர் நலம் காக்க தனித்துறை உருவானது. இவர்தம் உரிமை காக்க தனி ஆணையங்கள் உருவாயின. இவர் மாண்பு காக்கவும் உரிமைகளைப் பாதுகாக்கவும் தனிச்சட்டங்கள் உருவாயின. கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் இவர்களுக்கு இட ஒதுக்கீட்டை உருவாக்கிய அரசுகள் இவர்தம் தனித்த வளர்ச்சி கருதி இவர்களுக்கென தனிப்பள்ளிகளையும் உருவாக்கியுள்ளன. தனிப்பள்ளிகள் இவர்களைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்துவதற்கல்ல. இவர்களின் பால் தனிக்கவனம் செலுத்தி, இவர்களின் சமூகப் பங்கேற்பை உத்தரவாதப்படுத்துவது தான் நோக்கமாகும். சட்டங்களும் ஆணையங்களும் இவர்களுக்கான பாதுகாப்பைத்தர உதவுகின்றன. உண்மை. எனினும் அரசியல் சாசனப் பொன் விழா கண்ட பின்பும் இவர்களின் சமூகப் பாதுகாப்பு இன்றும் கேள்விக்குறியாயிருக்கிறது என்பதனை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

தீண்டாமை முற்றிலும் ஒழிக்கப்படவில்லை. சமூக ஒடுக்கம் இன்னும் நிகழ்கிறது. இவைகள் வெறும் சட்டங்களால் மட்டும் தீராது என்பதனை நாம் யதார்த்த வாழ்வில் காண்கிறோம். மனித மாண்பு, மரியாதை, உரிமைகளையெல்லாம் வெறும் சட்டங்களால் மட்டும் பாதுகாத்திட முடியாதென்பதால் மனித உரிமையை வளர்த்தெடுக்க வேண்டிய ஒரு கலாச்சாரமாகக் கருதி படிக்கின்ற குழந்தைப்பருவத்திலேயே கொண்டு செல்லும் வகையில் தமிழக ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் கொண்டு செல்லப்படுகிறது. உரிமை மறுக்கப்பட்ட ஓரங்கட்டப்பட்ட இம்மாணவர்களை உள்ளடக்கிய இப்பள்ளிகளில் மனித உரிமைக் கல்வியைக் கொண்டு செல்வது இன்றைய கால கட்டத்தின் தேவையாகும். இத்தேவையை உணர்ந்து இத்திட்டத்தை, தமிழக ஆதி திராவிடர் நலப்பள்ளிகளில் அறிமுகப்படுத்த துணை நின்ற, துறையின் ஆணையர்க்கும், ஏனைய மாவட்ட அலுவலர்களுக்கும் எம் நன்றி உரித்தாகட்டும். உரிமையுகத்தில், மக்கள் உரிமை காக்க, வரலாற்றில் இம்முயற்சிக்குத் துணை நின்ற இவர்களை வரலாறு நிச்சயமாகப் போற்றும் என்பதில் அய்யமில்லை.

- ஆசிரியர்கள்

# I. மனித ஏக்கங்கள்

**குழந்தை** : அம்மா ! அம்மா .. . .

**அம்மா** : ஏண்டா கத்துற ?

**குழந்தை** : நம்ம தோட்டததில இருந்த முள்ளுச் செடியை வெட்டினேல்ல !

**அம்மா** : ஆமா, அதுக்கென்ன ?

**குழந்தை**: அந்தச் செடி திரும்பவும் துளித்திருக்கும்மா ?

**அம்மா** : அய்யய்யோ ! அதை உடனே வெட்டணுமே.

**குழந்தை**: வாம்மா, வெட்டுவோம்.

(அம்மா அரிவாளை எடுத்துச் சென்று வெட்டுகிறாள். சில நாட்கள் சென்று தோட்டத்திற்கு விளையாடச் சென்ற குழந்தை செடி மீண்டும் துளிர்த்திருப்பதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறான். தாயிடம் ஓடி வருகிறாள்)

**குழந்தை** : ஏம்மா ! இந்தச் செடி வெட்ட வெட்ட துளுக்குது.

**அம்மா** : அது அப்படித்தான்.

**குழந்தை** : சொல்லும்மா ! (சிணுங்குகிறான்).

**அம்மா** : அந்தச் செடிக்கும் உயிர் இருக்குப்பா. அதனாலதான்.

**குழந்தை** : உயிர் இருக்கா ?!

**அம்மா** : உயிர் இருப்பதால்தான் சாகக்கூடாதுன்னு நினைக்குது.

**குழந்தை** : ஏன் செத்துப் போகக் கூடாதுன்னு நினைக்குது ? அந்தச் செடியால யாருக்கும் எந்தப் பயனுமில்லையே !

**அம்மா** : நமக்குப் பயனில்லை தான். ஆனால், அந்தச் செடிக்கும் உயிர் இருக்கே.

**குழந்தை** : அதனால . . ..

**அம்மா** : அதுக்கும் உயிர் இருப்பதால் தான் உயிர் வாழணும் ஏக்கமிருக்கு !

**குழந்தை** : இந்த ஆசை முள்ளுச் செடிக்கு மட்டுந்தான் இருக்கா.

**அம்மா**: கண்ணு ! உனக்கு ரொம்ப அறிவுடா. என்னமா கேள்வி கேட்கிற.

**குழந்தை** : சொல்லும்மா

**அம்மா :** எனக்கு நிறைய வேலை இருக்கு! சாயங்காலம் அப்பா வந்தவுடனே அவருட்ட கேளு ! என்ன . .

**குழந்தை :** சரிம்மா.

(மாலை நேரம் – அப்பா அலுவலகத்திலிருந்து வருகிறார் )

**குழந்தை :** அப்பா ! அப்பா ! இந்த, இந்த அம்மா ரொம்ப மோசம்.

**அப்பா :** ஏம்மா. என்னாச்சு

**அம்மா :** இவன் காலையிலேருந்து தொண, தொணங்கிறான். நீங்களும் உங்க குழந்தையுமாச்சு, நீங்களே சமாளிங்க.

**அப்பா:** என்னடா கண்ணு ?

**குழந்தை:** நம்ம தோட்டத்தில ஒரு முள்ளுச்செடி இருந்துச்சுல்ல., அதை போனவாரம் அம்மா வெட்டினாங்க. இன்னைக்கு அது திரும்பவும் துளுத்திருக்குப்பா. அது தான் நமக்கு வேண்டாமே – ஏம்பா திரும்பவும் வளருதுண்ணு கேட்டா, அம்மா சொல்றாங்க, அதுக்கு வாழணும்னு ஆசையிருக்காம். ஏக்கமிருக்காம்னு சொல்றாங்கப்பா ? அது என்னப்பா ஏக்கம் ? ஆசை ?

**அப்பா :** உலகத்திலவுள்ள எல்லா உயிர்களுக்கும் வாழணும்னு ஒரு ஏக்கம் இருக்குப்பா – இந்த ஏக்கம் எல்லார்க்கும் பொதுவானதுப்பா !

**குழந்தை :** ஏக்கம் இயற்கையானதுண்ணா, நாம அதை வெட்டுறது தப்புதானப்பா.

**அப்பா :** சரியாச் சொன்ன!

**குழந்தை :** இந்த ஏக்கம் செடிகளுக்கும் உண்டுன்னு சொன்னா, மனுஷங்களுக்கும் இருக்கும்தானேப்பா ?

**அப்பா:** நிச்சயமாக எல்லாருக்கும் உண்டு.

**குழந்தை:** உனக்கு ஏக்கம் உண்டாப்பா ?

**அப்பா :** எனக்குமுண்டு, உன் அம்மாவுக்குண்டு, உனக்கும் உண்டு.

**குழந்தை :** எனக்குமா ? எனக்கு ஏக்கமே இல்லைப்பா.

**அப்பா :** இல்லையில்லை ! உனக்குமுண்டு.

**குழந்தை :** அது எப்படிப்பா.

**அப்பா :** அம்மா, அப்பா நீ கேட்டதெல்லாம் வாங்கித் தரணுமுன்னு நினைக்கிறல்ல ? உன்னை திருவிழாவுக்கு கூட்டிட்டுப் போகணும்முன்னு நினைக்கிறல்ல ? மிட்டாய் வாங்கித் தரணுமின்னு நினைக்கிறல்ல. இதே மாதிரி நிறைய ஏக்கமிருக்கத்தானே செய்யும்.

**குழந்தை:** இதுதான் ஏக்கமாப்பா !

**அப்பா :** சிலருக்கு நிறைய படிக்கணும்னு ஏக்கமிருக்கும். சிலருக்கு பக்தியாயிருக்கணும்னு ஏக்கமிருக்கும். சிலருக்கு உடல் நல்ல பெலமா இருக்கணும்னு ஏக்கமிருக்கும். சிலருக்கு சமத்தையா நடத்தணும்னு ஏக்கமிருக்கும். சிலருக்குச் சுதந்திரமாக இருக்கணும்னு ஏக்கமிருக்கும். இப்படி எத்தனையோ ஏக்கங்கள் இருக்கு.

**குழந்தை:** இதுக்கெல்லாம் நாம என்னப்பா செய்யுறது ?

**அப்பா :** நாம மனுஷங்கதானே, அதனால நம்ம ஏக்கங்களைப் பற்றி மட்டும் கவலைப்படாமல், **பிறருடைய ஏக்கங்களையும் பற்றிக் கவலைப்படணும். அவங்க ஏக்கங்களை நாம புரிஞ்சுக்கணும்.**

**குழந்தை:** பக்கத்து வீட்டு மல்லிகா பள்ளிக்கூடத்துக்கே போகலியேப்பா? அவளுக்கு பள்ளிக்கூடம் போகணும்னு ஏக்கமிருக்குமாப்பா?

**அப்பா:** ஆமா. கட்டாயமிருக்கும். இதைத்தான் வாழ்வுக்கான ஏக்கம்னு சொல்றோம்.

**குழந்தை:** அது சரிப்பா. இந்த மாதிரி வாழ்வுக்கான ஏக்கங்கள் எப்போவெல்லாம் எப்படியெல்லாம் நம் மனசுக்குள்ள வெளிப்படும்னு சொல்லுங்கப்பா.

**அப்பா:** நல்ல கேள்வி. இந்த ஏக்கம் நாம் பொறந்ததுலேயிருந்து இருக்குது. எப்போதுமே நமக்குள்ளேயே இருக்கும். ஆனா, ஒரு மனிதர் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும்போது அது தெளிவாக வெளிப்படுறதைப் பார்க்கலாம். இதோ பாரு சில செய்தித்தாள்கள் வச்சிருக்கேன். அவைகளில் கொடுக்கப்பட்டுள்ள சில நிகழ்ச்சிகளை நான் படிக்கிறேன். கவனமாக் கேளு. நான் சொன்னது புரியும்.

**ஏக்கம் 1**

***சங்கீதா,*** வயது 14. கையால் மலம் அள்ளும் தொழில் செய்யும் வகுப்பைச் சேர்ந்த பெண். வகுப்பறையில் ஏனைய மாணவர்களோடு உட்கார ஆசிரியர் அனுமதிக்காமல் கடைசி பெஞ்சில் அமரச் சொன்னார். படிப்பில் அவள் கெட்டிக்காரியாக இருந்த போதும் இவள் இவ்வாறாக நடத்தப்பட்ட-மையால் பள்ளிக்குச் செல்வதை நிறுத்தி விட்டாள். ஒரு சமூக சேவகியிடம் அவள் சொல்கிறாள். 'நான் டாக்டராக வேண்டும் என்று விரும்பினேன். என் கனவெல்லாம் தகர்ந்து போய்விட்டது.' இன்னொரு பையன் சொல்கிறான். 'எங்கள் ஆசிரியர் வகுப்பின் கடைசி இருக்கையில் அமரச் சொல்கிறார். நாங்களும் மனிதர்களில்லையா? எங்களுக்கும் மாண்பில்லையா? எங்கள் மாண்பும் காக்கப்பட எங்களுக்கு விருப்பம் இருக்காதா? எங்களையும் சமமாக நடத்த மாட்டாங்களா?'

ஆதாரம் **Human Scape – May 2002**

**ஏக்கம் 2**

மரணப் படுக்கையில் இருக்கும் அந்த முதியவரின் வாய் முணு முணுத்துக் கொண்டேயிருக்கிறது. என்ன முணு முணுத்தது தெரியுமா? ''நான் இறந்ததும் புதைக்க ஆறடி நிலம் வேண்டும்'' என்று தான். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இவர் வாழும் பகுதியில் மயானம் இல்லை. மாவட்ட ஆட்சியருக்கு ஏற்கனவே மனு கொடுத்திருக்கிறார். அம்மனுவில் ''தற்சமயம் நான் நோய்வாய்ப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறேன்.

எங்கள் பகுதியில் மயானம் இல்லை. எனவே நான் இறந்த பிறகு என் பிரேதத்தை வைத்து அல்லல் படுத்திட வேண்டாம். எனவே ***உடனடியாக மயானம் அமைத்துக் கொடுத்து ஆத்மா சாந்தியடைய உதவுங்கள்*** '' என்று கூறியிருக்கிறார்.

**தமிழன் எக்ஸ்பிரஸ் 20.2.2002**

**ஏக்கம் 3**

***லட்சுமி*** (32) சென்னை. கணவரால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டவர். பூ வியாபாரம் செய்து வந்தவர். இவரது கணவர் குடிகாரர். அடிக்கடி குடித்து விட்டு மனைவியைக் கண்டபடி அடித்து உதைப்பார். ஒருநாள் சண்டை முற்றி விட்டது. கணவர் என்ன செய்தார் தெரியுமா? மனைவி மீது மண்ணெண்ணெயை ஊற்றிக் கொளுத்தி விட்டார். எப்படியோ உயிர் தப்பிய லட்சுமி தீக்காயத் தழும்புகளோடு தன் குழந்தைகளுடன் வாழ்ந்து வருகிறார்.

இன்னும் தன்னைக் கொடுமைப்படுத்திய கணவனோடுதான் வாழ்கிறார். ஏன் இன்னும் இக்கணவனோடு வாழ்கிறாய் என்று கேட்டால் என்ன சொல்கிறார் தெரியுமா? ''நாலு குழந்தைகளை யார் காப்பாத்துவாங்க? குழந்தைகளின் எதிர்காலத்தை நினைச்சுத்தான் புருசன் மேலே இருந்த கேசை வாபஸ் வாங்கிட்டேன்.''

**இந்தியா டுடே, சூலை 25, 2001**

**ஏக்கம் 4**

கேரள மாநிலத்தைச் சேர்ந்த முப்பதே வயதான சானு, தனது உறுதி குலையாத போராட்டத்தால் மூன்று லட்சம் ஆதிவாசிகளின் உரிமைகளை நிலை நாட்டியுள்ளார். ஆதிவாசிகள் தங்கள் அறியாமை காரணமாக சொந்த நிலங்களைப் பிறரிடம் பறி கொடுத்து விட்டதுதான் இந்த அவலங்களுக்குக் காரணம் என உணர்ந்த சானு நிலமிழந்த ஆதிவாசி மக்களை ஒன்று திரட்டி சங்கம் அமைத்தார். ஆதிவாசிகளின் நிலத்தை அவர்களிடம் திருப்பிக் கொடு என்ற முழக்கத்தோடு போராடி வெற்றி பெற்றுள்ளார். இப்போராட்டம் மூலம் ஆதிவாசிகள் தாம் இழந்த நிலங்களை மீண்டும் பெற வாய்ப்பு ஏற்பட்டது. சானுவைக் கேரள ஆதிவாசிகள் தங்கள் காவல் தெய்வம் என்று பாராட்டுகின்றனர்.

**ஏக்கம் 5**

காளியம்மாளின் சொந்த ஊர் சென்னை. பணத்துக்கு ஆசைப்பட்ட இவரது அப்பா, தன் வயதிலிருக்கும் ஒருவருக்கு மகளைக் கல்யாணம் கட்டிக் கொடுக்க, போன வேகத்திலேயே அவருடன் வாழப்பிடிக்காமல் பிறந்த வீடு வந்துவிட்டார் காளியம்மாள். வயதான அம்மாவின் சம்பாத்தியத்தில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த அப்பா. திடீரென குடும்பத்தையே தவிக்க விட்டுக் காணாமல் போனார். எல்லாமாகச் சேர்ந்து காளியம்மாளை மன நோயாளியாக்கியது. எங்கே போகிறோம் என்றே தெரியாமல் ரயில் ஏறி சென்னை சென்ட்ரல் ஸ்டேசனில் வந்து இறங்கியவரை மாஜிஸ்ட்ரேட் உத்தரவின்பேரில் மனநோய் மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள். இன்னும் இவர் சென்னை மனநோய் மருத்துவமனையில்தான் இருக்கிறார். மனநோயாளியாக இல்லை. நோய் முற்றிலும் குணமாகிய நிலையில் சராசரிப் பெண்ணாக. ஆனாலும் இவரை மறுபடி அழைத்துக் கொள்ளவோ குடும்பத்தில் சேர்த்துக்கொள்ளவோ உற்றார் உறவினர் யாரும் தயாராக இல்லை. 'நான் இப்ப நார்மலாயிட்டேன். தீபாவளி மாதிரி விசேசங்கள்ல வந்து என்னைப் பார்த்துட்டுப் போற எங்க வீட்டு ஆளுங்களுக்கே தெரியும். ஆனாலும் யாரும் கூப்பிட்டுக்கத் தயாராயில்லை. நான்தான் நல்லாயிட்டேனே. எங்கண்ணன்களுக்குத் தகவல் சொன்னா வந்து கூட்டிட்டுப் போவாங்க. எல்லோரையும் பார்த்து எத்தனை நாளாச்சு. ஏற்பாடு பண்றீங்களா ?'

**5.5.2002 தினகரன் இலவச இணைப்பு**

**குழந்தை** நீங்க வாசிச்சபிறகு ரொம்ப கவலையா இருக்குப்பா. ஒவ்வொருத்தர் வாழ்க்கையிலேயும் எவ்வளவு ஏக்கம் இருக்குண்ணு இப்பத்தான் புரிஞ்சுதுப்பா.

# ஏக்கங்கள் பலவிதம்

உயிர்களுக்கு வாழணும்கிற ஏக்கம் பொதுவானது. என்று பார்த்தோமல்லவா ? இந்த உயிர்களுள் மனிதனுக்கு நிறையவே ஏக்கங்கள் இருக்குன்னு உங்களுக்குத் தெரியும். இவை என்னன்னு கண்டுபிடிப்போமா ?

1) உடல் சார்ந்த ஏக்கம்

நீ உனக்கு காய்ச்சல் வரக்கூடாது, சலதோசம் பிடிக்கக் கூடாது, தலைவலி வரக்கூடாது என்று ஏங்குறேல்ல?

2) பொருளுக்கான ஏக்கம்

எனக்கு என் நண்பனின் சட்டைபோல நல்ல சட்டை வேணும். எனக்கு எல்லா புத்தகங்களும் பள்ளிக்கூடம் திறந்தவுடனே அப்பா அம்மா வாங்கித் தரணும். தினமும் மிட்டாய் வாங்க காசு வேணும்.

**தீண்டாமையை கடைப்பிடிப்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.**
**பிரிவு 17, இந்திய அரசியலமைப்புச் சட்டம், 1950**

3) உறவுக்கான ஏக்கம்

எங்க அம்மா, அப்பா எங்கிட்ட அன்பா இருக்கணும். எங்க வாத்தியாரு எங்கிட்ட நல்லா பேசணும். என் வகுப்புல உள்ள மத்த மாணவர்கள் எங்கிட்ட நல்லா பழகணும்.

4) அறிவுக்கான ஏக்கம்

நிறைய படிக்கணும், நல்லா சொல்லித்தருகிற ஆசிரியர் வேணும். எல்லா வகையான புத்தகங்களும் வேணும். பள்ளிக்கூடத்தில் விளையாட எல்லா வசதியும் இருக்கணும்.

5) படைப்பதற்கான ஏக்கம்

எனக்கு ஓவியம் வரைய ரொம்ப ஆசை. எந்தக் காட்சியைக் கண்டாலும் வரையணும்னு துடிப்பேன். எங்க வீட்ல நான் படம் வரைவதைக் காண்டாலே படிடா படிடான்னு திட்டுவாங்க. எனக்கு எப்போதும் படம் வரையணும்னுதான் ஏக்கமாயிருக்கு.

**அன்பையும் மகிழ்ச்சியையும் தரும் குடும்பச் சூழலில்தான் குழந்தையின் முழு வளர்ச்சி சாத்தியமாகும்.**

**- ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமை மீதான உடன்படிக்கை, முன்னுரை, 1989**

6) உண்மை வாழ்வுக்கான ஏக்கம்.

எங்கூட படிக்கிற பசங்க நிறைய காசு வச்சிருப்பாங்க. எப்படிடா கிடைக்குதுன்னு கேட்டா வீட்ல நோட்டு வாங்கணும், புத்தகம் வாஙகணும்னு பொய் சொல்லி காசு வாங்கினேன்னு சொல்வாங்க. எனக்கு இதெல்லாம் பிடிக்காது. நான் எப்போதும் உண்மைதான் பேசணும்னு ஆசைப் படுவேன். அதே மாதிரி எங்கூட படிக்கிற பையங்க சிலரு மத்தியானம் சாப்பாடுகூட கொண்டு வருவதில்லை. ஏன்னு கேட்டா வீட்ல கஷ்டமாம். இதைப் பார்க்கும்போது ரொம்ப கஷ்டமாக இருக்கு. ஒருவர் சாப்பிடறது இன்னொருவர் பட்டினி கிடப்பது ஏன்? ஏன் இவனுக்கு சாப்பாடு இல்லை? இரண்டு பேரும் சமமாக வாழணும்னு எனக்கு ஏக்கமா இருக்கு.

7) ஆன்மீக ஏக்கம்

எனக்கு கடவுள் பக்தி அதிகம். ஆனால் கடவுளை நம்புற மதங்களை வைத்து கலவரம், வெட்டு, குத்துன்னு ஏன் நடக்குது? எனக்குப் புரியவேயில்லை. எல்லா மதங்களும் சமாதானமா இருக்கணும்னு ரொம்ப ஏங்குறேன்.

8) சமூக அந்தஸ்துக்கான ஏக்கம்

என் தந்தை கழிவறை சுத்தம் செய்யும் பணியைச் செய்றார். நான் எட்டாம் வகுப்பு வரை படித்தேன். அதற்குப் பிறகு வசதியில்லாமையால் படிப்பை நிறுத்தி விட்டேன். ஆனால், தொடர்ந்து படிக்க வேண்டும் என்கிற ஆசை இருந்தது. அதுமட்டுமல்ல. ஒரு டாக்டராக வேண்டும் என்றுகூட ஆசைப்பட்டேன். முடியவில்லை. அடுத்த பிறவியிலாவது எனது கனவு நனவாகாதா என்று ஏங்குகிறேன். இது 14 வயது சுகுணாவின் ஏக்கம்.

9) சுதந்திரத்திற்கான ஏக்கம்

என் பெயர் மீரா. நான் ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறேன். என் தம்பி எட்டாம் வகுப்பில் படிக்கிறான்.

ஒவ்வொரு நாளும் மாலையில் என்னுடைய தம்பி தெருவிலுள்ள நண்பர்களோடு ஓடியாடி விளையாடுவான்.

ஆனால், என்னை மட்டும் தெருவில் விளையாடப் போகக் கூடாது. வீட்டிலேயே இருக்க வேண்டும் என்று என் அம்மா கட்டுப்படுத்துகிறார்கள். எனவே, வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்கிறேன். என் தம்பியைப் போல நானும் சுதந்திரமாக என் தோழிகளோடு வெளியில் சென்று விளையாட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது.

## ஆசிரியர் வழிகாட்டும் பயிற்சி

**இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள வகுப்புப் பயிற்சிகள் அனைத்தும் ஆசிரியர் வழிகாட்டுதலில் அமைதல் வேண்டும்.**

### வகுப்புப் பயிற்சி

1. அ) இப்ப பலவகை மக்களின் ஏக்கங்களைப் படிச்சிங்கள்ள? இவற்றைப் படித்தவுடன் உங்கள் மனதில் ஏற்பட்ட உணர்வுகள் எவை?

   1. கவலை 2. வியப்பு 3. மகிழ்ச்சி 4. ஒன்றுமில்லை

   ஆ) இவர்களின் வாழ்க்கையில் இவர்கள் இழந்த உரிமைகள் யாவை?

   - சங்கீதா இழந்த உரிமைகள்
   - முதியவர் இழந்த உரிமைகள்
   - லட்சுமி இழந்த உரிமைகள்
   - காளியம்மாள் இழந்த உரிமைகள்

   இ) இந்த ஏக்கங்களில் சானுவின் ஏக்கம் எப்படி வேறுபடுகிறது?

   ஈ) இவர்களின் பல்வேறுபட்ட நிறைவுபெறாத ஏக்கங்களுக்கு என்ன காரணம்?

2. அ) உன் அப்பா எதுக்காக வேலைக்குப் போகிறார் என்பதற்கான காரணத்தை எழுதி வகுப்பில் வாசித்துக் காட்டுக.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

ஆ) உன் பெற்றோர் உன்னைப் படிக்க வைக்கிறாங்க. அதுக்கு என்ன காரணம் என்று எழுதி வகுப்பில் பகிர்ந்து கொள்க

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

**வன்முறைக்கு உள்ளாகாமல் சமாதானத்துடன் வாழ அனைவர்க்கும் உரிமையுண்டு.**

**- ஆசிய மனித உரிமைகள் மக்கள் சாசனம் 1988**

இ) எதற்காக ஆசிரியர் உனக்குப் பாடம் கற்றுக் கொடுக்கிறார்? இதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதை எழுதிக் கருத்துப்பரிமாற்றம் செய்க.

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

3) கிணற்றின் அருகே விளையாடிக் கொண்டிருந்த ஒரு குழந்தை திடீரென்று தடுமாறிக் கிணற்றின் உள்ளே விழுந்துவிடுகிறது. இதை நீ பார்க்க நேரிடுகிறது. ஆனால் உனக்கு நீச்சல் தெரியாது. என்ன செய்வாய்? ஏன்?

(அ) மாணவர்கள் வகுப்பில் பகிர்ந்து கொள்க.

(ஆ) இறுதியில் ஆசிரியர் தனது கருத்தைத் தொகுத்து வழங்குவார்.

4. வீட்டிலுள்ள கோழி அல்லது வீட்டு விலங்குகள் ஏதாவது ஒன்றை நீயோ அல்லது வேறு யாருமோ இறுக்கமாகப் பிடித்து வைத்திருக்கும்போது அதன் உணர்வு என்னவாக இருக்கக்கூடும் என்பதை (அ) வகுப்பில் பகிர்ந்து கொள்க (ஆ) இறுதியில் ஆசிரியர் தனது கருத்தைத் தொகுத்து வழங்குவார்.

5. இந்தப்பாடத்தின் தலைப்பை மனதில் கொண்டு (அ) உனக்கு மிகவும் பிடித்தமான ஏதாவது ஒரு உயிரினத்துடன் (நுண்ணுயிரி, ஊர்வன, பறப்பன, நடப்பன, தாவரம், மரம், பிற) கற்பனைப்பேட்டி ஒன்றை எழுதவும். (ஆ) இதனை வகுப்பில் பகிர்ந்து கொள்க.

6) அண்மையில் நிறைவு பெற்ற உனது ஏக்கங்களையும், நிறைவு பெறாத ஏக்கங்களையும் ஒரு தாளில் தனியாக தலைப்பிட்டு எழுதுக.

| **நிறைவு பெற்ற ஏக்கம்** | **நிறைவு பெறா ஏக்கம்** |
|---|---|
| | |

**தமிழ்நாட்டில் மொத்தம் ஏழு லட்சம் ஆதிவாசிகள் இருக்காங்க. அதில் முப்பத்தெட்டு சதவீதம் பேர் நிலம் இல்லாதவங்க.**

**குமுதம் ரிப்போர்டர், 25.10.2001**

7) ஒவ்வொருவரும் துண்டுத்தாள் ஒன்றில் உங்கள் மனதில் பொதுவாக எழக்கூடிய பல வகையான ஏக்கங்களில் முக்கியமான இரண்டை மட்டும் எழுதுங்கள். அதை வகுப்பாசிரியரின் மேசையில் பெயரை எழுதாமல் வையுங்கள். மாணவர் ஒருவர் அதை வாசிக்க மற்றொருவர் அதைக் கரும்பலகையில் எழுத வேண்டும். பிறகு வகுப்பாசிரியர் அதனைத் தொகுக்க வேண்டும். இறுதியில் ஆசிரியர் மாணவர்களிடம் கேள்வி கேட்டு கலந்துரையாடல் நடத்தி, தமது ஒட்டு மொத்தமான சிந்தனைகளைப் பகிர்ந்தளிப்பார்.

8) இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள உயிர்த்துடிப்பு என்ற கவிதையை வகுப்பில் ஒரு மாணவன் உரத்த குரலில் படிக்க மற்ற மாணவர்கள் திருப்பிச் சொல்லவும். படித்து முடித்தபிறகு கவிதையில் சொல்லப்படும் பல்வேறு உயிரினங்களின் ஏக்கங்களைக் கரும்பலகையில் வரிசைப் படுத்துக.

***வீட்டுப் பயிற்சி***

**9.** உன் வீட்டிற்கு அருகில் உள்ள உன்னுடைய நண்பர்/ தோழி, ஒரு பெரியவர் இவர்களைச் சந்தித்து அவர்களின் மூன்று ஏக்கங்களை மட்டும் கேட்டறிந்து வகுப்பில் பகிர்ந்து கொள். அதை ஆசிரியர் கரும்பலகையில் எழுதி வகைப்படுத்தித் தொகுத்து விளக்கம் தரவேண்டும்.

| ஏக்கங்கள் | தோழர் | தோழி | முதியவர் |
|---|---|---|---|
| **ஏக்கம் 1** | | | |
| **ஏக்கம் 2** | | | |
| **ஏக்கம் 3** | | | |

# உயிர்த்துடிப்புகள்

தங்கையரே, தம்பிகளே

எங்கு நோக்கினும்
துடிப்புகளே - உயிர்த்துடிப்புகளே

மரத்தை வெட்டிப் பாருங்கள்;
துளிர் விடும்.

ரோசா செடியைத் தரித்துவிடுங்கள்;
தளிர் அரும்பும்

வண்ணத்துப் பூச்சியைப் பிடியுங்கள்.
படபடவென்று இறக்கைகளை அசைக்கும்
அதனை விட்டுப்பாருங்கள்;
ஆனந்தம் பொங்க பறந்து செல்லும்.

ஆயிரங்கால் பூச்சியைத் தொட்டுப் பாருங்கள்
சுருங்கி விடும்;
நீங்கள் அதனை விட்டு அகன்று போனால்
நீண்டு நெளிந்து தன் பயணத்தைத் தொடரும்.

ஊர்ந்து செல்லும் நத்தையைத் தீண்டிப் பாருங்கள்;
தன் உயிருக்கு ஆபத்து  வந்துவிட்டதே என்று
தலையை ஓட்டுக்குள்  இழுத்துக்கொள்ளும்;
ஆபத்து நீங்கியவுடன் அமைதிப் பயணத்தைத் தொடரும்.

கல்லடிபட்ட நாய் 'லொள்' என்று கத்துகிறது.;
தன் உயிருக்குப் பாதிப்பு ஏற்பட்டு விட்டதாம்.

குழந்தை அழுகிறது;
பசியைப் போக்கி, உயிரைக் காக்க
பால் வேண்டுமாம்

பிரம்பைக் காணும் மாணவர் கண் கலங்குவர்
உடம்பு வதைபட்டால் உயிர் புண்ணாகுமே.

நாடித்துடிப்பை எண்ணிப் பார்ப்பர் மருத்துவர்
வாடிப்போன உயிரின் ஓட்டத்தை அளந்து பார்க்க.

எங்கு நோக்கினும் துடிப்புகளே! உயிர்த்துடிப்புகளே!
வாழ்வுக்கான ஏக்கங்களே!

தம்பிகளே, தங்கைகளே,
உயிரினங்களை வாழ வைப்போம்.
வாழ்வுக்கான ஏக்கங்களுக்கு வடிகால் அமைப்போம்
ஆயிரம் பூக்களை மலர வைப்போம்.
ஆயிரமாயிரம் உயிர் நெஞ்சங்கள்
உங்களை ஓயாது வாயார வாழ்த்தட்டும்.

# 2. சமூக வாழ்வு

தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர் பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். அவர் நிறைய சினிமாவில் நடித்திருக்கிறார். அவர் நடித்த ஒரு திரைப்படத்தின் பெயர் அடிமைப் பெண். இந்தப் படத்தில் எம்.ஜி.ஆர். ஒரு அரசனின் மகன். இவரின் அப்பா மேலே பொறாமை கொண்ட வில்லன் என்ன செய்தான் தெரியுமா ? அரசனைக் கொன்று விட்டு மன்னனின் பச்சிளங் குழந்தையை சிறையில் வச்சிட்டான்.

அக்குழந்தையை யாருமே இல்லாத ஒரு தனியறையில் அடைச்சு வைத்திருந்தான். சில காலம் கழித்து அக்குழந்தை பெரியவனானபிறகு விடுதலை செய்யப்பட்டு வெளியே வந்தான். வெளியே வந்தவுடன் என்ன நடந்தது ? அவனுக்குப் பேசத் தெரியவில்லை; நம்மைப்போல நிமிர்ந்து நடக்கக்கூட முடியவில்லை. கூனலாகவே இருந்தான். எனவே ஒருத்தரோடும் பழகத் தெரியவில்லை. மலங்க மலங்க விழிக்கிறான். நாம எதிர்பார்க்கிற அறிவு இல்லை. ஆட்களைப் பார்க்கிறபோது வியப்போடு பார்க்கிறான். கொஞ்ச காலத்திற்குப் பிறகு, பையப் பைய மக்களோடு வாழத்தொடங்கிய பிறகுதான் மொழியைக் கற்கிறான். ஆட்களை அடையாளம் கண்டு பழகத்தொடங்கினான்.

இந்தக் கதை மூலம் நாம் தெரிந்து கொண்டது என்ன ?

அடிமைப்பெண் படத்தில் வருகிற அக்குழந்தை நம்மைப்போல ஒரு குடும்பத்தில்–தான் பிறந்தான். ஆனால் அக்குழந்தை நம்மைப் போல் அம்மா, அப்பாவோடு ஒரு குடும்பத்துல வாழறதுக்கு வாய்ப்புக் கிடைக்கலை. பெற்றோரை மட்டுமல்ல. சமூகத்தையே பிரிந்து தனியா ஆளில்லா இடத்தில் அடைக்கப்பட்டிருந்தான். அதனால என்ன நடந்தது ? பேசத் தெரியலை. அடையாளம் காணத் தெரியலை. அறிவும் இல்லை.

ஆக மனிதன் சமூகத்தில் பிறக்கிறான் என்பது உண்மை. சமூகத்தில் வாழ்கிறபோதுதான் உண்மையான அறிவு பெற்ற மனிதனாகிறான். அப்பத்தான் அவனுக்குப் பேசத் தெரியுது. சமூகத்தில்தான் அவன் அம்மா, அப்பா, மற்ற

உறவினர்களோடு உறவு கொள்கிறான். தனியாக வாழ்ந்தால் அவன் மனிதனாகவே இருக்கமாட்டான். அதனால்தான் மனிதர்களை நாம் சமூகப்பிராணின்னு சொல்றோம்.

நம்ம ஊர்ல பிறந்த குழந்தையை பிறந்தவுடனே இன்னொரு நாட்டுக்காரங்க தத்தெடுத்து அவங்க நாட்டுக்குக் கொண்டு போய் வளர்க்கிறாங்ண்ணு வச்சுக்குங்க. அந்தக் குழந்தை தமிழ்ல பேசுமா அல்லது எந்த நாட்டில் வளர்றதோ அந்த நாட்டு மொழியைப்பேசுமா ? நிச்சயமா அவங்க நாட்டு மொழியைத்தான் பேசும். அந்த நாட்டு பழக்கவழக்கங்களைத்தான் கடைபிடிக்கும். இதுதான் மனித இயல்பு. எந்தச் சமூகத்தில வாழ்கிறானோ அந்தச் சமூக இயல்புதான் மனுசனோட இயல்பாக மாறும்.

சமூகம் என்பது மனிதர்களை உள்ளடக்கியது. மனுசங்க இல்லைன்னா சமூகமே இல்லை. இந்த மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் உறவு கொள்பவர்கள். குடும்பத்தில் பிறக்கிறோம். அப்பா, அம்மா, தம்பி, தங்கை, அண்ணன், அக்காள்னு சேர்ந்து வாழ்கிறோம். யாராவது அப்பாவையோ அம்மாவையோ உடன் பிறந்தவர்களையோ குறை சொன்னா உடனே கோபப்படுகிறோம். அவங்களுக்கு யாராவது தீங்கு செய்தா நாம பொறுக்கமாட்டோம். குடும்பத்தில் பிறக்கிற நாம் குடும்ப உறுப்பினர்களிடம் மட்டுமா உறவு கொள்கிறோம் ? குடும்ப உறவு, ஊர் மக்களிடம் கொள்கிற உறவாக மாறுகிறது. அப்படியே நாடு என்று விரிகிறது. இந்த உறவு இயற்கையானது. நம் குடும்ப உறுப்பினர்களுக்கு தீங்கு வந்தால் கோபப் படுவோம். நம்ம ஊரைப்பற்றி யாராவது குறை சொன்னாலும் கோபப்படுவோம். வெளிநாட்டுக்காரன் நமது நாட்டைக் குறை சொன்னால் உடனே பொங்கியெழுவோம்.

நாமெல்லாம் கிரிக்கெட் பார்ப்போம்ல, நம்ம நாடும் வேறொரு நாடும் விளையாடும்போது நாமதான் செயிக்கணும்னு ஏன் ஆசைப் படுகிறோம் ? வெற்றி பெற்றால் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறோம். தோற்றால் எவ்வளவு கவலைப் படுகிறோம். விளையாடுகிற விளையாட்டு வீரர்கள் நம் குடும்பக்காரர்களா ? இல்லையே. பின் ஏன் கவலைப்படுகிறோம் ?

**இதைத்தான் கண்ணுக்குத் தெரியாத உறவு என்கிறோம்.**

மிருகங்களை எடுத்துக்கங்க. அவைகளெல்லாம் காட்டுல வாழ்கின்றன. கூட்டங்கூட்டமாக வாழ்கின்றன. காட்டுல வாழ்கிற மான்களைப்பாரு. சேர்ந்தே இருக்கும்; சேர்ந்தே மேயும். யாரோ ஒரு வேடன் வந்து ஒரு மானைக் கொன்னுட்டான்னு வச்சுக்கங்க. மான்கள் என்ன செய்யும்? எங்க கூட்டத்தில் உள்ள மானைக் கொன்னுட்டியா என்று கோபப்படுமா? வேடனை எதிர்க்க எல்லாம் சேர்ந்து நிற்குமா? ஒரு மான் இறந்ததும் எல்லா மானும் நாலு கால் பாய்ச்சல்ல ஓடுறதைப் பார்க்கிறோம்ல. ஒரு ஊர்ல போய் வேறு ஊர்க்காரன் அவ்வூர்ல உள்ள ஒருவனை அடிச்சான்னா அவ்வூர் மக்கள் என்ன செய்வாங்க? ஒன்று சேர்ந்து எதிர்ப்பாங்க. மான் கூட்டமாத்தான் வாழுது. ஆனா அவைகளிடம் கூட்டுணர்வு இல்லை. உறவு இல்லை. மனிதன் கூட்டமாக வாழ்வதைத்தான் சமூகமாக வாழ்வதாகச் சொல்கிறோம். ஏன்னா இங்கே உறவு இருக்கும். பகிர்தல் இருக்கும். இன்ப துன்பங்களில் பங்கு கொள்வாங்க. ஆகவேதான் மனிதர்களை சமூகத்தில் பிறந்து சமூகத்தில் வாழ்ந்து சமூகத்தில் மடிவதாகச் சொல்கிறோம்.

**வகுப்புப் பயிற்சி**

1) உங்க ஊரிலிருந்து நிரந்தரமாகப் பிரிந்து வேறு ஊர்ல வாழ்கிறாய் என்ற வைத்துக்கொள்வோம். உன் உணர்வுகள் எப்படியிருச்கும்?

2) உங்களில் சிலர் உங்கள் குடும்பத்தை விட்டுப் பிரிந்து விடுதியில் இருப்பீர்கள். உங்கள் உணர்வு எப்படியிருக்கும்?

***மனுக்குலம் பிரிக்கவியலா, பிளவுபடா ஒரு குடும்பமாகும். இக்குடும்பத்தில் யார் தவறு செய்தாலும் அத்தவறுக்கு அக்குடும்பத்தின் பிற உறுப்பினர்களும் பொறுப்பானவர்களே.***

***- மகாத்மா காந்தி***

3) பெற்றோரில்லாத குழந்தையின் மனநிலை எப்படி இருக்கும் என்பதை உணர்ந்து எழுதுக.

4) உன்னை இரு நாட்கள் ஓர் அறையில் அடைத்து வைத்து, நீ யாரிடமும் பேசக்கூடாது, யாரும் உன்னைச் சந்திக்கக் கூடாது என்றால் (அ) நீ எப்படி உணர்வாய்? (ஆ) ஏன் இப்படி உணர்வாய்? (இ) இதிலிருந்து நீ கற்றுக் கொள்ளும் உண்மை என்ன?

5) சமூகப் பிராணியாகிய மனிதர்களில் சிலர் சமூகத்தோடு ஒட்டி வாழ மறுப்பதற்குக் காரணங்கள் யாவை?

6) இந்தப் பாடத்தைப் படிச்ச பிறகு, நீ சமூகத்தோடு ஒத்து வாழணும்னு நினைக்கிறாயா? ஆம் என்றால், ஏன் என்பதற்கான காரணங்கள் யாவை?

**மனிதர்கள் நம் உடலுறுப்புக்களை ஒத்தவர்கள். உடலுறுப்புகளில் ஒரு பகுதி பாதிக்கப்படுகின்றபோது, ஏனைய உறுப்புகள் எப்படிப் பாதிக்கப்படடுகின்றனவோ, ஏனைய உறுப்புகள் எப்படி சும்மா இருக்காதோ அப்படியேதான் சமூகம் என்னும் உடலின் ஒரு ஆள் பாதிக்கப்படுகின்றபோது இன்னொரு ஆள் சும்மா இருக்க முடியாது.**

புறநானூற்றில் ஒரு பாடல். ஒருவன் கேட்கிறான் நம்மூர்ல நிறைய சாதிகள் இருக்கின்றன இனங்கள் இருக்கின்றன போட்டியும், பொறாமையும் இருக்கின்றன ஏழை பணக்காரங்க இருக்கிறாங்க. இவ்வளவு பிரிவுகள் இருந்த பிறகும் இந்த உலகம் அப்படியே இருக்கிறதே இன்னும் ஏன் அழியாம இருக்கு அப்படின்னு கேட்டான். புறநானூற்றுப் புலவர் சொன்னார் ஆம், உன் கேள்வி சரிதான். இக்கேள்வியில நிறைய உண்மை இருக்கு. இவ்வளவு பிரிவுகளும், தீமைகளும் இருந்தாலும் இன்னும் இவ்வுலகம் இருக்க என்ன காரணம் தெரியுமா ?

***“தனக்கு தனக்கு என்று வாழாம,<br>பிறர்க்காக வாழ்கிற மனிதர்கள் இன்னும் உலகத்துல<br>இருக்கிறதுனாலதான்” அப்படின்னார்.***

***வீட்டுப்பயிற்சி***

1. (அ) மனிதர் ஒரு சமூகப் பிராணி எனச் சித்திரிக்கும் ஓவியம் ஒன்றை வரைந்து கொண்டு வா.

(ஆ) மறுநாள் இந்த ஓவியங்களை ஆசிரியரிடம் கொடுக்கவும்.

(இ ) இவைகளை எல்லோருடைய பார்வைக்காக வைக்கவும்.

(ஈ) தனது ஓவியத்தைத் தவிர வேறு ஏதாவது ஒரு ஓவியத்தை மாணவர் ஒவ்வொருவரும் தேர்வு செய்து இந்தப் பாடத்தையொட்டி அந்த ஓவியம் தரும் கருத்தை வகுப்பில் பகிர்ந்து கொள்க.

(உ) இறுதியாக ஆசிரியர் தமது ஒட்டு மொத்தமான சிந்தனைகளை மாணவர்களிடம் பகிர்ந்து கொள்ளவும்.

**ஒரு மனிதன் இன்னொரு மனிதனை பாகுபாடு காட்டாமல் மதிக்க வேண்டும்.**

**(பிரிவு 28, மனித உரிமைகள் மற்றும் மக்கள் உரிமைகளுக்கான ஆப்பிரிக்க சாசனம், 1981)**

# 3. பன்மைச் சமூகம்

***ஆசிரியை:***

மாணவர்களே!

இன்று நாம் இவ்வகுப்பில் நம் தாய்த்திருநாடாம் இந்தியாவைப் பற்றிப் படிக்கப் போறோம். நாமெல்லாம் இந்த நாட்டின் பிள்ளைகள் என்று சொல்கிறோம். நம்ம நாட்டைப் பற்றி நமக்கெல்லாம் என்ன தெரியும்னு உங்களைச் சோதிக்கப் போகிறேன். நீங்க ஒவ்வொருவரும் ஒவ்வொருவராக எழுந்து நின்று நம் நாட்டைப் பற்றிய ஒரு கருத்துச் சொல்லணும் ! என்ன **?**

***மாணவர்கள்***: சரிங்கம்மா !

***ஆசிரியை***: சொல்லுங்க !

***மாணவன் 1***: இந்தியா பழம் பெரும் நாடு.

***மாணவன் 2***: இந்தியா பெரிய நாடு

***மாணவன் 3***: காந்தி பிறந்த நாடு

***மாணவன் 4***: இந்தியா ஒரு துணைக்கண்டம்.

***மாணவன் 5***: இந்தியாவின் தலைநகர் டெல்லி.

***மாணவன் 6***: இந்தியாவில் பல மொழிகள் பேசப்படுகின்றன.

***மாணவன் 7***: இங்கு பல இனத்தவர் வாழுகின்றனர்.

***மாணவன் 8***: இங்கு பல மதங்கள் இருக்கின்றன.

***ஆசிரியை*** : பிரமாதம். வேறு ஏதாவது உண்டா **?**

***மாணவன் 9***: இங்கு பல மாதிரி பழக்க வழக்கங்கள் இருக்கின்றன.

***மாணவன் 10***: நாம் ஒற்றுமையாக இருக்கிறோம்.

***ஆசிரியை*** : எல்லோரும் நல்லா சொன்னீங்க. ஒரு கேள்வி கேட்கலாம்னு நினைக்கிறேன். சில மாணவர்கள், இந்நாட்டில் பல மொழி பேசுறவங்க இருக்கிறாங்க! பல மதங்கள் இருக்கின்றன. பல இனத்தவர்கள் இருக்கிறாங்கன்னு சொல்றீங்க. ஒரு நாட்டில் இப்படிப்பட்ட பல மொழியும் பல இனமும், பல கலாச்சாரமும் இருப்பதாக சொல்ற நீங்க, நாம **ஒற்றுமையாக** இருக்கிறதா சொல்றீங்க. அது எப்படி சாத்தியமாகும் **?.**

**மாணவர் 1 :** நீங்க சொல்றது சரிதாங்கம்மா! இப்படி பல்வேறு பிரிவுகள் இருப்பது அவ்வளவு நல்லது இல்லைன்னு நான் நினைக்கிறேன். இப்படி இருந்தா சமாதானமே இருக்காது. ஒரே குழப்பமாகத்தானிருக்கும்.

**மாணவர் 2:** ஒரு நாடுண்ணா, ஒரு மொழி, ஒரு இனம், ஒரு கலாச்சாரம் தான் இருக்கனும். அப்பத்தான் ஒற்றுமை இருக்கும்.

**மாணவர் 3 :** அது தப்பு. எங்கள் தோட்டத்தில் எல்லா மலர்களும் உள்ளன. எல்லா மலர்ச் செடிகளும் இருப்பதால் தானே தோட்டம் அழகாயிருக்கு.

**மாணவர் 4 :** ஆனால், எல்லாச் செடிகளும் எண்ணிக்கையில் சமமாக இல்லையே! ஒரு செடி அதிகமாக இருக்கு. இன்னொரு செடி ரொம்ப குறைவா இருக்கு. எல்லாச் செடிகளையும் சமமாகப் பார்க்க முடியுமா?

**ஆசிரியை :** ஒரு வகையான மலர் அதிகமாக இருக்கலாம். சில மலர்கள் குறைவாக இருக்கலாம். ஆனா, எல்லா மலர்களும் சமமாக பராமரிக்கப்பட வேண்டும். குறைவாக இருந்தாலும், நிறைய இருந்தாலும் எல்லா மலர்களுக்கும் உயிருண்டு. ஆகவே, எல்லா மலர்ச்செடிகளுக்கும் வாழ உரிமையுண்டு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதுபோலத்தான் நாட்டிலும், பெரும்பான்மை, சிறுபான்மை என்று பார்க்காமல், உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்று பார்க்காமல், உயர்ந்த மொழி, தாழ்ந்த மொழி என்று பார்க்காமல் நடந்து கொண்டோமானால் நாட்டில் சண்டையே இருக்காது.

**மாணவர் :** சமமாக நடத்தினால் ஒற்றுமை வந்திடுமா?

**ஆசிரியை :** நிச்சயமா. சமமாக நடத்தும் போது பாரபட்சம் இருக்காது. அது மட்டுமல்ல – நம்மிடையே **உள்ள வேற்றுமைகளை இயற்கையானது என ஏற்றுக் கொள்ளணும்.** அவரவர்க்கு அவரவர் சார்ந்த மொழியைப் பேசவும், அவரவர் விரும்பிய சாமியைக் கும்பிடவும் உரிமை உண்டென்பதை ஏற்க வேண்டும். அவரவருக்குரிய தனித்த அடையாளங்களையும் மதிக்க வேண்டும். அப்படிச் செய்தால் குழப்பமே இருக்காது.

**மாணவர்:** இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கம்மா . . .

**ஆசிரியை :** தோட்டத்தில் பல மலர்கள் இருக்கிற மாதிரிதான் நாட்டிலும் பல வகை மனிதர்கள் இருப்பாங்க. எல்லாரும் ஒண்ணாக முடியாது. ஆனா, ஒற்றுமையாக இருக்க வேண்டும். புரிந்ததா?

**மாணவர்:** அப்படின்னா, இந்தியாவின் அழகே, இந்தப் பன்மைத்தன்மையில் தான் இருக்கிறதா ?


**ஆசிரியை :** நிச்சயமாக. இதனால்தான் நம் நாடு ஒரே நாடாக இருந்தாலும், பல மாநிலங்களாகப் பிரிந்திருக்கிறோம். அவரவர் மொழியையும், கலாச்சாரத்தையும் பாதுகாக்க சட்டமே வகுத்திருக்கிறோம்.

**மாணவர்:** நாங்களும் பாதுகாக்க முயற்சி செய்வோம். எங்களுக்குள்ள பிரிவுகளை மதித்து, ஒற்றுமை காக்க முயற்சி செய்வோம்.

**வகுப்புப் பயிற்சி**

1) இந்தப் பாடத்தில் (அ) உனக்குப் பிடித்த மூன்று முக்கியமான கருத்துக்கள் யாவை? (ஆ) ஏன் இவை உனக்குப் பிடித்தவை என்று சொல்கிறாய் ? (இ) வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.

**பிடித்தவை** **காரணம்**



2.1. (அ) பள்ளி வளாகத்திலுள்ள பூச்செடி ஒன்றை வகுப்பிற்குக் கொண்டு வரவும். (ஆ) அந்தப் பூச்செடியில் உள்ள வெவ்வேறு பகுதிகளைப் பார்க்கவும்.

(இ) அந்தப் பகுதிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும் போது என்ன அறிகிறோம்?

(ஈ) எப்படி அவைகள் அனைத்தும் இணைந்து வேலை செய்கின்றன?

**வீட்டுப்பயிற்சி**

2) ஒவ்வொருவரும் தங்கள் வீட்டிலிருந்து ஏதாவது ஒரு மலரைக் கொண்டு வரவேண்டும். கொண்டு வந்த மலர்கள் அனைத்தும் ஆசிரியரின் மேசையிலுள்ள பூச்சாடியில் வைக்க வேண்டும். அந்த மலர்கள் அனைத்தும் நமக்கு என் செய்தியைச் சொல்கின்றன ? பகிர்ந்து கொள்க.

3) உனக்கு எது பிடிக்கும்– பன்மையா அல்லது ஒருமையா ?

(அ) கட்டங்களில் படங்களை வரையவும். (ஆ) கலர் பென்சில்களைப் பயன்படுத்திப் பொருத்தமான நிறங்களை இடவும். (இ) உனக்குப் பிடித்தது பன்மையா அல்லது ஒருமையா என்று கூறவும்.

**1. மலர்**

**பன்மை**

**ரோஜா**
**காமரை**

**மல்லிகை** **அல்லி**

**ஒருமை**

**தாமரை** **தாமரை**

**தாமரை** **தாமரை**

பொம்மை வாங்கக் கடைக்குப் போறீங்க. கடையில் ஒரே வகை பொம்மையைப் பார்த்தீங்களா? பல வகை பொம்மையைப் பார்த்தீங்களா?

பேசும் பொம்மைகள், நடக்கும் பொம்மைகள், பாடும் பொம்மைகள், அப்பப்பா, எத்தனை வகை? இவற்றில் பிடித்தமானதைத் தானே வாங்குவோம்? ஒரே வகை பொம்மை இருந்தால் நாம் விரும்பியதை வாங்க முடியுமா?

ஒரே வகை பொம்மைகள் - ஒருமை
பல்வகை பொம்மைகள் - பன்மை
நீ விரும்புவது ஒருமையா? பன்மையா?

முந்தைய பாட வகுப்புகளில் என்னென்ன பார்த்தோம் என்பதை கொஞ்சம் நினைவுபடுத்திக் கொள்வோம். எல்லோருக்கும் வாழ வேண்டும் என்ற ஏக்கம் இருக்கிறது. இந்த ஏக்கம் தனி மனித ஏக்கங்களாக இருக்கலாம். குழுவாக இணைந்து வாழ வேண்டுமென்ற ஏக்கமாக இருக்கலாம். தனிமனிதர் ஒரு குழுவோடு இணைந்தும், இசைந்தும் வாழ்கிறார். தான் ஒரு குறிப்பிட்ட குழுவைச் சார்ந்தவராக இருந்தாலும் ஏனையக் குழுக்களையும் மதித்தும் இசைந்தும் வாழ்வதையே பன்மைச் சமூகம் என்கிறோம்.

**ஒரே வகை என்பது இயற்கையின் நியதியல்ல ;**
**பலவகை அல்லது பன்மைதான் இயற்கை.**

**கதம்பமாலை பார்த்திருக்கீங்களா?**

எத்தனை வகைப் பூக்கள்?
ஒவ்வொரு பூவும் தனித்தனி நிறம். தனித்தனி குணம்.
எது அதிக அழகு? எது அழகில்லை என்று கணக்கு போடுகிறோமா? இல்லை.
எல்லா மலர்களையும் மதிக்கிறோம்.
அவை இணைஞ்சிருந்தாலும் தனித்தன்மை இழக்காமல் அழகூட்டுவதைப் பாருங்க.

# 4. மனித மாண்பு

அது ஒரு புத்த பெருமானின் சிலை. இச்சிலை களிமண்ணாலானது. அந்தச் சிலையைப் பாதுகாப்பாக வைக்க வேறு இடத்திற்கு எடுத்துப்போனார்கள். போகிற வழியில் பெரிய மழை பெய்யவே, களிமண்ணாலான இச்சிலை கரையத் தொடங்கியது. சிலை கரைவது கண்ட எல்லோரும் கவலைப்பட்டார்கள். அப்போது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. புத்தரின் கண்களும், அதையடுத்து முகம், கை, கால், உடம்பு மொத்தமும் கரைந்து அந்தச் சிலை தங்கமாக மாறி சொலித்தது. தங்கச்சிலையை களவாடிச் சென்று விடுவார்களோ என்றெண்ணி களிமண் சிலை மாதிரி தோற்றமளிக்க முன்னோர் செய்திருந்த ஏற்பாடுதான் அது.

நாம் கூட அந்தச் சிலை மாதிரிதான். நமக்குள் இருக்கும் தங்கப் புத்தரை மறந்து விட்டோம்.

ஆனந்த விகடன், 21.4.2002

## உண்மை நிகழ்வு 1

### கரிக்கட்டையாக்கப்பட்ட மனிதர்கள்

ஏர்வாடியில் 16 மனநலக் காப்பகங்கள் உள்ளன. இங்கு 650 மன நோயாளிகள் தங்கி–யிருந்தனர். இந்த நோயாளிக–ளிடமிருந்து மாதம் தோறும் ரூபாய் 500லிருந்து 1,500 வரை விடுதிக்காப்பாளர்கள் வசூல் செய்கிறார்கள். ஆனால் இங்கோ கழிப்பறை வசதிகள் கிடையாது. பல நாட்கள் ஒரு வேளை உணவு மட்டுமே கொடுப்பார்கள்.

சில நாட்களில் அதுவும் கிடைக்காது. சில வேளை கெட்டுப்போன உணவையே கொடுப்பர். இதனை உண்டு இதுவரை 11 மன நோயாளிகள் இறந்துள்ளனர். இக்கொடுமையுள்ளும் பெரிய கொடுமை என்ன தெரியுமா ? தீ விபத்தில் 28 நோயாளிகள் இறந்த பிறகும் இறந்தவர்களின் இரண்டே இரண்டு குடும்பங்கள்தான் ஏர்வாடிக்கு பார்க்க

வந்தனர். இறந்தவர்களுக்கு அரசாங்கம் ரூ. 50,000 நஷ்ட ஈடு அறிவித்ததும் இந்த எண்ணிக்கை 15 ஆக உயர்ந்தது. ஒரே நபருக்கு இரண்டுக்கும் மேற்பட்டவர்களும் சொந்தம் கொண்டாடினர். விபத்து நடந்து ஒரு வாரத்திற்குப் பின்பும் இது வரை 100க்கும் குறைவான நோயாளிகளைத்தான் அவர்களின் குடுப்பத்தினர் வந்து அழைத்துச் சென்றுள்ளனர். சுமார் 400 மன நோயாளிகளை அழைத்துச் செல்ல யாருமே வரவில்லை. கூட்டிட்டுப் போறவங்களகூட போலீஸ் தொந்தரவு தாங்க முடியாமதான் கூட்டிட்டுப் போறாங்க என்கிறார் ஒரு விடுதிக் காப்பாளர்.

*இந்தியா டுடே, ஆகஸ்ட் 22, 2001.*

**நிகழ்வு 2**

### பொம்மையான ஊராட்சிமன்றத் தலைவர்?

"எங்க கிராமத்தில மூணு டீக்கடை இருக்கு. அங்கே எனக்கு எப்போதும் தனி கிளாஸ்தான். எவர்சில்வர் டம்ளர்தான். ஆனால் அதைத் தனியாத்தான் வச்சிருப்பாங்க. அதில டீயை ஊத்தித் தருவாங்க. குடிச்சிட்டு கழுவி வச்சிட்டு வரணும்.

தேர்தல் அன்னிக்கே என்னைத் தாக்கினாங்க. எப்படியோ நான் தப்பிச்சிட்டேன். தேர்தல்ல செயிச்சேன். ஆனா என்ன பிரயோசனம்? நான் பஞ்சாயத்துத்தலைவராகி 5 வருசமாச்சு. இதுவரை பஞ்சாயத்து அலுவலகத்துக்குப் போய் வேலை பார்க்க விடவே இல்லை. கிராம சபை கூட்டத்தில் நான் சும்மா சடம் மாதிரி இருப்பேன். மத்தவங்க பேசி முடிவெடுப்பாங்க. கடைசியில் நான் கையெழுத்துப் போட்டுட்டு வருவேன். எங்கள் கிராம பஞ்சாயத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் நடந்தது. கலெக்டரெல்லாம் வந்தாங்க. நாந்தான் பணம் கொடுத்து மத்த சாதிக்காரங்க மூலமா சாப்பாடு தயாரிச்சேன். ஆனால் அதில உக்காந்து நான் சாப்பிடலங்க. சாப்பிடவும் முடியாது. கிராமத்திலே என்னையும் சரி என் பிள்ளைகளையும் சரி மத்தவங்க வாடா போடான்னுதான் சொல்வாங்க. நாங்க அவங்களை பேர் சொல்லிக் கூப்பிட முடியாது.

**மனிதனை முழுமையாக்குவது**

***சனநாயகம், சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதி, அடிப்படை உரிமைகள், மாண்பு, மனித மதிப்பு - இவையனைத்தும் உள்ளடக்கியதே மனிதம்.***

*வி.ஆர். கிருஷ்ணய்யர், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி*

எங்க சாதிப் பையங்களோடுகூட மற்ற சாதியைச் சேர்ந்த பையங்க இணக்கமா பழக மாட்டாங்க. செருப்பு போடாம நடக்கிறது, தனி டீ கிளாஸ் இதெல்லாம் அவமானமா இருக்குப்பான்னு எங்கிட்ட சொல்லி பிளஸ் டூ வரை படித்திருந்த என் பையன் சொல்லிக்காமயே ஊரை விட்டு ஓடிப்போயிட்டான். அவனை இன்னும் தேடிக்கிட்டிருக்கேன். 43 வருசமா இந்த அவஸ்தையை அனுபவிச்சிட்டிருக்கேன். எந்த மாற்றமும் இல்லை. மாறும்கிற நம்பிக்கையும் இல்லை. என் பிள்ளைகளை செருப்புப் போடாம டீக்குடிக்காம பழக்கிட்டேன். எங்க அப்பா டீக்கடை பக்கம்கூட போனதில்லை. கௌரவமா இருந்திட்டு செத்துப் போயிட்டார்.''

இப்படிச்சொன்னவர் யார் தெரியுமா ? ஓர் ***ஊராட்சி மன்றத் தலைவர்.***

**குமுதம் ரிப்போர்ட்டர், 14.2.2001**

**நிகழ்வு 3**

## வறுமைக்கு வாழ்க்கையை விற்றவர்கள்

- பத்து வருசமா இந்தப் பகுதியில் இருக்கிறவங்க கிட்னியைத் தானம் கொடுத்திருக்காங்க. இதனால பல பேர் நோயால துடிச்சிக்கிட்டு இருக்காங்க. இவங்கள்ல பெரும்பாலோர் தொழுநோயாளிங்க.

- குடும்பத்தைக் காப்பாற்ற கிட்னியை இழந்த ஆறுமுகம் நோய்வாய்ப்பட, கணவனைக் காப்பாற்ற மனைவி தன் கிட்னியை இழந்தார். ''இன்னொரு உயிருக்காக தன்னோட கிட்னியைக் கொடுத்தார் என் கணவர். இன்று அவர் உயிரோடு இருக்க ஒரு கிட்னியைப் பெற இருபதினாயிரம் தேவைப்படுது. இப்ப நான் எங்க போவேன் ?'' என அழுகிறார் பார்வதி.

- ஒரு மாதத்திற்கு முன்னால் குடும்பத்திற்காக தன் கிட்னியைத் தானம் கொடுத்தார் மேரி. தற்போது கர்ப்பிணியாக இருக்கும் மேரி உடல் நலமில்லாமல் கஷ்டப்படுகிறார்.

**தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது பழங்குடியினர் ஒருவரை பொது இடத்தில் இழிவுபடுத்தும் கருத்துடன் வேண்டுமென்றே அவமானப்படுத்துவது அல்லது அச்சுறுத்துவது சட்டப்படி வன்கொடுமைக் குற்றச் செயலாகும்.**

**(தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989, பிரிவு 3 (X))**

**நிகழ்வு 4**

## தொடரும் தீண்டாமை

ஈரோடு மாவட்டத்தில் ஒரு கிராமம். இங்குள்ள ஆரம்பப்பள்ளியில் சத்துணவு பணியாளராக தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒரு பெண் நியமிக்கப்பட்டார். அவ்வூரிலுள்ள மேல் சாதியினர்க்கு இது பிடிக்கவில்லை. இப்பெண்ணின் வரவைக் கடுமையாக எதிர்த்த இவர்கள் தலைமையாசிரியரிடம் மாற்றச் சொல்லி மனு கொடுத்தனர். தலைமையாசிரியர் மசியவில்லை. எனவே தம் குழந்தைகளுக்கு வீட்டிலிருந்து டிபன் பாக்சில் மதிய உணவைக் கொடுத்து விட்டனர். பல பெற்றோர் டி.சி.யைக் கேட்டு பெரும் ரகளை செய்தனர்.

அங்குள்ள இளைஞர்கள் என்ன சொல்கிறார்கள்? "நாங்க சாதி விசயத்திலே எதையும் விட்டுக்கொடுக்க மாட்டோம். சாதிக்கட்டுமானம் உள்ள ஊர்ல தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த பெண் சத்துணவு ஆக்கிப்போட்டா யாரு சாப்பிடுவாங்க?" அவ்வூர் பெண்கள் என்ன சொல்றாங்க? "எங்களுக்குப் பிடிக்கலை. கவர்ன்மெண்ட் ஆர்டர் போட்டா போடட்டும். அதுக்காக நாங்க வழக்கத்தை மாத்த முடியுமா? அதனால குழந்தைங்க கையில சாப்பாடு கொடுத்து விடுகிறோம். இது தப்பா?"

**குமுதம் ரிப்போர்ட்டர், 13.1.2002**

**நிகழ்வு 5**

## கொத்தடிமைக் குழந்தைகள்

"இந்தக் குழந்தைகள் ஒன்பது வயசிலிருந்தே தறியில் வேலை செய்கின்றனர். அவங்க வேலைக்குச் சேர்ந்ததும் மூவாயிரம் ரூபாய் அட்வான்சா கொடுத்துருவாங்க. அதுவே அடமானம் வெச்ச மாதிரிதான். காலையிலே ஏழு மணியிலிருந்து ராத்திரி வரைக்கும் தொடர்ந்து தறியடிக்கணும். ஐம்பது ரூபாயிலிருந்து அறுபது ரூபாய் வரைதான் சம்பளம் கிடைக்கும். அட்வான்சைத் திருப்பிக் கொடுக்கிறவரை இதிலிருந்து மீள முடியாது. இப்போ செத்துப்போன தமிழரசன்கூட மூவாயிரம் ரூபாய்க்காக அடமானமா வைக்கப்பட்டிருந்தவன்தான். திடீரென்று வேலை செஞ்சிக்கிட்டிருந்த இடத்திலிருந்து நின்னுட்ட கொஞ்சநாளில் இப்படிப் பழி சுமத்தப்பட்டு இறந்து போயிருக்கான். இதே மாதிரி எவ்வளவு குழந்தைகள் அடமானம் வைக்கப்பட்டு காஞ்சிபுரத்தில் கிடக்கிறாங்க தெரியுமா?" என்கிறார் பாதிக்கப்பட்ட ஒருவர்.

**அனைத்து வகைக் கல்வியையும் பெற பூர்வீகக் குடிகளுக்கு உரிமையுண்டு.**

**(ஐக்கிய நாட்டவையின் பூர்வீகக் குடிகளுக்கான உரிமைப் பிரகடனம், பகுதி 4, பிரிவு 15.)**

"ஒரு வருசம் முன்பு அடமானம் வைக்கப்பட்ட சிறுமி கொடுமை தாங்காம தீ வச்சிக்கிட்டு செத்துப் போயிருச்சு. இன்னொரு பெண் குழந்தை கழுத்துக் காயத்தோடு வேலைக்குப் போகுது. அடமானம் வைக்கப்பட்டது மார்கழி மாசம்னா பதினெட்டு மணி நேரத்திற்கு மேலே குழந்தைகள் வேலை பார்த்தாகணும். இந்தக் கொடுமையால் எத்தனை குழந்தைங்க தற்கொலை பண்ணியிருக்காங்க தெரியுமா?"

*குமுதம் ரிப்போர்ட்டர், 18.9.2001*

**இந்த நிகழ்வுகள் மனித மாண்பென்றால் என்ன விலை என்று கேட்கின்றனவா?**

- குழந்தைகள் கொத்தடிமைகளாகும்போது அவர்தம் மாண்பு என்னவாச்சு?
- ஊராட்சிமன்றத் தலைவர் ஏன் ஓர் ஆளாகக் கருதப்படவில்லை?
- மனநோயாளிகள் ஏன் மனிதர்களாக நடத்தப்படவில்லை?
- சத்துணவு தயாரிக்கும் பெண், தாழ்த்தப்பட்டவள் என்பதால், ஏன் சாப்பிட மறுக்க வேண்டும்?
- இவர்கள் பல்வகை மக்களாக இருக்கலாம். ஆனால் இவர்களுக்குள்ள பொதுப் பண்பு எது? அதுதான் மாண்பு. மாண்பு மறுக்கப்பட்டபோது இவர்கள் வாழ்வும் வாழ்வுரிமையும் மறுக்கப்படுகிறது.

> ➢ *மாண்பு மறுப்பு ➔ உரிமை மறுப்பு ➔ மனித மறுப்பு*

## காந்தியடிகளின் அனுபவம்

ஒருமுறை காந்தியடிகள் தென்னாப்பிரிக்கா–வில் இரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார்.அவர் வெள்ளையர்களுக்கு ஒதுக்கப்பட்ட பெட்டியில் அமர்ந்து பயணம் செய்தார். ஓர் இந்தியக் கறுப்பர் எப்படி இந்தப் பெட்டியில் பயணம் செய்யலாம் என்று அவரை இரயிலிலிருந்து குப்புறத் தள்ளி விட்டார்கள். இது அவருக்குப் பெரிய அவமானத்தைத் தந்த அனுபவமாக இருந்தது. அந்த நேரத்தில் தன் மனிதத்தை, மனித மாண்பை வெள்ளையர்கள் துச்சமாக எண்ணித் தூக்கியெறிந்ததாக உணர்ந்தார். காந்தியடிகளின் இந்த அனுபவம்தான் இந்தியர்களின் மாண்பைக் காக்க துணையாக நின்றது.



> ஒருவரது நிறை குறைகள், அவரது குணநலன்கள், பொருளாதார நிலை, அந்தஸ்து போன்றவற்றைக் கொண்டுஅவரது மனிதத் தன்மையை அளவிடாமல், அவர் மனிதராக இருப்பதனாலேயே அவரை மதிப்பதும் ஏற்றுக் கொள்வதும் மனித மாண்பாகும். ஒவ்வொருவருக்கும் மனிதராக மதிக்கப்பட வேண்டும் என்ற ஏக்கம் இருக்கிறது. இந்த ஏக்கத்தின் நோக்கம் நிறைவுபெறும் பொழுது மனித மாண்பு முழுமை அடைகிறது.

## டாக்டர் அம்பேத்கரின் அனுபவம்



டாக்டர் அம்பேத்கர் சிறுவனாக இருந்த போது வகுப்பில் மற்ற மாணவர்களோடு சமமாக உட்கார அனுமதிக்கப்படவில்லை. அவர் கோணிப்பையைத் தரையில் விரித்து தனியாகக் கீழே உட்கார்ந்து பாடம் படித்தார். அவர் ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர் என்பதால் இப்படி நடத்தப்பட்டார். இது அவருக்கு ஒரு பெரிய அவமானத்தை தந்தது. எத்தனையோ தலித் சகோதர சகோதரிகளின் மனிதத் தன்மையும், மனித மாண்பும் இதே போல் சிதைக்கப்படுகிறது என்பதை உணர்ந்தார். இந்த அனுபவம் அவரை தலித் மக்களின் விடுதலைக்காக உழைக்கத் தூண்டியது.

ஒரு மனிதர் தன்மானத்தை இழக்கும் பொழுது, பிறர் அவரை மதிக்காமல் தாழ்வாக நடத்தும் பொழுது மனித மாண்பு சிதைக்கப்படுகிறது. இது உள்ளார்ந்த அளவில் பெரியதொரு பாதிப்பை உருவாக்குகிறது. இதனால் ஒரு சிலருக்கு தாழ்வு மனப்பான்மை ஏற்படுகிறது. இதிலிருந்து மீள முடியாமல் தவிப்பார்கள். காந்தியடிகள், டாக்டர் அம்பேத்கார் போன்றோருக்கு ஏற்பட்ட இந்த மாதிரி பாதிப்பு, இழந்த மனித மாண்பைப் பெறுவதற்கு உந்து சக்தியாக அமைந்தது.

எனவே, ஒரு மனிதர் பிறரால் மதிக்கப்பட வேண்டும். மாண்போடு நடத்தப்பட வேண்டும். இச்சூழ்நிலையில்தான் ஒரு மனிதர் மனிதராக வாழ முடியும். இது நம் எல்லோரிடமும் இருக்கின்ற ஓர் ஆழமான ஏக்கம். மனிதருடைய அனைத்து ஏக்கங்களின் இறுதி நோக்கம், மனித மாண்போடு வாழ்வதே.

### வகுப்புப் பயிற்சி

1) இப்பாடத்தின் முதலில் கட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் நிகழ்வை மாணவர்களைப் படித்து யோசிக்கச் சொல்லவும். படித்துவிட்டு கீழ்க்காணும் கேள்விகளுக்கு விடை சொல்ல வைக்கவும்.

அ) இந்நிகழ்வு தரும் செய்தி என்ன ?

ஆ) மனிதர்களின் புறத்தோற்றம் வேறு. ஆனால் அவர்களிடம் நல்ல பண்புகள் மறைந்திருக்கின்றன. ஏற்றுக்கொள்கிறார்களா ?

**பூர்வீகக் குடி மக்கள் தாங்கள் விரும்பிய பிரதிநிதிகளைத் தேர்வு செய்து அதிகாரத்தில் பங்கு பெறும் உரிமை உண்டு.**
**(ஐக்கிய நாட்டவையின் பூர்வீகக் குடிகளுக்கான உரிமைப் பிரகடனம்,பகுதி 5- பிரிவு 15)**

இ) நமக்குள் நல்ல பண்புகள் இருந்தாலும் சிலையை மறைக்கின்ற சேறு போன்ற தீய பண்புகள் எவை ? (எ.கா.) சாதி வெறி, சமய வெறி, பொறாமை முதலியன.

ஈ) கண்ணால் காணப்பெறும் புறத்தோற்றத்தால் மனிதர்கள் இழக்கும் உரிமைகள் யாவை ?

2 அ) மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து இவ்வுண்மை நிகழ்வுகளைப் படிக்கவும்.

ஆ) படித்தபின்பு ஒவ்வொரு குழுவும் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும்.

இ) இந்நிகழ்வுகளில் சம்பந்தப்பட்வர்கள் இழந்த உரிமைகள் எவை என்பதனைப் பட்டியலிடவும்.

| | **சம்பந்தப்பட்ட நபர்** | **இழந்த உரிமைகள்** |
|---|---|---|
| 1. | மன நோயாளிகள் | |
| 2. | ஊராட்சி மன்றத்தலைவர் | |
| 3. | கிட்னியை இழந்தவர்கள் | |
| 4. | கொத்தடிமைகள் | |
| 5. | சத்துணவு சமைக்கும் பெண் | |

3) இந்தப் பாடத்தில் வரும் இரு பெரிய தேசியத் தலைவர்களின் அனுபவக் குறிப்புகளில் உனக்கு மிகவும் பிடித்த ஒரு வாக்கியத்தை எழுதவும். அதற்குரிய காரணங்களையும் எழுதவும்.

| **பிடித்த வாக்கியம்** | **காரணங்கள்** |
|---|---|
| | |

4) (அ) எந்த அளவுக்கு மனித மாண்பினை கீழே குறிப்பிடப்படுவோர் பெற்றிருக்கின்றனர் அல்லது இழந்திருக்கிறார்கள் என்று உன் அனுபவத்தின் அடிப்படையில் பொருத்தமான ஒரு கட்டத்தில் மட்டும் ([ ) குறியிடவும்.

| என் அனுபவத்தில் நான் கண்ட மனிதர்கள் | என் அனுபவத்தில் இவர்கள் பெற்ற மனித மாண்பின் அளவு | | | |
|---|---|---|---|---|
| | மிக அதிகம் | அதிகம் | குறைவு | மிகக் குறைவு |
| 1. துப்புரவுத் தொழிலாளி | | | | |
| 2. வீட்டு வேலைக்காரி | | | | |
| 3. பிச்சைக்காரர் | | | | |
| 4. சைக்கிள் ரிக்ஷாக்காரர் | | | | |
| 5. படிப்பறிவு இல்லாத ஏழை | | | | |
| 6. பட்டினியால் வாடும் குழந்தை | | | | |
| 7. கூலி விவசாயி | | | | |
| 8. சத்துணவு சமைப்பவர் | | | | |
| 9. வயதானோர் | | | | |
| 10. ஊனமுற்றோர் | | | | |
| 11. குழந்தைத் தொழிலாளி | | | | |
| 12. விதவை | | | | |
| 13. உடல் ஊனமுற்றவர்கள் | | | | |

ஆ) எந்த அளவை கட்டத்தில் அதிகமான குறிகள் இடப்பட்டிருக்கின்றன என்று எண்ணிப் பார்க்கவும்.

இ) எண்ணிக்கைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நீ என்ன தெரிந்து கொள்கிறாய்?

(ஈ) ஒவ்வொரு கட்டத்திலும் நீ குறியிட்டதற்குக் காரணம் கூறவும்.

5.கீழேயுள்ள பட்டியலில் எந்தச் செயல்கள் மனித மாண்பை வளப்படுத்தும் என்று கூறவும். சரி என்றால் [ , சரியில்லை என்றால் ◈ ஆகிய குறிகளை இடவும். உன் பதிலுக்குரிய காரணத்தைக் கூறவும்.

| ***செயல்கள்*** | ***சரி*** | ***சரியில்லை*** | ***காரணம்*** |
|---|---|---|---|
| 1. மற்றவர்களை இகழ்ந்து பேசுதல் | | | |
| 2. பிறரைச் சமமாக நடத்துதல் | | | |
| 3. மருமகளை மாமியார் அடித்தல் | | | |
| 4. அன்பாகப் பேசுதல் | | | |
| 5. குறைந்த சம்பளம் கொடுத்தல் | | | |
| 6. பெண்ணுக்குச் சமஉரிமை அளித்தல் | | | |
| 7. பயங்காட்டி அடக்குதல் | | | |
| 8. வரதட்சணை வாங்குதல் | | | |
| 9. லஞ்சம் வாங்குதல் | | | |
| 10. உயிரினங்களைப் பாதுகாத்தல் | | | |
| 11. ஆபாச சுவரொட்டிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் | | | |

| | | | |
|---|---|---|---|
| 12. பெண்ணை வற்புறுத்தித் திருமணம் செய்து வைத்தல். | | | |
| 13. சிறைக் கைதிகளைத் துன்புறுத்துதல் | | | |
| 14. குழந்தைத் தொழிலை ஒழித்துக் கட்டுதல் | | | |
| 15. ஏழைகளுக்கு மருத்துவ வசதி செய்து கொடுத்தல். | | | |

6. கீழே குறிப்பிடப்படுவோரின் மனித மாண்பைக் காப்பதற்கு நீ கூறும் வழிகள் யாவை?

| **என் அனுபவத்தில் கண்ட மனிதர்கள்** | **மனித மாண்பைக் காக்க நான் கூறும் வழிகள்** |
|---|---|
| 1. துப்புரவுத் தொழிலாளி | |
| 2. வீட்டு வேலைக்காரி | |
| 3. பிச்சைக்காரர் | |
| 4. சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர் | |
| 5. முதியவர் | |
| 6. பட்டினியால் வாடும் குழந்தை | |
| 7. கை வண்டியிழுப்போர் | |
| 8. ஊனமுற்றோர் | |
| 9. கூலி விவசாயி | |
| 10. படிப்பறிவு இல்லாத ஏழை | |
| 11. குழந்தைத் தொழிலாளி | |
| 12. விதவை | |

***வீட்டுப்பயிற்சி***

7. உன் நண்பர் உனது புகைப்படத்தை உன் முன்னாலேயே கிழித்தெறிந்தால், நீ எப்படி உணர்வாய் என்பதை ஐந்து வரிகளில் எழுதிக் காட்டுக.

8.முகக் கண்ணாடி கூறும் செய்தி

(அ) நாள் தோறும் காலையில் கண்ணாடி முன் நின்று உன்னையே நீ அலங்கரிக்கும் போது, இந்தக் கண்ணாடி உன்னிடம் கூறுவது என்ன ?

- உன் அழகை நீ ரசிக்க வேண்டும்
- உன் அழகை நீ மட்டுமல்ல, மற்றவர்களும் புகழ வேண்டும்
- உன் அழகை மட்டுமல்ல, உன் கண்ணியமான தோற்றத்தையும், தன்மானத்தையும் நீயும் மற்றவர்களும் போற்றிப் புகழ வேண்டும்.

***கீழ்க்காணும் மூன்று கருத்துக்களில்,***

(1) இதுவரை உன் அனுபவத்தில் உன் மனதில் அதிகமாகப்பட்ட கருத்து எது ?

(2) உன் வாழ்க்கைக்கு எது முக்கியமான கருத்து என்று நினைக்கிறாய் ? காரணம் என்ன ?

**தங்களின் தனித்த அரசியல், பொருளாதார, கலாச்சார, சமூக அடையாளங்களையும் சட்ட முறைகளையும் பாதுகாத்து போற்றிடும் உரிமை பூர்வீகக் குடிகளுக்குண்டு.**

**(ஐக்கிய நாட்டவையின் பூர்வீகக் குடிகளுக்கான உரிமைப் பிரகடனம், பகுதி 1)**

ஆ) நாள்தோறும் காலையில் கண்ணாடி முன் நின்று தங்களையே அலங்கரிப்பதற்கு வாய்ப்பும், வசதியும் இல்லாத எத்தனையோ ஏழைக் குழந்தைகளுடைய நிலைமை எப்படி இருக்கும்? அவர்களின் தன்மான நிலை எப்படி இருக்கும்? உன் உணர்வுகளையும், கருத்துக்களையும் எழுதிக் கொண்டு வரவும். வகுப்பில் பகிர்ந்து கொள்க.

இ) மனிதர்க்கு மாண்பு, உணர்வு என்பது பொதுவானது. இப் பொதுப்பண்பு ஏன் ஒரு சிலருக்கு மட்டும் சிதைக்கப்படுகிறது? இக்கருத்தை வைத்து ஒரு கட்டுரை அல்லது கவிதை எழுதி வகுப்பிற்கு கொண்டு வந்து பகிர்ந்து கொள்க.

**பெண்களின் மாண்பு பாரீர் !**

**நம் நாட்டில் கொலை செய்யப்படுகிற பெண்களில் பாதிப்பேர் அவர்தம் படுக்கை அறைகளில்தான் கொலை செய்யப்படுகின்றனர். பாலியல் பலாத்தகாரம் 40 விழுக்காடு உயர்ந்துள்ளது. வரதட்சணை மரணம் 15.2 சதவீதம் உயர்ந்துள்ளது. பெண் குழந்தைகளைக் கடத்துதல் 87.2 சதவீதம் உயர்ந்துள்ளது. இப்பெண்களுக்கு அவர்கள் உருவாகும் தாயின் கருவறைகூட பாதுகாப்பான இடமாக இல்லை. திரௌபதி கௌரவரால் துகிலுரியப்பட்ட நிகழ்ச்சி இன்னும் எல்லா இடங்களிலும் நடைபெற்று வருகிறது. "எல்லா பஞ்சாயத்துகளிலும் திரௌபதி துகிலுரியப்படுகிறாள்" என்ற பிரதமர் வாஜ்பாயின் கவிதையை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பெண்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் மாண்புகளை மறுத்தல், சனநாயக மறுப்பு என்பவைகளைப் புரிந்து கொள்வோம்.**

**குடியரசுத்தலைவர் திரு கே. ஆர். நாராயணன்**

**25 சனவரி 2002, குடியரசு தின உரை**

***மனிதத் தன்மையின் முழுமையைத்தான் மனித மாண்பு என்கிறோம்.***

**தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது பழங்குடியினர் ஒருவரை, அவரது வீட்டையோ, ஊரையோ, அவர் குடியிருக்கும் இடத்தையோ விட்டு அகலுமாறு கட்டாயப்படுத்தினால் சட்டப்படி வன்கொடுமைக் குற்றச் செயலாகும்.**

**(தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989, பிரிவு 3 (XV) )**

# 5. முன் தீர்மானம்

**நிகழ்வு 1**

துரை மதுரையில் வங்கியொன்றில் வேலை செய்கிறார். அவர் மதுரையில் தனக்கென ஒரு வீடு கட்ட விரும்பி நிலம் வாங்கினார். வாங்கிய நிலத்தில் வீடு கட்ட எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து விட்டார். ஒரு நாள் தன் மனைவியை அழைத்து வந்து வீடு கட்டும் இடத்தைக் காட்டினார். இடம், வீட்டுத்திட்டம் எல்லாவற்றிலும் அவர் மனைவிக்கு ரொம்ப மகிழ்ச்சி. மகிழ்ச்சியோடு இடத்தைப் பார்த்து விட்டுத் திரும்பி வரும் வழியில் கணவன் மனைவியிடையே நடந்த உரையாடல் இது.

**மனைவி** : ஏங்க ! நம்ம நிலத்துக்கு பக்கத்து நிலத்துல வீடு கட்டுறது யாருங்க ?

**கணவர்** : ஏன் கேட்கிற ?

**மனைவி** : ஏங்க, எத்தனையோ வருஷமா பக்கத்துல, சேர்ந்து வாழப் போறோம். யாருன்னு தெரிய வேண்டாமா ?

**கணவர்** : அவரு நம்ம ஊரல்ல. வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவரு.

**மனைவி** : நம்ம சாதியா ?

**கணவர்** : இல்லை ! வேறு சாதிதான்.

**மனைவி** : நம்ம மதமா ?

**கணவர்** : அதுவும் இல்ல.

**மனைவி** : ஐயோ ! நமக்கு இந்த வீடே வேண்டாங்க.

**கணவர்** : (கோபத்துடன்) விளையாடுறியா ? லோன் வாங்கி நிலம் வாங்கியிருக்கோம். இப்போ வீட்டுக்கும் லோன் கூட கிடைக்கப் போவுது. இப்ப வேண்டாங்கிறியே. கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்தீயா ?

**மனைவி** : யோசிச்சதுனாலதான் சொல்றேன். தயவுசெய்து வேண்டாங்க.

**கணவர்** : காரணத்தைச் சொல்லு.

**மனைவி** : இங்க பாருங்க. நீங்க காலைல ஆபீசுக்குப் போனா சாயங்காலம் தான் வருவீங்க. நான் தான் வீட்டில் இருக்கப் போறேன். அதனாலே வீட்டு விசயத்தில மட்டும் தலையிடாதீங்க. நான் முக்கியமா ? வீடு முக்கியமா ?

**கணவர்** : எனக்கு நம்ம குடும்ப சந்தோஷம் தான் முக்கியம். இப்ப ஏன் வேண்டாங்கிறதைச் சொல்லு.

**மனைவி** : பொதுவா இந்த மதத்துக்காரங்க நமக்கு ஒத்துப் போகாதுங்க. அவங்க நல்லவங்க இல்லைன்னு எல்லோரும் சொல்றாங்க. கொஞ்சம் முரட்டுக் குணம் உள்ளவங்க. நல்லா பழக மாட்டாங்க. விட்டுக் கொடுத்துப் போக மாட்டாங்க. ரொம்ப பொறாமைப்படுவாங்க. கோபக்காரங்க. அதுல சாதியும் வேறெங்கிறீங்க. எனக்குப் பயமாயிருக்குங்க.

**கணவர்** : போதும் போதும் நிறுத்து. இதெல்லாம் வெறுங் கற்பனை. அவங்களைப் பார்த்திருக்கியா ? பேசியிருக்கியா ? பழகியிருக்கியா ? நாம சரியாயிருந்தா எல்லாரும் சரியாயிருப்பாங்க.

**மனைவி** : பேசல, பார்க்கல, உண்மை தான். ஆனா எல்லோரும் சொல்றாங்களே. சினிமாவில, டி.வியில வந்த கதைகளில், பத்திரிகைகளில் அப்படித்தானே சொல்றாங்க. தயவுசெய்து வேண்டாங்க பயமாயிருக்கு.

இந்நிகழ்வின் மூலம் நாம் அறியும் உண்மை என்ன ? ஒரு குறிப்பிட்ட சாதியினர் பற்றி, மதங்களைச் சார்ந்தவர் பற்றி இப்படி ஏன் முடிவு செய்கிறோம் ?

முன் தீர்மானக் கருத்துக்கள் நம்மிடம் நிறைய இருக்கின்றன. பிறரோடும் பிற குழுக்களோடும் பழகும்போது இக்கருத்துக்களை மனத்தில் வைத்துக்கொண்டு பேசத் தொடங்குகிறோம். இத்தகைய மனநிலை நம்மில் ஆரோக்கியமான உறவை ஏற்படுத்தாமல் பிரிவினைகளை உருவாக்குகிறது.

முன் தீர்மானம் என்றால் என்ன?

***முன் தீர்மானம் என்பது, ஒருவரைப் பற்றியோ, அல்லது இன்னொரு சமூகக் குழுவைப் பற்றியோ முன் கூட்டியே ஒரு தப்பான, இழிவான, தாழ்வான கருத்தைத் தீர்மானித்துக்கொண்டு அதையே சரியென்று நியாயப்படுத்தும் மனநிலை.***

***முன் தீர்மானக் கருத்துக்கள் உருவாகக் காரணங்கள்***:

- ***அறியாமை*** – பிறர் கூறுவதை அப்படியே கேள்வியே கேட்காமல் உண்மையென்று நம்புவது.
- ***வதந்திகள்*** – வதந்திகள் உண்மைதானா என்று கேட்டறியாமல் நம்புவது.
- பாரம்பரியப் பேச்சு, பழமொழிகள், கதைகள், விடுகதைகள் தரும் செய்திகளை அப்படியே உள்வாங்குவது. ‘அவர்கள் அப்படித்தான்‘ எனப் பொதுமைப்படுத்தித் தீர்ப்பிடுவது.
- ***பொறாமை*** – ஒருவர் மீது கொண்ட பொறாமையால் அவர்மீது எப்பொழுதும் தவறான எண்ணம் கொண்டிருப்பது.
- ***அந்தஸ்து*** – உயர்ந்த நிலையில் இருப்போர் பிறரைத் துச்சமாகக் கருதுவது, தாழ்வாக மதிப்பது, இளக்காரமாகப் பேசுவது, சாதி அந்தஸ்து போன்று பணம், பதவி, அதிகாரத்தினால் கிடைக்கும் அந்தஸ்தும் காரணங்களாக அமையலாம்.

## எங்கிருந்து உருவாகிறது ?

### குடும்பம்

**பெற்றோர், சகோதர, சகோதரிகள், அத்தை, மாமா, வீட்டில் வேலை செய்வோர் - இவர்களைச் சுற்றித் தானே குழந்தைகள் வாழ்கின்றனர். இக்குழந்தைகள் தாம் அறியாமலேயே, குடும்பத்தின் மூத்தோரின் பழக்க வழக்கங்களை, மதிப்பீடுகளை அப்படியே பிரதிபலிப்பதுபோல, இக்குடும்பத்தாரின் ஏனைய சமயத்தவரை, சாதியினரைப் பற்றிய கருத்துக்களையும் அப்படியே உள் வாங்கிக் கொள்கின்றனர்.**

### சமயம்

**முன்தீர்மானக்கருத்துக்களை உருவாக்குவதில் சமயம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. சமயத்துள் கடவுள் மட்டும் இருப்பதாக எண்ணக் கூடாது. ஒவ்வொரு சமயத்திற்கும் தனிப்பட்ட வழிபாட்டு முறை, உணவு, உடை, பழக்க வழக்கங்களும் உண்டு. குழந்தைகள் இச்சமயச் சூழலில் வளர்க்கப்படுகின்ற போது, இச்சடங்குகளின்படி வாழவே தூண்டப் பெறுகின்றனர். இச்சடங்குகளே உயர்ந்தவை, நாம் வணங்கும் கடவுளே உயர்ந்தது என்ற கருத்து குழந்தைப் பருவத்திலேயே சொல்லித் தரப்படுகின்ற போது, ஏனைய சமயஞ் சார்ந்த அனைத்தையும் இக்குழந்தை தவறாகப் பார்க்கிறது. 'நம்' சமயம் உயர்ந்தது; ஆகவே, 'நாம்' உயர்ந்தவர்கள் 'அவர்கள்' சார்ந்த சமயம் தவறானது; ஆகவே, 'அவர்களும்' தீயவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற கருத்து உருவாக்கப்படுகிறது.**

**நமது அறிவு நம்மை மனித ஆற்றலின் மீது நம்பிக்கை அற்றவர்களாக்கி விட்டது. நமது புத்திசாலித்தனம் நம்மைக் கடினப்படுத்தி விடுகிறது. நாம் நிறைய யோசிக்கிறோம்; ஆனால், நாம் எதையுமே உணர்வதில்லை. இயந்திரங்களைவிட நமக்கு மனிதாபிமானமே வேண்டும்.**

**- சார்லி சாப்ளின், "தி கிரேட் டிக்டேட்டர்" எனும் திரைப்படத்தில்**

**நண்பர் வட்டம்**

**குடும்பச் சூழலில் வளரும் குழந்தை பெரியவராகின்ற போது பள்ளிக்கூடம், கல்லூரி, விடுதி, பணி செய்யும் இடங்களிலும் பலதரப்பட்ட மக்களைச் சார்ந்திருக்கின்றார். சிறிய வட்டம் பெரிதாகிறது. ஒரு குறிப்பிட்ட சாதி, சமயம் என்ற வட்டத்தில் வாழ்ந்த, அந்த மதிப்பீடுகளைப் பெற்று வந்தவர், பல பல சாதி சார்ந்தவர்களை, சமயஞ் சார்ந்தவர்களைச் சந்திக்கின்றபோது, புதிய கவசங்கள் எழுகின்றன. சிலருக்குப் புதிய அனுபவம், கருத்தில், பார்வையில் மாற்றத்தைத் தருகிறது. சிலர், உலகினுள் நுழைகின்ற போது தான் சார்ந்த சாதி, மதக் குழுவினரோடு மட்டும் உறவு கொண்டு, ஏற்கனவே குடும்பத்தில் பெற்ற மதிப்பீடுகளை, பார்வைகளை இங்கு நியாயப்படுத்தி நிலைப்படுத்துகின்றனர்.**

**சமூகத் தொடர்பு சாதனங்கள்**

**திரைப்படங்கள், பத்திரிகைகள் மூலம் முன்தீர்மானக் கருத்துக்கள் வலுப்படுத்தப்படுகின்றன.**

- **சாதியக் கலவரங்கள், சமயச் சண்டைகள் போன்ற நிகழ்வுகளைச் சித்தரிக்கின்ற போதும், கதைகள் சொல்லுகின்ற போதும் சில குறிப்பிட்ட சமூகங்களின் தனிப்பட்ட குணங்களை மிகையாகக் காட்டுதல்.**
- **சில சாதிகள், சமய மக்களின் நடை, உடை, பழக்கவழக்கங்கள், பேச்சுமுறை போன்ற விஷயங்களை பிரித்துக் காட்டுதல்.**
- **பிரிவனை, பயங்கரவாதம் ரௌடித்தனம் போன்ற பண்புகளை ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுக்களுக்கு மட்டுமே உரித்தானது என்று காட்டுதல்.**

சுருக்கமாக, குடும்பம், நண்பர் வட்டம், சமயம், சமூகத் தொடர்பு சாதனங்கள் என்பனவெல்லாம், சமூகத்தில் ஒரு குழுவினர் பற்றி இன்னொரு குழுவினர் கொண்டுள்ள முன் தீர்மானக் கருத்துக்களை மீண்டும் நியாயப்படுத்தி நிலைப்படுத்துகின்றனர். வளரும் தலைமுறை இக்கருத்துக்களை அப்படியே உள்வாங்கிக் கொள்கின்றது.

**வகுப்புப் பயிற்சி**

1) (அ) உன் அனுபவத்தில் கீழ்க்கண்ட நபர்களைப் பற்றி நீ கொண்ட முன்தீர்மானக் கருத்துக்களை வரிசைப்படுத்துக. (ஆ) ஏன் இவைகள் உருவாயின என்று எழுதவும்.

| நபர்கள் | முன்தீர்மானக் கருத்துக்கள் | என்ன காரணம் ? |
|---|---|---|
| (1) பிச்சைக்காரர் | | |
| (2) ஏழைகள் | | |
| (3) பெண்கள் | | |
| (4) தாழ்ந்த சாதியினர் | | |
| (5) பிற சமயத்தார் | | |
| (6) பிற சாதியினர் | | |
| (7) பிற மொழியினர் | | |

2) முதல் மாணவர் ஏதாவது ஒரு நிகழ்ச்சியையோ அல்லது கதையையோ இரண்டாவது மாணவரிடம் சுருக்கமாகக் காதோடு காதாகச் சொல்ல வேண்டும். இதைக் கேட்ட இரண்டாவது மாணவர் மூன்றாவது மாணவரிடம் சொல்ல வேண்டும். இவ்வாறு இருபது மாணவர்கள் கேட்ட பிறகு இருபத்தோறாவது மாணவர் அதை வகுப்பில் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதன்பின் முதல் மாணவர் பகிர வேண்டும். (அ) ஏதாவது வேறுபாடு காண முடிகிறதா ? (ஆ) என்ன வேறுபாடு ? (இ) ஏன் இந்த வேறுபாடு ? (ஈ) இப்பயிற்சியிலிருந்து நீ கற்றுக் கொள்ளும் கருத்து என்ன ?

3) முன் தீர்மானக் கருத்துக்கள் மூலம் சமூகத்தில் ஏற்படும் தீயவிளைவுகள் யாவை?

(உ–ம்) உறவு வளராமை.

1. ------------------------------------------------------------

2. ------------------------------------------------------------

3. ------------------------------------------------------------

4. ------------------------------------------------------------

4) உன் வகுப்பில் உன் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் உன்னைப்பற்றி என்னென்ன முன் தீர்மானக் கருத்துக்கள் வைத்திருக்கிறார்கள் என்பதைக் கேட்டறிக.

1. ------------------------------------------------------------

2. ------------------------------------------------------------

3. ------------------------------------------------------------

4. ------------------------------------------------------------

5)(அ) உன் பெற்றோர் அல்லது உன் குடும்பத்துப் பெரியோர் பிற சாதியினர், மதத்தினர் பற்றி வைத்திருக்கின்ற முன் தீர்மானக் கருத்துக்கள் ஐந்தைக் கேட்டு எழுதவும். (ஆ) இவற்றுக்கான காரணங்களையும் கேட்டு எழுதவும். (இ) இவற்றை வகுப்பில் பகிர்ந்து கொள்க.

| முன் தீர்மானக் கருத்துக்கள் | காரணங்கள் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

6) (அ) உங்கள் ஊரில் மக்கள் பேசும் பழமொழிகளில், கதைகளில் பிற சமய, சாதி மக்கள் பற்றிப் பேசப்படும் முன்தீர்மானக் கருத்துக்களைத் தொகுத்து வகுப்பில் வாசிக்கவும்.

(உ.ம்.)

(1) **உயர உயரப் பறந்தாலும், ஊர்க்குருவி பருந்து ஆகுமா? - பழமொழி**

(2) **அடுக்களைப் பெண்ணுக்கு அழகு எதற்கு? - பழமொழி**

(3) **சேலைமேற் சேலை கட்டும் தேவ ரம்பையானாலும், ஓலைமேல் எழுத்தாணி ஊன்றும் பெண் ஆகாது. - பழமொழி**

இக்கருத்துக்களை மாற்ற என்ன செய்யலாம் என்பதைச் சிந்தித்து வகுப்பில் பகிரவும்.

# 6. புண்படுத்தும் வார்த்தைகள்

**நிகழ்ச்சி 1**

ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் கமலா என்னும் மாணவி கருப்பாக இருப்பாள். அவளுக்குப் பற்கள் கொஞ்சம் நீளமாகவும் இருக்கும். அவள் எப்போதும் சோர்ந்து காணப்படுவாள். அவளை ஆசிரியை விசாரித்தபோது அவளது வீட்டில் பெற்றோர்களும் உறவினர்களும் இவளது தோற்றத்தை வைத்துத் திட்டுவது வழக்கம் என்பது தெரிய வந்தது. இவளுக்கு வயது ஐந்து இருக்கும்போது இவளுடைய தங்கை இறந்து போனாள். அவள் செக்கச் செவேலென்று அழகாக இருப்பாள். அப்போது கமலாவின் பெற்றோர்கள் கமலாவைப் பார்த்து இந்தச் சனியன் செத்திருக்கக்கூடாதா? என்னுடைய அழகான பிள்ளையை ஆண்டவன் எடுத்துக்கிட்டானே என்று கூறிய வார்த்தைகள் கமலாவின் உள்ளத்தில் ஆழமான காயத்தை ஏற்படுத்தின. அன்றிலிருந்து இவள் அந்த வார்த்தைகளை நினைத்து வாழ்வில் சோர்ந்துவிட்டதாகவும் எந்த இறப்புச் செய்திகளைக் கேட்டாலும் தன் பெற்றோர் கூறிய கடும் சொற்கள் நினைவிற்கு வருவதாலும் அழுகின்றேன் என்று ஆசிரியையிடம் பகிர்ந்துகொண்டாள்.

**நிகழ்ச்சி 2**

ராணி பத்தாம் வகுப்பில் படிப்பவள். மிகவும் துடிப்பானவள். எல்லாத் திறமைகளும் அவளிடம் இருந்தன. எப்போதும் வகுப்பில் முதல் மாணவியாகத் திகழ்பவள். நாடகம் நடிப்பது என்றால் அவளுக்கு மிகவும் பிடிக்கும். எந்தவொரு காரியத்தையும் முன்னின்று நடத்தும் தலைமைப் பண்பு உடையவள். இவள் ஒரு முறை தன் குழு நண்பர்களுடன் தன்னுடைய வளர்ச்சியைப் பற்றி பகிர்ந்து கொண்டாள்.

"**நான் ஐந்து வயதாயிருக்கும்போது என் சித்தி என்னைப் பார்த்து நீ உன் பெயரைப் போலவே எப்போதும் ராணியாய் இருக்க வேண்டும். அவ்வாறு இருக்க எப்போதும் முயற்சி செய்ய வேண்டும் என்று தட்டிக்கொடுத்தார்கள். அன்று முதல் என் உள்ளத்தில் ஒரு புதுத்தெம்பு ஏற்பட்டது. இன்று எல்லாவற்றிலும் முன்னுக்குவர வேண்டும் என்ற ஆவல் என்னுள்ளத்தில் உள்ளது. இதற்குக் காரணம் எனது சித்தியின் உற்சாகப்படுத்திய வார்த்தைகள்தான்**" என்று பெருமிதமாகக் கூறினாள்.

**ஒவ்வொரு மனிதருக்கும் தனது புகழ், நற்பெயர், தனிப்பட்ட வாழ்வு மற்றும் குடும்ப வாழ்வு ஆகியனவற்றைப் பாதுகாக்க சட்டப் பாதுகாப்புப் பெற உரிமை உண்டு.**

**(பிரிவு 5, அமெரிக்க மனித உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய பிரகடனம், 1948)**

**வகுப்புப் பயிற்சி**

1. அ) கமலாவின் வேதனைக்குக் காரணமென்ன ?

ஆ) கமலாவின் நிலையில் நீ இருந்தால் (1) என்ன உணர்ந்திருப்பாய் ? (2) என்ன செய்திருப்பாய் ?

இ) ராணி உற்சாகமாக வளர்ந்ததற்குக் காரணம் என்ன ?

**ஒவ்வொரு மனிதரும் தனது சக மனிதரை வேறுபாடின்றி மதிப்பது அவரது கடமையாகும். மேலும் சக மனிதரிடையே கொள்ளும் உறவானது அவர்களை உறவிலும் மதிப்பிலும் சகிப்புத் தன்மையிலும் வளர்க்க வேண்டும்.**

**(பிரிவு 28, மனித உரிமைகள் மற்றும் மக்கள் உரிமைகளுக்கான ஆப்பிரிக்க சாசனம், 1981 )**

2. அ) உன் வாழ்க்கையில் உன்னைப் புண்படுத்திய வார்த்தைகளைப் பட்டியலிட்டு, அவை உன்னில் ஏற்படுத்திய பாதிப்புகளை எழுதுக.

| இடம் | புண்படுத்திய வார்த்தைகள் | பாதிப்புகள் |
|---|---|---|
| குடும்பத்தில் | | |
| வகுப்பில் | | |
| தோழர் நடுவில் | | |
| விளையாடும் இடத்தில் | | |
| தெருவில் | | |
| பேருந்தில் | | |
| கோவிலில் | | |

ஆ) உன் வாழ்க்கையில் உன்னை ஊக்கப்படுத்திய வார்த்தைகளைப் பட்டியலிட்டு அவை உன்ளில் ஏற்படுத்திய தாக்கங்களை எழுதுக.

| ஊக்கப்படுத்திய நபர்கள் | ஊக்கப்படுத்திய வார்த்தைகள் | தாக்கங்கள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

**இனம், நிறம் எனும் அடிப்படைகளில் மக்களை ஒடுக்குவது தான் உறவுகள் சிதையவும் அமைதி குலையவும் காரணமாகிறது.**

**(இனப்பாகுபாடு ஒழிப்பு பற்றிய அகில உலக உடன்படிக்கையின் முன்னுரை 1965)**

3. அ) நீ பிறரை எப்படிப்பட்ட வார்த்தைகளால் புண்படுத்தியிருக்கிறாய் என்பதை எழுதுக.

| ஊக்கப்படுத்திய நபர்கள் | ஊக்கப்படுத்திய வார்த்தைகள் | தாக்கங்கள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

ஆ) நீ பிறரை எப்படிப்பட்ட வார்த்தைகளைக் கூறி உற்சாகப்படுத்தியிருக்கிறாய்?

| ஊக்கப்படுத்திய நபர்கள் | ஊக்கப்படுத்திய வார்த்தைகள் | தாக்கங்கள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

**தலித் பழங்குடியினரைப் பொது இடங்களில் இழிவாகப் பேசுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இதற்கு ஆறு மாதத்திலிருந்து ஐந்து வருடங்கள் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.**

**(பிரிவு 3, (X) தலித் , பழங்குடியினர் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989)**

4. இந்தச் சமுதாயத்தில் யாரை எல்லாம் தரக்குறைவாகக் கருதுகிறோம் என்பதைப் பட்டியல்படுத்துக. ஏன்?

| நபர்கள் | காரணங்கள் |
|---|---|
| 1. | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

5.அ) சமுதாயத்தில் பெண்களைப் புண்படுத்தும் வார்த்தைகள் எவை?

1. பால் வேறுபாட்டை வைத்து (எ.கா.) பொட்ட புள்ள
2. தோற்றத்தை வைத்து (எ.கா.) பல்லி
3. தொழிலை வைத்து (எ.கா.) தோட்டிச்சி
4. திருமண நிலையை வைத்து (எ.கா.) வாழாவெட்டி
5. பொருளாதார நிலையை வைத்து (எ.கா.) பிச்சைக்காரி

இ) ஏழைகளைப் புண்படுத்தும் வார்த்தைகள் எவை?

1. பெயர் ----------------------------------------------------
2. தோற்றம் ----------------------------------------------------
3. தொழில் ----------------------------------------------------
4. பரம்பரை ----------------------------------------------------
5. இயலாமை ----------------------------------------------------

ஈ) சிறுவர் சிறுமியரைப் புண்படுத்தும் வார்த்தைகள் எவை?

1. பட்டப்பெயர் ------------------------------------------------

2. தோற்றம் ------------------------------------------------

3. விலங்குப் பெயர் ------------------------------------------------

4. குடும்ப நிலை ------------------------------------------------

5. பொருளாதார நிலை ------------------------------------------------

உ) பிற சமயத்தாரைப் புண்படுத்தும் வார்த்தைகள் எவை?

1. பெயர் ------------------------------------------------

2. குணம் ------------------------------------------------

3. கலாச்சாரம் ------------------------------------------------

4. சாதி, மத அடையாளம் ------------------------------------------------

***வீட்டுப்பயிற்சி***

6. அ) வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் கமலாவுக்கு உற்சாகம் அளிக்கக் கூடிய வகையில் கடிதம் ஒன்றை வீட்டிலிருந்து எழுதி வா.

   ஆ) பிறகு அதை வகுப்பில் வாசித்துக் காட்டவும்.

7. உற்சாகமாக வளர்ந்துகொண்டிருக்கும் ராணியை இன்னும் நன்றாக வளர்வதற்கு உற்சாகப்படுத்த கடிதம் ஒன்றை வீட்டிலிருந்து எழுதி வா.

**வார்த்தைகளாலோ, எழுத்துக்களாலோ, சைகைகளாலோ தலித் மக்களை இழிவாகப் பேசுவது தண்டனைக்குரிய குற்றமாகும். ஒரு மாதத்திலிருந்து ஆறு மாதங்கள் வரை சிறைத்தண்டனை வழங்கப்படும்.**

**(பிரிவு 7, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், 1955)**

8. பிறரை உற்சாகப்படுத்தும் சொற்களை அல்லது சொற்றொடர்களை எழுதி, வகுப்பில் வாசித்துக் காட்டவும். (உ–ம்) நீ கெட்டிக்காரி.

1.---------------------------- 2 --------------------------

3. --------------------------- 4. --------------------------

5. --------------------------- 6. ---------------------------

7. -------------------------- 8. ---------------------------

9. --------------------------- 10. --------------------------

9.அ) வார்த்தைகளின் புண்படுத்தும் தன்மையை வெளிப்படுத்தும் சில சொல் பிரயோகங்களை எழுதுக.

(எ.கா.) "பரதேசிப் பயலுக", "சனியன்", "பிச்சைக்கார நாயி", "தெண்டச் சோறு", "தடிமாடு"

1. -----------------------------------------------------

2. -----------------------------------------------------

3. -----------------------------------------------------

4. -----------------------------------------------------

5. -----------------------------------------------------

ஆ) இம்மாதிரிச் சொல் வழக்குகளை நீ கேட்ட அனுபவம் உண்டா? அப்போது உன்னிடம் எழுந்த உணர்வுகளைப் பட்டியலிடுக.

| **கேட்ட சொல் வழக்குகள்** | **உணர்வுகள்** |
|---|---|
| 1. | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |

இ) இம்மாதிரி சொல் வழக்குகளைப் பிறரிடம் நீ பயன்படுத்திய அனுபவம் உண்டா? அப்போது அவர்களிடம் என்ன உணர்வுகள் ஏற்பட்டிருக்கும் என்று பட்டியலிடுக

1.

2.

3.

4.

5.

ஈ) இம்மாதிரி சொல் வழக்குகளை நீ எதிர்காலத்தில் பயன்படுத்தாமலிருக்க என்ன வழி முறைகளைக் கையாள்வாய்? மூன்று வழிமுறைகளை மட்டும் குறிப்பிட்டு எழுதவும்.

1.

2.

3.

**10.** வரைபடத்தில் உள்ள நல்ல பண்புகளை வட்டமிட்டுக் காட்டுக. (உதாரணம். ஒன்று வட்டமிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது.)

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ | ஞு | ற் | க | ந | ல் | ல | வ | ர் | ம | கி | பு | ச் | ள் |
| தி | றா | அ | ம | பா | ன | வ | ர் | தி | யா | கா | ம் | சி | க |
| ற | வ | ர் | ழ | வி | டு | த | லை | வீ | ர | ர் | ர் | ங் | ஞு |
| மை | த | ம் | ல | கா | ள | ர் | க | ட | மை | உ | ண | ர் | வு |
| யா | பொ | று | மை | யா | ன | வ | ர் | க | ள் | வ | ச | தி | ள |
| ன | ஞு | ப | மை | து | பா | வ | ம் | செ | ய் | யா | ர் | ர் | ள் |
| வ | ட | ள | ப | ய | ங் | நே | ர் | மை | யா | ள | ர் | க் | யு |
| ஞு | தி | யா | க | உ | ள் | ள | ம் | உ | ள் | ள | வ | ர் | மை |
| க | ட | ம் | ஐ | க | ணி | ய | மா | ன | வ | ர் | அ | கு | ண் |
| ந | பொ | று | க | பு | ள் | ள | வ | ர் | க | ள் | ர் | நி | ஒ |

**11.** ஒருவரைப் புண்படுத்தும் வார்த்தைகளால் இகழும்போது, இகழப்பட்டவர் எம்மாதிரி உரிமைகளை இழக்கிறார்? (உ.ம்.) தன்னுடைய தன்மான உரிமையை இழக்கிறார்.

1.

2.

3.

4.

5.

## *மானுடம்*

மானிடத் தன்மைக்கு வேறாய் - ஒரு
வல்லமை கேட்டிருந்தால் அதைக் கூறாய்
மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு
மானிடம் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும்
மானிடம் என்பது குன்று - தனில்
வாய்ந்த சமத்துவ உச்சியில் நின்று
மானுடர்க்கினிதாக - இங்கு
வாய்ந்த பகுத்தறிவாம் விழியாலே
வான்திசை எங்கணும் பார் - வாழ்வின்
வல்லமை 'மானிடத்தன்மை' என்றதோ - பாரதிதாசன்

**வார்த்தைகள் அல்லது சொற்கள்: வெறும் எழுத்துக்களாலான வடிவங்களல்ல, வெறும் ஒலிகளும் அல்ல. பொருளில்லாச் சொற்களல்ல. வார்த்தைகள் ஆற்றல் நிரம்பியவை. வாள் முனையைக் காட்டிலும் பேனா வலிமையானது என்பதற்கு அர்த்தம் என்ன? இவ்வார்த்தைகளுக்கு ஆக்கும் திறனும் அழிக்கும் வல்லமையும் உண்டு. ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும்.**

# 7. துன்புறுத்தும் செயல்கள்

**நிகழ்வு 1**

**என்னை என் அம்மாவே ஆயிரம் ரூபாய்க்கு வித்துட்டா**

**1)** "என் அம்மாவே என்னை ஆயிரம் ரூபாய்க்கு வித்துட்டா. இனி அவ முகத்தில முழிக்க மாட்டேன். என்னை என் பாட்டி வீட்டுக்கு அனுப்பிச்சிடுங்க" என அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தான் ஷேக் பரீத்.

"எனக்கு அங்க முறுக்கு சுடற வேலை தந்தாங்க. பெரிய பெரிய பாத்திரத்தையெல்லாம் தூக்கச் சொல்வாங்க. தூக்க முடியாம சில சமயம் கீழே போட்டுடுவேன். அப்படி ஒரு தடவை பாத்திரத்தைப் போட்டப்ப பழுக்கக் காய்ச்சிய கம்பியால உடம்புல சூடு போட்டுட்டாங்க".

சட்டையைத் தூக்கிக் காண்பித்தான். வரிவரியாகத் தழும்புகள்.

"எனக்குப் படிக்கணும்னு ஆசை. அதுக்கு உதவி செய்வீங்களா?" கண்ணீர் மல்கக் கேட்டான் ஷேக் பரீத்.

**2)** "ஒரு நாள் அசதியில தூங்கிட்டேன். கொதிக்கிற எண்ணையில கிடந்த கரண்டியை எடுதது என் வயத்தில சூடு போட்டாங்க. அந்த இடம் கொப்பளிச்சிடுச்சு. அன்னைக்கு மட்டும் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போனாங்க. தொடர்ந்து வலியா இருந்ததால் அழுதேன். உடனே முதலாளி அழாதடா நாயேன்னு சொல்லி மிளகாயை அரைச்சு அந்தப் புண்ணுல தேச்சிட்டாரு. வலி உயிர் போயிடுச்சு". சொல்லும் போதே சாதிக்பாட்சா கண்களில் இன்னும் வலி.

**குமுதம் ரிப்போர்ட்டர் 12.8.2001**

**எங்கள் ஊரில் ஒருவர் ஊராட்சி உறுப்பினர் ஆனார். சட்ட மன்ற உறுப்பினர் ஆனார். அமைச்சர் ஆனார். பின் அயல்நாட்டுத் தூதுவர் ஆனார். இறுதிவரை மனிதனாகாமலே மரணமானார்.**

**ஈரோடு தமிழன்பன்**

**நிகழ்வு 2**

## அவமானப்படும் சிறுவன்

**பாலன் - ஆறுவயதுச் சிறுவன். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். சிலேட் வாங்க கடைக்குச் செல்கிறான். கடை முதலாளி இப்பையனிடம் ஒரு சிறு தாளில் எதையோ கொடுத்து அடுத்த கடைக்குப் போகச் சொல்கிறார். அடுத்த கடைக்குச் செல்கிறான். கடைக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த இளைஞர்கள் இவன் கையிலிருந்த தாளை பாலனிடமிருந்து பறித்து, வாசித்து விட்டு மேலும் அத்தாளில் ஏதோ எழுதி அடுத்த கடைக்குப் போகச் சொல்கிறார்கள். அந்தக் கடையிலும் இதே நிகழ்வு தொடர்கிறது.**

**பாலன் தன் சகோதரியிடம் வாசிக்கச் சொல்ல ஓடுகிறான். அவள் வாசிக்கிறாள். அந்தத் தாளில் என்ன எழுதியிருந்தது தெரியுமா? 'அவனுக்கு சிலேட் கொடுக்க வேண்டாம். அவனை ஒவ்வொரு கடையாக அலைய விடவும்".**

**ஆதாரம்: Human Scape – May 2002**

**நிகழ்வு 3**

## ஓரங்கட்டி ஒதுக்கப்பட்ட அவல அனுபவம்

அழகிப்பட்டி உயர்நிலைப்பள்ளி. மதிய உணவு நேரம். மாணவர்கள் தங்கள் வீடுகளிலிருந்து கொண்டு வந்த உணவை அங்கங்கே வளர்ந்திருக்கும் மரநிழலில் கூட்டங் கூட்டமாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களுள் முத்து, பாண்டி, வேலு மூவரும் தனியே ஒரு குழுவாக ஓரிடத்தில் சாப்பிடுகின்றனர். இம்மூவரும் நல்ல நண்பர்கள், எப்போதும் சேர்ந்தே இருப்பர். சேர்ந்தே பள்ளிக்கு வருவர். சேர்ந்தே வீட்டுக்குப் போவர். பள்ளியில் பொதுவான விளையாட்டுக்களில் மற்ற மாணவர்களோடு சேர்ந்து விளையாடினாலும், சாப்பிடும் போது மட்டும் தனியாகத்தான் சாப்பிடுவர். சாப்பிடும்போது தம் பள்ளி அனுபவங்களை பகிர்ந்து கொள்வர்.

**மனுசங்கடா . . . நாங்க மனுசங்கடா**
**உன்னைப்போல அவனைப்போல**
**எட்டுச்சாணு உசரமுள்ள**
**மனுசங்கடா . . . நாங்க மனுசங்கடா !**

**கவிஞர் இன்குலாப்**

ஒருநாள், இவர்கள் எப்போதும் தனியாக அமர்ந்து சாப்பிடுவதைக் கண்ட தலைமையாசிரியர், ஏன் நீங்கள் மூணுபேர் மட்டும் தனியாகவே உக்காந்து சாப்பிடுறீங்கண்ணு கேட்டார். மூவருக்கும் எப்படி பதில் சொல்வதென்று தெரியவில்லை. தைரியமாகச் சொல்லுங்கப்பா என்று தலைமையாசிரியர் மீண்டும் கேட்டார். முத்து எழுந்து "மற்ற மாணவர்கள் எங்களை கேலி செய்றாங்க, அதனாலதான்" என்றான். "ஏன் கேலி செய்றாங்க?" என்று தலைமையாசிரியர் கேட்ட போது, "எங்களிடம் சுத்தம் இல்லையாம். எங்கள் உணவு சுத்தமில்லாத உணவாம். எங்களிடம் நாகரீகம் இல்லைன்னு புண்படும் வார்த்தைகளால் கேலி செய்றாங்க மற்ற மாணவர்கள், எங்களை எப்போதுமே ஒதுக்கியே வைக்கிறாங்க. பொது நிகழ்ச்சியில்கூட நாங்க கலந்து கொள்ள விரும்பினால் கூட, நீங்களா என்று கேலி பண்றாங்க. நல்லா பரீட்சை எழுதி நிறைய மார்க் வாங்கினாலும், காப்பியடிச்சிருப்பாங்க என்று கேலி செய்கிறாங்க." என்று சொன்னான்.

நாங்களும் பள்ளிக்கூடத்துக்குப் படிக்கத் தானே வந்திருக்கிறோம். எங்களை மட்டும்தான் புண்படுத்துறாங்க., ஒதுங்குறாங்க. நாங்கள் மற்ற மாணவர்களைவிட என்ன வித்தியாசமாக இருக்கிறோம்? ஏற்கனவே, இப்படிப் பண்றாங்க, என்ன செய்வது எங்களுக்குத் தெரியலையே சார் என்றார்கள்.

நீங்க கவலைப்படாதீங்கப்பா! உங்களிடம் மற்ற மாணவர்கள் இப்படி நடந்து கொள்வது தவறுதாம்பா! ஆனால், இத்தவறுக்கு இவங்க மட்டும் காரணமில்லைப்பா. ஏற்கனவே இவங்க ஊர்ல, இவங்க வீட்ல, நம்மூர்ல உள்ள இன்னொரு பிரிவினரை அவங்க வேறு சாதியா இருக்கலாம். அவர்களைப் பற்றி, சில கருத்துக்களை வைச்சிருப்பாங்க. அக்கருத்த இவங்களும் மனசுக்குள்ளே வாங்கிட்டாங்க. இக்கருத்தைத் தான் முன் தீர்மானம் என்று சொல்கிறோம். அப்படி மற்றவங்களைப் பற்றி தவறான முன்தீர்மானம் வளர்ந்து விட்டதனாலே, அவர்களை ஏளனமாக நடத்துவது, புண்படும் வார்த்தைகளைச் சொல்வதெல்லாம் பார்க்கிறோம். இதெல்லாம் மனித மாண்புக்கு எதிரானது என்று பார்க்கத் தவறுவதால் உருவாவதாகும்.

**"வானத்தைப் பார்த்தேன்**

**பூமியைப் பார்த்தேன்.**

**மனுசனை இன்னும் பாக்கலையே"**

**- ஒரு திரைப்படப் பாடல்**

**ஒரு கிரேக்க ஞானி பட்டப்பகலில் சந்தைக் கடையில் விளக்கை ஏந்திக்கொண்டு எதையோ தேடிக் கொண்டிருந்தார். மக்கள் அவரைப் பார்த்துக் கேட்டனர்.**

**'எதைத் தேடுகிறீர்கள்?'**

**அவர் சொன்னார் :**
**'மனிதரைத் தேடுகிறேன்.'**

**வகுப்புப் பயிற்சி**

1) கொடுக்கப்பட்ட உண்மை நிகழ்வுகளில் சம்பந்தப்பட்டோர் அனுபவித்த துன்புறுத்தும் செயல்கள் யாவை ?

அ) கொத்தடிமைகள்

- 
- 
- 
- 
- 

ஆ) தாழ்த்தப்பட்ட பையன்

- 
- 
- 
- 
- 

இ) மாணவர்கள்

- 
- 
- 
- 

**தீண்டாமையின் அடிப்படையில் ஒரு மனிதரை ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்யக் கட்டாயப்படுத்துவது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.**

**பிரிவு 40(iii) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், 1955**

2. இந்நிகழ்வுகள் உன்னிடம் உருவாக்கிய உணர்வுகளை எழுதி வகுப்பில் பகிர்ந்து கொள்க.

| நிகழ்வுகள் | உனது உணர்வுகள் | | |
|---|---|---|---|
| நிகழ்வு 1 | அ. | ஆ. | இ. |
| நிகழ்வு 2 | அ. | ஆ. | இ. |
| நிகழ்வு 3 | அ. | ஆ. | இ. |
| நிகழ்வு 4 | அ. | ஆ. | இ. |
| நிகழ்வு 5 | அ. | ஆ. | இ. |

3. இக்கொடூரச் சம்பவங்களை நடத்திய ஆட்களைப் பற்றிய உனது உணர்வுகளை எழுதி வகுப்பில் பகிர்ந்து கொள்க

| ஆட்கள் | உணர்வுகள் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

**பதினான்கு வயதுக்குட்பட்ட சிறுவர் எவரையும் ஆபத்தை விளைவிக்கும் வேலையில் அமர்த்தக் கூடாது.**

**பிரிவு 24, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950**

4.அ) நீ யாரையாவது செயல்களால் புண்படுத்தியிருக்கிறாயா ? ஆம் என்றால் யாரை ? ஏன் ?

| ***யாரை?*** | ***ஏன்?*** |
|---|---|
| | |

ஆ) உன் குடும்பத்தில் உள்ளவர்கள் யாரையாவது செயல்களால் புண்படுத்துகின்றனரா ? யாரை ? ஏன் ?

| ***யாரை?*** | ***ஏன்?*** |
|---|---|
| | |

இ) உன் ஊரார் யாரையெல்லாம் செயல்களால் புண்படுத்துகின்றனர் ? ஏன் ?

| ***யாரை?*** | ***ஏன்?*** |
|---|---|
| | |

ஈ) நீ இன்னொருவரால் புண்படுத்தப்பட்டிருக்கிறாயா ? அப்போது உன் உணர்வுகள் எப்படியிருந்தன ?

| புண்படுத்தியவர்கள் | உணர்வுகள் |
|---|---|
| ஆசிரியர் | |
| பெற்றோர் | |
| நண்பர்கள் | |
| வேறு சாதியினர் | |
| வேறு மதத்தினர் | |
| பணக்காரர் | |
| உன் உறவினர் | |

5.அ) உன் அனுபவத்தில் நீ நேரடியாகக் கண்ட அல்லது அடுத்தவர் (உ–ம் : குடும்பத்தில் உள்ளவர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், செய்தித் தாள்கள். . . ) வழியாகக் கேட்ட இதுமாதிரி சம்பவங்களில் பலவற்றை உனக்குத் தெரியும். இவைகளில் உன் நெஞ்சை அதிகமாகப் பாதித்த ஒன்றை மட்டும் தேர்ந்தெடுத்து 15 வரிகளில் எழுதவும். அப்படித் தேர்ந்தெடுத்து எழுதும்போது நீ நேரடியாகக் கண்ட சம்பவத்திற்கு முதலிடம் கொடுக்கவும்.

ஆ) எழுதியதை வகுப்பில் நிதானமாக வாசிக்கவும்.

இ) ஏன் இந்தச் சம்பவம் உன்னை அதிகமாகப் பாதித்தது என்று சொல்லவும்.

ஈ) இப்படி உன்னைப் பாதித்தமையால் உன் வாழ்வில் என்ன மாற்றம் ஏற்பட்டது என்று கூறவும்.

உ) இந்தச் சம்பவத்தைப் பற்றி யாரிடமாவது பேசினாயா? ஆம். என்றால் யாரிடம், எதற்காகப் பேசினாய்? இல்லை என்றால் ஏன் பேசவில்லை என்று கூறவும்.

ஊ) மேற்கண்ட நிகழ்ச்சிகளில் அதிகம் பாதிப்பு அடைந்தவர்கள் யார்? குறைவாகப் பாதிப்பு அடைந்தவர்கள் யார்? பாதிக்கப்படாதவர் யார்? ஏன்?

**6.** இந்தப் பாடத்தில் கொடுக்கப்பட்ட சம்பவங்களை அடிப்படையாக வைத்து மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து சிறு நாடகங்களைத் தயாரித்து வகுப்பில் நடித்துக் காட்டவும்.

7. பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்வுகளை உன் பெற்றோரிடத்தில் வாசித்துக் காட்டி அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைக் கேட்டு வகுப்பில் பகிர்ந்து கொள்.

### நெஞ்சு பொறுக்குதிலையே

கஞ்சி குடிப்பதற்கிலார் - அதன்
காரணங்கள் இவையெனும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே - நிதம்
பரிதவித்தே உயிர் துடித்தே
துஞ்சி மடிகின்றாரே - இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே.

- ***பாரதியார்***

# 8. சிதறும் சமூகம்

**கலந்துரையாடல் நடக்கும் இடம் - வகுப்பறை:**

அண்மையில் பத்திரிகைகளில் குசராத் கலவரம் பற்றி வெளிவந்த இரு நிகழ்வுகளை மாணவர் இருவரிடம் ஆசிரியர் வாசிக்கச் சொல்கிறார். பிறகு கலந்துரையாடல் தொடர்கிறது.

**சிதறும் சமூகம் 1**

**‘அவர்கள் முதியவர்களைக் கூட விட்டு வைக்கவில்லை. தொடர்ந்து கல்லெறிந்து கொண்டிருந்தனர். பெண்கள் அமர்ந்திருந்த ரெயில் பெட்டிக்குள் நுழைந்தனர். நாங்கள் ‘ஏன் நுழைகிறீர்கள்’ என்று கேட்கும் முன்னே ரெயில் பெட்டிகளுக்குத் தீ வைத்து விட்டனர். பல பெண்கள் தீயில் அகப்பட்டு செத்துப் போனாரகள். இவர்களுள் ஒன்றுமறியா குழந்தைகள் செத்து மடிந்த கொடுமை கொடுமையுள்ளும் கொடுமை. ஒரு வயதான மூதாட்டி ‘என்னைக் கொல்லாதே’ என்று மன்றாடிய பிறகும் இரக்கமில்லாமல் கொல்லப்பட்டார்.‘**

**கோத்ராவில் சபர்மதி ரெயில் எரிக்கப்பட்ட நிகழ்வில் தப்பித்த ஒரு பெண்ணின் பேட்டி, மிட்டே, 6 மார்ச் 2002**

**சிதறும் சமூகம் 1**

**‘என் குடும்பத்தைச் சார்ந்த 14 பேர் ஒரே நாளில் கொல்லப்பட்டனர். இவர்களில் 7 பேர் என் தந்தையின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மீதி 7 பேர் என் கணவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கொல்லப்பட்ட பெண்கள் அனைவரும் கொலை செய்யப்படுமுன் மானபங்கப்படுத்தப்பட்டனர். எனது மூன்றரை வயது குழந்தையும் கொல்லப்பட்டாள். என்னையும் மானபங்கப்படுத்தினர். நான் மயங்கிய நிலையில் இருந்தமையால் நான் செத்துவிட்டதாக நினைத்து விட்டுவிட்டுப் போய்விட்டனர். என்னுடைய அத்தை, என் தாய், என் மூன்று சகோதரிகளும் கொல்லப்பட்டுவிட்டனர். ஊரிலுள்ள எல்லோரும் ஓடிவிட்டனர். என் அத்தை மகளின் பிரசவ காலம் நெருங்குவதால் நான் இன்னும் இவ்வூரில் இருக்கிறேன். போலீசாருக்கு புகார் கொடுத்துள்ளேன். எனக்கு நீதி கிடைக்குமா?‘**

**கோத்ரா ரெயில் எரிப்புக்குப்பின் குசராத் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பெண் ஒருத்தியின் அவலக் குரல். கம்யூனலிசம் காம்பாட், மார்ச் - ஏப்ரல், 2002**

மாணவர்களே,

மேற்கண்ட இரு உண்மைகளையும் வாசிச்சுப் பாருங்க. உங்க பிஞ்சு மனசு எவ்வளவு வேதனைப்படும்? எவ்வளவு அதிர்ச்சியைக் கொடுக்கும் என்று எனக்குத் தெரியும்.

மாணவர்களே, சமூக வாழ்வு என்ற பாடத்தைக் கொஞ்சம் நினைச்சுப் பாருங்க. மனிதனைச் சமூகப் பிராணின்னு பார்த்தோம். சமூகம் இல்லைன்னா மனிதனே இல்லைன்னு சொன்னோம். மனிதன் உறவை, சொந்த பந்தங்களைத் தேடுகிறவன் என்றெல்லாம் பார்த்தோமே – இரக்கம், அன்பு, பாசம் எல்லாம் உள்ளவன்னு சொன்னோமே, அவையெல்லாம் எங்கே போயிற்று?

கள்ளமில்லா மான் ஒன்றினைத் துரத்திச் செல்லும் புலிக்கும் இம்மனிதர்களுக்கும் என்ன வேறுபாடு? புலி கூட இன்னொரு இனம் சார்ந்த மானைத்தானே வேட்டையாடுகிறது? ***மனிதர்கள் மனிதர்களையே வேட்டையாடுகின்ற காட்சியை இங்குதானே பார்க்கிறோம்.*** இதற்கு ஏதாச்சும் அர்த்தம் இருக்கா?

---

நாமெல்லாம் இந்தியர்கள் என்று சொல்லிப் பெருமைப்படுகிறோம். இந்தியக் குடிமக்கள் என்ற சொல்கிறோம். நாம் இந்த நாட்டில் பல மொழிகள் பேசுகிறோம். பல மதங்களையும் சேர்ந்தவர்களாக இருக்கிறோம். ஆனாலும் இந்தியர்கள் என்ற நிலையில் நாமெல்லாம் ஒன்று என்றெல்லாம் பேசுகிறோம். பள்ளிக் கூடத்திலயே நாம் தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி எடுக்கிறோம். நாம் என்றைக்காவது சண்டை போட வேண்டுமென்று நினைக்கிறோமா? இல்லையே. ஒற்றுமையாகத்தானே இருக்க வேண்டுமென்று நினைக்கிறோம்? பள்ளிக் கூடத்திலே முருகன், அபுபக்கரோடும், அபுபக்கர் ஜோசப்போடும் சேர்ந்து விளையாடுகிறபோது என்றைக்காவது மதத்தைப் பார்க்கிறோமா? ஒரே வகுப்பில் சேர்ந்துதானே உட்கார்ந்திருக்கிறோம். நாம் மதத்தை வைத்து நம் நண்பர்களை உருவாக்கவில்லையே. ஆனால் குஜராத் மாநிலத்தில் என்ன நடந்தது? தொடர்ந்து என்ன நடக்குது?

> ***நம்மிடையே பகை வளர்க்க நிறைய மதங்கள் இருக்கின்றன.***
> ***நம்மிடையே அன்புறவை வளர்க்க எந்த மதமும் இல்லை.***
> ***வி.ஆர். கிருஷ்ணய்யர்,***
> ***முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி***

**மாணவர்** : இந்தியனே இந்தியனைக் குத்திக்கொல்றாங்க சார்.

**ஆசிரியர்** : அருமையாச் சொன்ன. ஆனா நம்ம பத்திரிகைகள் என்ன சொல்லுது ? இந்து இசுலாமியரையும் இசுலாமியர் இந்துவையும் கொல்லுறாங்கன்னு சொல்றாங்களே. இது எப்படி இருக்கு ?

**மாணவர்** : அதுவும் உண்மைதானே சார் ?.

**ஆசிரியர்** : அது எப்படி உண்மையாகும் ?

**மாணவர்** : சார், கோத்ரா ரெயில் நிலையத்திலே பயணம் செய்த பயணிகள் பலர் தீ வைத்துக் கொளுத்தப்பட்டாங்க. கொல்லப்பட்டவங்க ஒரு சமயத்தைச் சேர்ந்தவங்களாம். கொல்லப்பட்டவங்கள்ல எதுவும் அறியாத குழந்தைகள் கூட கருகி செத்தாங்களாமே ?

**இன்னொரு மாணவர்** : இது கொடுமைப்பா. ஆனால் கொலைக்குக் கொலை தீர்வாகுமா ? கோத்ரா கொலைக்குப் பின் குஜராத்ல நடக்கிற கலவரத்தில பாத்தீங்களா ? தினமும் சிலர் கொல்லப்படுறாங்க. பெண்களை அவமானப்படுத்துறாங்க. குழந்தைகளைக் கருவிலேயே அழிக்கிறாங்க. வியாபார நிறுவனங்களைப் போட்டு எரிக்கிறாங்க. நம் நாட்டைச் சேர்ந்தவங்களே நம்ம நாட்டிலேயே அகதியாயிட்டாங்க. நம்ம பிரதமர் கூட அது பெரிய அவமானம் என்று சொன்னார். உலக நாடுகள் எல்லாம் நம்மை கேவலமாகப் பார்க்கிறாங்க.

**ஆசிரியர்** : குஜராத் கலவரம் நமக்கு என்ன பாடம் சொல்லுது ?

நாம இன்னும் ஒரு சமூகமா மாறலை. நாம் நாகரீகச் சமூகமா மாறல்ல. நம்மிடம் சகிப்புத்தன்மை இல்லை. நாம மற்ற மனிதர்களின் மத நம்பிக்கையை இன்னும் மதிக்கக் கற்றுக் கொள்ளவில்லை. இன்னொரு சமயத்தைச் சார்ந்தவங்க என்பதாலேயே கொல்லுகிறோம்னா நம்மிடம் மனிதத் தன்மை எங்கிருக்கு ? இந்தியச் சமூகம் சிதறிப் போகலாமா ? மனிதனாக எல்லோரும் வாழும் உரிமை உண்டுன்னா ஏன் சிலரை வாழவிடாம கொல்லுறாங்க ?

> ***அரசு குடிமக்களை சமயம், இனம், ஆண், பெண், பிறப்பிடம் எனும் அடிப்படையில் வேற்றுமை பாராட்டுதல் கூடாது. கிணறுகள், குளங்கள், சாலைகள், கடைகள், உணவுக்கூடங்கள் இவைகளை யாரும் பயன்படுத்தலை தடை செய்யக் கூடாது.***
>
> ***இந்திய அரசியலமைப்புச் சட்டம், 1950***

**வகுப்புப் பயிற்சி**

1. குசராத் போல தமிழகத்தில் நடந்த சில சாதி சமயக் கலவரங்களைப் பற்றிய செய்திகளைப் பத்திரிகைகளிலிருந்து தொகுத்து எடுத்து வகுப்பில் வாசிக்கவும்.

| எங்கே? | எப்போது | எந்தக் குழுக்களுக்கிடையே? ஏன்? |
|---|---|---|
| | | |

2. இந்தச் சாதி சமயச் சமூகக் குழுக்களிடையே நடைபெற்ற கலவரத்தில் ஏற்பட்ட பாதிப்புகளைப் பட்டியலிட்டு வகுப்பில் வாசிக்கவும்.

அ) பொருள் ரீதியான இழப்புகள் யாவை ?

ஆ) உடற்காயங்கள் ஏற்பட்டனவா ?

இ) உயிரிழப்புகள் ஏற்பட்டனவா ?

ஈ) மனித உறவு பாதிக்கப்பட்டதா ?

**மக்கள் தங்களது உரிமைகளை இனம், நிறம், மொழி, மதம், பாலினம் ஆகிய பாகுபாடின்றி அனுபவித்திட அனைத்து ஐக்கிய நாட்டவையின் உறுப்பு நாடுகளும் உத்திரவாதம் தர வேண்டும்.**

**பிரிவு 2 : 2, சமூக, பொருளாதார கலாச்சார உரிமைகளுக்கான அகில உலக உடன்படிக்கை, 1966**

2) அவமானப்படுத்தப்பட்டனரா ?

3) இந்தப் பாதிப்புகளினால் எந்த வகையான மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன ? பட்டியல் போடவும். (உ–ம்) வாழும் உரிமை

4) சமூகத்தில் ஒற்றுமை மலர நீ கூறும் பரிந்துரைகள் யாவை ?

அ)

ஆ)

இ)

ஈ)

உ)

ஊ)

**உயிர் வாழும் உரிமை மனிதர்களின் இயல்பான ஒன்றாகும். இவ்வுரிமை எவராலும் மறுக்கப்படக்கூடாது. இவ்வுரிமைகள் சட்டத்தால் பாதுகாக்கப்பட வேண்டும்.**

**பிரிவு - 6.1. அகில உலக சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உடன்படிக்கை, 1966**

5) அ) கலவரங்களைப் பற்றி, செய்தித் தாள்களில், வார இதழ்களில் வந்த செய்திகளைச் சேகரித்து வரவும்.

ஆ) மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவும் சேகரித்த செய்திகளை வைத்து ஒரு போஸ்டர் தயாரிக்கவும்.

இ) எந்த வகையான மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன என்று பட்டியல் போடவும்.

ஈ) ஒவ்வொரு போஸ்டருக்கும் ஒரு பொருத்தமான தலைப்புக் கொடுக்கவும்.

உ) குழுத் தலைவர்கள் அவரவர் போஸ்டரைப் பற்றிய தலைப்பைக் கரும்பலகையில் எழுதவும்.

ஊ) மற்ற வகுப்பு மாணவர்களுக்குப் போஸ்டரைப் பற்றிய விளக்கம் கொடுக்கவும்.

எ) போஸ்டர்களைப் பள்ளியின் அறிக்கைப் பலகையில் பொருத்தி வைக்கவும்.

***அவர்கள் தீபாவளி கொண்டாடுகிறார்கள். நாங்கள் மொகரம் கொண்டாடுகிறோம். அவர்கள் பிணத்தை எரிக்கிறார்கள். நாங்க புதைக்கிறோம். விழாக்களும் மரணங்களும் ஒராண்டில் எப்போதோ நிகழ்வன. மற்றெல்லா நாட்களிலும் சேர்ந்தே சாப்பிடுகிறோம். சேர்ந்தே தூங்குகிறோம். அவன் முஸ்லீமா நான் இந்துவா என்று யாரும் கவலைப் படுவதில்லை. எங்களை யாராவது தொந்தரவு செய்தால் சேர்ந்தே சண்டை போடுவோம்.***

***தெருவோரச் சிறுவன் முகம்மது - பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு அளித்த பதில்.***

**இனப்படுகொலை**

***ஓரினத்தை, சமயக் குழுவை முழுமையாகவோ ஒரு பகுதியினரையோ அழிக்கும் வகையில் செய்யப்படும் செயலை இனப்படுகொலை என்கிறோம். இனப்படுகொலையை அரசுகள் தடுக்க வேண்டும். தண்டிக்கவும் வேண்டும்.***

***ஐக்கிய நாட்டவையின் இனப்படுகொலை பற்றிய உடன்படிக்கை, பகுதி 1***

# 9. மனிதப் பண்புகளும், உணர்வுகளும்

## கதை 1

### சிதறிய கொக்குகளும், கூடிவந்த மனிதர்களும்

கதிர் மதுரையில் ஒரு பள்ளியில் ஆறாம் வகுப்பு படிக்கிறான். அவன் அப்பள்ளியின் விடுதியிலேயே தங்கிப் படிக்கும் மாணவன். நல்ல வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன். காலாண்டுத் தேர்வு முடிந்து விடுமுறைக்காக சொந்த ஊருக்கு வந்திருந்தான். வீட்டுக்கு வந்த மறுநாள் காலை சாப்பிட்டு விட்டு வெளியே விளையாடச் சென்றான். அவன் வீட்டைச் சுற்றி நிறைய வயல்கள் இருந்தன. வயல்களின் நடுவே குளம் ஒன்று இருந்தது. கதிர் கையில் கவண் ஒன்று வைத்திருந்தான். கவணில் கல்லை வைத்து சும்மா அப்படியும் இப்படியும் எறிந்துகொண்டே சென்றான்.

அவன் அப்படியே வந்துகொண்டிருந்தபோது குளத்தருகே நிறைய கொக்குகள் இருப்பதைப் பார்த்தான். கொக்குகளைப் பார்த்தவுடன் இக்கொக்குகளை ஏன் கவணால் எறியக் கூடாது என்று நினைத்தான். ஒரு கல்லை கவணில் வைத்துக் கொக்கை நோக்கி எறிந்தான். ஒரு கொக்கின் தலையில் பட்டென்று போய் கல் அடித்தது. வலி தாங்க முடியாமல் கொக்கு அப்படியே விழுந்தது. அடிபட்ட கொக்கு விழுந்தவுடன் மற்ற கொக்குகளெல்லாம் அப்படியே பயத்துடன் சிறகடித்து பறந்து போய் விட்டன.

கதிருக்கு சந்தோசம் தாங்கவில்லை. மீண்டும் கொஞ்ச தூரம் நடந்து வருகிறபோது வயல்களில் நிறைய பெண்கள் நாற்று நட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்தான். வயல்களின் வரப்புகளில் அப்பெண்களின் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. எல்லாரும் கூலித்தொழிலாளிகளின் பிள்ளைகளில்லையா ? சில பிள்ளைகள் சட்டை போட்டிருந்தாங்க. சில பிள்ளைகள் சட்டையே போடல. கொக்கை அடித்த சந்தோசத்தில்

வந்த கதிர் இந்தக் குழந்தைகளையும் அடிப்போமா என்று நினைத்தான். உடனே கவணில் ஒரு கல்லை வைத்து ஒரு குழந்தையைப் பார்த்து அடித்தான். ஒரு குழந்தையின் காலில் கல் ணங்கென்று அடித்தது. கல்லடி பட்ட குழந்தை ஓவென அலறியது. இந்தச் சத்தத்தைக் கேட்டவுடன் நாற்று நட்டுக்கொண்டிருந்த அக்குழந்தையின் தாய் அலறியடித்துக் கொண்டு ஓடிவந்தாள். அந்தத் தாய் மட்டுமல்ல. அவளோடு வயலில் நின்றிருந்த எல்லாப் பெண்களும் 'ஐய்யோ ஐய்யோ'வென்று குழந்தையை நோக்கி ஓடி வந்தனர்.

இக்கதையின் மூலம் என்ன அறிகிறோம்? ஒரு கொக்கு அடிபட்டவுடன் எல்லா கொக்குகளும் ஓடிவிட்டன. ஆனால் ஒரு குழந்தை அடிபட்டவுடன் யாரும் ஓடிப் போகவில்லை. எல்லோரும் அடிபட்ட குழந்தையை நோக்கி ஓடிவந்தனர்.

ஏற்கனவே நாம் படித்த சமூக வாழ்வு எனும் பாடத்தைக் கொஞ்சம் நினைச்சிப்பாருங்க. மனிதர்கள் சமூகமா வாழ்றவங்க; சமூகவுணர்வுள்ளவங்க. அதனாலதான் சமூகத்தில் ஒருவர் பாதிக்கப்பட்டவுடன் எல்லோரும் பாதிக்கப்படுறாங்க. இந்த உணர்வுகள் தாம் மனிதரை ஏனைய பிராணிகளிடமிருந்து வேறுபடுத்துகின்றன. இதனைத்தான் மனிதப் பண்பு என்கிறோம்.

***இந்த உணர்வு ஏன் சில சமயங்களில் வெளி வரமாட்டேங்குது? என்ன காரணம்?***

## மனிதப் பண்புகள்

மனித உணர்வுகள்

புயல் காற்றையும் மென்மையான காற்றையும் போன்றவை.

புயல் காற்று மரங்களை வேரோடு சாய்த்து விடும்.

ஆனால், மென்மையான காற்று மரங்களின் கிளைகளோடும், இலைகளோடும்

அழகிய குரலில் இன்னிசைபாடும்

கடினமான உணர்வுகள்

மனிதரையும், இயற்கையையும் அழிக்கும்.

மென்மையான உணர்வுகள்

மனிதரின் மாண்பையும் வளர்ச்சியையும் மதிக்கும்.

**நெஞ்சில் நேர்மை இருந்தால்**
**குணத்தில் அழகிருக்கும் ;**
**குணத்தில் அழகிருந்தால்**
**வீட்டில் நல்லிணக்கமிருக்கும் ;**
**வீட்டில் நல்லிணக்கமிருந்தால்**
**நாட்டில் ஒழுக்கமிருக்கும் ;**
**நாட்டில் ஒழுக்கமிருந்தால்**
**அவனியில் அமைதியிருக்கும்.** **- கன்பூசியஸ்**

**கதை 2**

## குட்டி மயிலு

தன் ஐந்து வயதுக் குழந்தையை தோளில் சுமந்தவாறு குடிசை முன் வந்து நின்றான் முருகப்பன்.

"***என்னய்யா எம்புள்ளைக்கி எப்படியிருக்குது? டாக்டர் என்ன சொன்னாரு?***" ஆர்வமாய் கேட்டாள் அவன் மனைவி வள்ளி.

"என்னத்தைச் சொல்றது.. புள்ளைக்கி வெசக் காய்ச்சலாம். ரொம்ப சாக்கிரதையாக இருக்கணுமாம். இன்னிக்கி சாயங்காலம் ஆறு மணிக்குள்ளே புள்ளையை ஆஸ்பத்திரியிலே சேர்க்கணுமாம்". சொல்லும்போதே துக்கம் கண்ணீராய் வெளிப்பட்டது "கவலைப்படாதே. அந்த மாரியாத்தா நம்பளைக்கைவிட மாட்டாய்யா. சாயங்காலம் நானும் ஆஸ்பத்திரிக்கு வர்றேன். சேத்துருவோம்" என்றாள் வள்ளி.

"அது ஒண்ணும் தர்ம ஆஸ்பத்திரியில்லே. தனியார் ஆஸ்பத்திரி. மொதல்ல ஆயிரம் ரூபா பணம் கட்டணுமாம். அப்பத்தான் அட்மிட் பண்ணுவாங்களாம். டாக்டர் வெபரமாச் சொன்னாருடி. புரியுதா?", "எங்கய்யா போறது ஆயிரம் ரூபாய்க்கு. நம்ப மாதிரி அன்னாடங்காய்ச்சிங்களுக்கு ஆருய்யாஆயிரம் ரூபா குடுப்பாங்க?" வள்ளி கவலையோடு கூறினாள்.

முருகப்பன் பீடியைப் பற்ற வைத்து நாலு தம் இழுத்தான். குடிசையின் மூலையில் சார்த்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் கண்ணில் பட்டது. சுறுசுறுப்பானான். லுங்கியைக் களைந்தான். அரை டிராயரும் முண்டா பனியனும் அணிந்துகொண்டான்.

"ஏய் வள்ளி, நான் வெளியே போயிட்டு வர்றேன். புள்ளை கண்ண முழிச்சதும் கஞ்சித்தண்ணி காய்ச்சிக் கொடு. நான் பொழுது சாயறதுக்குள்ள வந்துடுவேன்."

பெரிய கடைவீதி. அந்தக் கடைவீதியின் மையப்பகுதியில் ஒரு பெரிய திடல். முருகப்பன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வந்தான். சைக்கிளின் இரண்டு பக்கவாட்டிலும் பலூன்கள் கட்டப்பட்டிருந்தன. சைக்கிளை வேகமாக ஓட்டினான். 'உர்ர்ர்'. . . . என்ற சத்தம் காதைப் பிளந்தது. முருகப்பன் சைக்கிளில் வேகமாகச் சுற்றி அந்தத் திடலை வலம் வந்தான். 'உர்ர்ர்' என்ற சத்தம் அனைவரையும் ஈர்த்தது. "டேய் வாங்கடா சீக்கிரம் ஓடியாங்க. வித்தை காட்டப்போறாங்க" என்று ஒரு சிறுவன் கத்தினான். சில நிமிடங்களில் பெரியவர்கள், தாய்மார்கள், குழந்தைகள் திடலில் கூடி விட்டனர்.

"பெரியோர்களே, என்னைப் பெத்த தாய்மார்களே, வாலிபர்களே, குழந்தைகளே! உங்க அல்லாருக்கும் நான் கும்பிடு போடறேன். இப்போ நான் சைக்கிளில் சில சாகசங்கள் செஞ்சி காட்டப்போறேன். கடைசியா ட்யூப் லைட்டுகளை என் முதுகில் ஒடைக்கப்போறேன். நல்லாப் பாருங்க. அப்புறமா இந்த ஏழைக்கி ஏதாவது தர்மம் பண்ணுங்க. வேகாத வெயில்லே வித்தைக் காட்டப் போறேன். கொளந்தைப் பசங்க எல்லாம் ஜோராக் கைதட்டுங்க."

கூடியிருந்த சிறுவர்கள் உற்சாகமாகக் கரவொலி செய்தனர். முருகப்பன் சைக்கிளில் பல சாகசங்கள் செய்தான். அவன் செய்யும் சாகசங்களை அந்த பெரும் கூட்டம் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தது.

"கூடியிருந்த கூட்டம் ஆளுக்கு ஒண்ணு, ரெண்டுன்னு தர்மம் போட்டாக்கூட் போதுமே. . . ஆயிரம் ரூபாதேறிடும். புள்ளைய ஆஸ்பத்திரியில் சேர்த்துரலாம். புள்ளை எப்படி இளைச்சிப் போயிட்டான். ஆப்பிள், ஆர்லிக்ஸ்னு வாங்கி அசத்திப் போடணும்." முருகப்பன் தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டான்.

ஆயிற்று வித்தையின் கடைசிக் கட்டம். முருகப்பன் முண்டா பனியனைக் கழட்டினான். கருத்த மேனி, உழைத்து முறுக்கேறிய உடல்வாகு. பக்கத்தில் பியூஸ்போன டியூப் லைட் பல்புகள்.

"தர்மப் பிரபுக்களே இப்போ பாருங்க. இந்த டியூப் லைட்டுகளை ஒடைக்கப் போறேன்" என்றவன் ஒவ்வொரு டியூப் லைட்டாக எடுத்து தன் முதுகில் அடித்தான். டப் என்ற ஓசையுடன்அவை வெடித்துச் சிதறின. அவன் முதுகில் ஆங்காங்கே இரத்தம் வழிந்தது. கூட்டம் 'த்சொ, த்சொ' என அவனுக்காக அனுதாபப்பட்டது.

*ஆதாரம்: தினத்தந்தி குடும்ப மலர் 5.5.2002*

மேலே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு கதைகளையும் வாசித்துவிட்டீர்களா? இப்போ இரண்டு கதைகளையும் கொஞ்சம் அசை போடுங்க. அசை போட்டு கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடை காணுங்க பார்ப்போம்.

1. கொக்கைக் குறிவைத்துக் கல்லெறிந்தபோது மற்ற கொக்குகள் என்ன செய்தன?
2. ஏழைக் குழந்தைளை நோக்கிக் கவணெறிய வைத்த குணம் எது?
3. ஒரு குழந்தை கல்லெறிபட்டவுடன் நடவு வேலையிலிருந்த பெண்கள் என்ன செய்தார்கள்?
4. முருகப்பன் தன் மகன் நோய்வாய்ப்பட்டவுடன் என்ன செய்தார்?
5. நோய்வாய்ப்பட்ட மகனுக்காக என்ன செய்தார்?
6. இரு கதைகளிலும் வெளிப்படும் மனித உணர்வுகள் மனிதர்களின் இயல்பான குணங்கள் என்பதனை உணர்கிறாயா?
7. முருகப்பன் தன் குழந்தையைக் காப்பாற்ற இவ்வளவு கஷ்டப்பட வேண்டிய காரணம் என்ன?
8. முருகப்பன் குடும்பமும் குழந்தையும் இழந்த உரிமைகள் யாவை?

ஏன் கடலை உயர்த்திப் பேசுகிறோம்?
குளங்கள், ஆறுகளிலிருந்து வரும் நீர் அனைத்தையும்
அது பரந்த மனதோடு ஏற்றுக் கொள்கிறது.
மற்றவரது மனித மாண்பை மதித்து,
அவர்களை உன் இதயத்தில்
கடல்போல ஏற்றுக் கொள்ளும் பொழுதுதான்
நீயும் கடல்போல் உயர்ந்து விடுகிறாய்.

**வகுப்புப்பயிற்சி**

1) அ) மனித நேயத்தை வெளிப்படுத்தும் பத்து உணர்வுகளை எழுதுக.

1.

2.

3.

4.

5.

6.

7.

8.

9.

10.

நாயும், பூனையும் ஒன்றையொன்று விரும்புவதில்லை.
நாய் பூனையைத் துரத்தும் பொழுது
பூனை மரத்தின் மீதேறி அமர்ந்து கொள்கிறது.
ஆனால், நாய்க்குட்டியும், பூனைக்குட்டியும்
ஒன்றையொன்று விரும்பி, கொஞ்சி விளையாடும்.
மனிதர்களிடம் குழந்தை உள்ளம் இருந்தால்
ஒருவரையொருவர் மதித்து சமாதானமாக வாழ்வார்கள்.

ஒருநாள் காலையில் சூரியன் மலரிடம் பேசியது: 'இதமான இரவு இல்லாமல் இருந்தால் நீ நாள் முழுவதும் எனது சூரிய வெப்பத்தால் அவதிப்பட்டிருப்பாய். எனவே நீ கொடுத்து வைத்தவள்' என்றது.

மலர் கூறியது: 'சூரியனே பகல் நேரங்களில் உனது இதமான சூரிய ஒளியைக் கொடுத்து எனக்கு சக்தி அளித்ததற்காக உனக்கு நன்றி.'

அதுபோல் மனித உறவுகளும்

*மனிதருக்கு சக்தியையும் கரிசனையையும் தந்து*

*மனித மாண்புடன் வாழ உதவுகிறது.*

ஆ) இயல்பான மனித நேய உணர்வுகளுக்கு எதிரான பத்து தீய உணர்வுகளைப் பட்டியலிடுக.

1.

2.

3.

4.

5.

6.

7.

8.

9.

10.

2. கீழ்க்காணும் வரிகளில் மறைந்திருக்கும் உணர்வுகளைக் கண்டு பிடித்து எழுதுக.

அ) "அவளை அறையணும்போல் தோன்றுகிறது."

\- - - - -- - - - - - - - - -- -- - - - -- - - - - -- - - - - - - -

ஆ) "அந்த அநீதச் செயலை நான் ஒருபோதும் செய்ய மாட்டேன். "

\-- - - - - -- - - - - - - - - -- -- - - - -- - - - - -- - - - - - - -

இ) "உனக்கு என்னத்தச் சொல்லி மண்டையில ஏறப்போவுது. நீயெல்லாம் மனுசனா ?"

\- - - - - -- - - - - - - - - -- -- - - - -- - - - - -- - - - - - - -

ஈ) நான் என் வாழ்க்கையில் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் ஒரு போதும் லஞ்சம் வாங்க மாட்டேன்.

\- - - - - -- - - - - - - - - -- -- - - - -- - - - - -- - - - - - - -

உ) இவள்களெல்லாம் படிக்க வந்துட்டாள்களாம். படிச்சு என்ன கலெக்டராகப் போறாள்களோ ?

\- - - - - -- - - - - - - - - -- -- - - - -- - - - - -- - - - - - - -

ஊ) ஏழை மக்களுக்கு நான் எப்போதும் உதவி செய்வேன்.

\- - - - - -- - - - - - - - - -- -- - - - -- - - - - -- - - - - - - -

ஒருவரது உணர்வுகளே மற்றவரது உணர்வுகளை உணரும்.

எ) உன் மவ ஆசுபத்திரியிலேயிருந்தா எனக்கு என்னடா அக்கறை ? நான் என்ன காசா கொட்டிவச்சிருக்கேன் உனக்கு கொடுக்க ? இல்ல நீதான் என்கிட்டே கொட்டி வெச்சிருக்கியா ? போடா பிச்சைக்கார நாயே.

\- - - - - -- - - - - - - - - -- -- - - - -- - - - - -- - - - - - - -

ஏ) எனக்கு உதவி செய்பவர்களை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்.

\- - - - - -- - - - - - - - - -- -- - - - -- - - - - -- - - - - - - -

ஐ) நான் யார்னு நெனச்சே? என் சுண்டுவிரலை அசைச்சா ஊர்ல உள்ள அத்தனை பொண்டுகளும் பயல்களும் என் காலில் வந்து விழும்னு உனக்குத் தெரியுமா? நீ நேத்து வந்த வாத்தியாரு. மரியாதையா உன் வேலையைப் பாரு. புரட்சி கிரட்சின்னு பேசினே, உன் வாலை ஒட்ட அறுத்துடுவேன்.

- - - - -- - - - - - - - -- -- - - - -- - - - - - -- - - - - - - -

ஒ) நீ மகாராசியா இருக்கணும். நீ நெனச்சதெல்லாம் கைகூடணும். சந்தோசமா போயிட்டு வாம்மா.

- - - - -- - - - - - - - -- -- - - - -- - - - - - -- - - - - - - -

ஓ) ராமு, நேத்து நடந்த நாடகத்துல நீ அருமையா நடிச்சே. என் நெஞ்சார்ந்த பாராட்டுகள். எதிர்காலத்துல நீ பெரிய நடிகனா வரணும்னு எனக்கு ஆசை.

- - - - -- - - - - - - - -- -- - - - -- - - - - - -- - - - - - - -

ஔ) கோடிக்கணக்கில ஊழல் செய்த அமைச்சரைத் தண்டிச்சது சரிதான்.

- - - - -- - - - - - - - -- -- - - - -- - - - - - -- - - - - - - -

3. கீழ்க்காணும் செயல்களை வாசிக்கும்போது என் உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகள்.

**நிகழ்வு 1 :** தாசில்தார் அலுவலகத்தில் சாதிச்சான்றிதழ் வாங்குபவர்களிடம் ரூபாய் 50 லஞ்சமாக வாங்குகின்றனர். இதைக்கேட்கும்போது என் உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகள்.

- - - - -- - - - - - - - -- -- - - - -- - - - - - -- - - - - - - - -

**நிகழ்வு 2:** நகரங்களை அழகுபடுத்தக் குடிசைப் பகுதிகளைஅப்புறப்படுத்தும்போது, மக்கள் படுகின்ற துன்பத்தைப் பார்க்கும்போது என்னுள் எழும் உணர்வுகள்.

- - - - -- - - - - - - - -- -- - - - -- - - - - - -- - - - - - - - -

**நிகழ்வு 3:** என்னைப்போல் பள்ளியில் படிக்க வேண்டிய குழந்தைகள் தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும், உணவகங்களிலும் வேலை செய்வதைப் பார்க்கும்போது என்னில் ஏற்படும் உணர்வுகள்.

- - - - -- - - - - - - - -- -- - - - -- - - - - - -- - - - - - - - -

**நிகழ்வு 4:** என் பக்கத்து வீட்டுக்காரர் அவருடைய மனைவியை அடித்துத் துன்புறும்போது என்னில் ஏற்படும் உணர்வுகள்.

- - - - -- - - - - - - - -- -- - - - -- - - - - - -- - - - - - - - -

**நிகழ்வு 5:** நாம் அசிங்கம் எனக் கருதும் மலத்தை, மனிதர்களில் ஒரு சிலரே வாழ்நாள் பணியாகச் சுத்தம் செய்யும் போது என்னில் ஏற்படும் உணர்வுகள்.

– – – – –– – – – – – – – –– –– – – –– – – – –– – – – – – – –

**நிகழ்வு 6:** நம்மைப்போலவே மனித வடிவில் இருப்போர் சிலரை நமது சொற்களாலும் செயல்களாலும் கேவலமாக நடத்தப்படுகின்றபோது என்னில் ஏற்படும் உணர்வுகள்.

| **நிகழ்வுகள்** | **உணர்வுகள்** | | |
|---|---|---|---|
| **நிகழ்வு ஒன்று** | 1. | 2. | 3. |
| **நிகழ்வு இரண்டு** | 1. | 2. | 3. |
| **நிகழ்வு மூன்று** | 1. | 2. | 3. |
| **நிகழ்வு நான்கு** | 1. | 2. | 3. |
| **நிகழ்வு ஐந்து** | 1. | 2. | 3. |
| **நிகழ்வு ஆறு** | 1. | 2. | 3. |

4) உன்னிடம் இருப்பதாக நீ கருதும் நல்ல பண்புகளை ஒரு தாளில் எழுதி வாசிக்கவும்

| | | |
|---|---|---|
| 1. | 2. | 3. |
| 4. | 5. | 6. |
| 7. | 8. | 9. |

திடீரென்று வேகமாகப் பெய்யும் மழை
பூமியின் உள்பரப்பை நனைக்காது.
அது வேகமாக ஓடிவிடும்.
நின்று அமைதியாக பெய்யும் மழை
பூமியின் அடிப்பரப்பை நனைக்கும்.
மரம், செடி, கொடிகளுக்கு உரமூட்டும்.
நமது உணர்வுகளும் இப்படித்தான்.
எதிர்மறை உணர்வுகள்
வேகமாக நமது உள்ளத்திலிருந்து வெளிவரும்.
ஆனால், எவ்விதப் பயனும் தராது.
நேர்மறை உணர்வுகள்
பிற உள்ளத்திற்கு இதமாக இருக்கும்.
இவைகள் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் போன்றவரின்
மனித மாண்பை வளர்க்கும்.

5. இப்பண்புகளுக்குள் உனக்குப் பிடித்த ஐந்து பண்புகளை மட்டும் தேர்வு செய்து ஏன் அவைகள் உனக்குப் பிடிக்கும் என்ற காரணத்தையும் எழுதுக.

| எனக்குப்பிடித்த என் பண்புகள் | காரணம் |
|---|---|
| 1 | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

6. இந்த ஐந்த நல்ல பண்புகளில் உன்னைப் பொறுத்தவரையில் எந்த ஒரு பண்பு இச்சமூகத்திற்கு அதிகப் பயன் தரும்? எப்படிப் பயன் தரும்? என்பதனை எழுதுக

| ஒரு நல்ல பண்பு | அதிகப் பயன் | எப்படிப் பயன் தரும் |
|---|---|---|
| | | |

7. உன்னிடமிருக்கின்ற தீய குணங்கள் எவை என்று கருதுகிறாய்?

| | | |
|---|---|---|
| 1. | 2. | 3. |
| 4. | 5. | 6. |
| 7. | 8. | 9. |

8. உனது தீய குணங்களில் எந்தக் குணம் இச்சமூகத்திற்கு அதிகத் தீமை விளைவிக்கும்? அது எப்படிப்பட்ட பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் எழுதுக.

| ஒரு தீய குணம் | அதிகப் பாதிப்பு | எப்படிப்பட்ட பாதிப்பு |
|---|---|---|
| | | |

9. உன் மனத்தைத் தொட்ட ஒரு நல்ல மனிதர் யார்? இவரிடம் உனக்குப் பிடித்த ஐந்த நல்ல பண்புகள் யாவை? இவரின் பண்புகளை நீ விரும்பக் காரணம் என்ன?

| நல்ல மனிதர் | நல்ல பண்புகள் | காரணம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

10. உன் மனதிற்குப் பிடிக்காத மனிதர் யார்? அவரிடம் உனக்குப் பிடிக்காத ஐந்து தீய குணங்கள் யாவை? ஏன்?

| பிடிக்காத மனிதர் | தீய குணங்கள் | காரணம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

11. அமைதியாகக் கண்களை மூடி, உன் வகுப்பு மாணவர்களை மனக்கண் முன் கொண்டு வரவும். இவர்களிடம் நீ கண்ட பண்புகளைப் பட்டியலிடவும்.

| அ. பிடித்த பண்புகள் | ஆ. பிடிக்காத பண்புகள் |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |

**வீட்டுப்பயிற்சி**

12. உன் அம்மாவிடம் அல்லது அப்பாவிடம் அல்லது உன் குடும்பத்திலுள்ள ஒரு பெரியவரிடம் கேட்டுப் பட்டியல்படுத்துக. இதனை வகுப்பில் பகிர்ந்து கொள்க. அதன் பிறகு ஆசிரியர் மாணவர்களைச் சிந்திக்க வைக்கும் கேள்விகளைக் கேட்டு, இறுதியில் தனது ஒருங்கிணைந்த சிந்தனைகளை மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வார்.

| **சமுதாயத்தை வளர்க்கக்கூடிய பத்து மனிதப் பண்புகள்** | **சமுதாயத்தைச் சிதைக்கக்கூடிய பத்து தீய குணங்கள்** |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |
| 6. | 6. |
| 7. | 7. |
| 8. | 8. |
| 9. | 9. |
| 10. | 10. |

**இந்தியாவில் வாழக்கூடிய ஒவ்வொரு குடிமகனும் தனது பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் மதித்துப் பாதுகாக்க கடமைப்பட்டவர்கள்.**

**பிரிவு 51-அ, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950**

# 10. நீதி உணர்வு

**நிகழ்வு 1**

### வாழ்நாளெல்லாம் ஊருக்கு ஒழைச்சோமே

கருப்பசாமியும் முத்தம்மாளும் வயது முதிர்ந்தவர்கள். சலவைத் தொழிலாளர்கள். பல ஆண்டுகளாக சலவைத் தொழில் செய்து வாழ்ந்த இவர்களுக்கு வயசாயிருச்சுன்னு ஊர் மக்கள் இவங்களை ஊரை விட்டுக்காலி பண்ணச் சொல்றாங்க. ∀எங்களுக்கு வயசாயிடிச்சி. உடல் நலமில்லை. மகனும் எங்களுடன் இல்லை. இனிமேல் ஊர்மக்கள் துணியைச் சலவை செய்ய முடியாதுன்னு என்று ஊர் மக்களிடம் சொன்னோம். உடனே ஊர் மக்கள் எங்களுக்குச் சலவை செய்ய முடியாதுன்னா ஊரிலே இருக்கக் கூடாதுன்னு சொல்லி வீட்டைக் காலி பண்ணச் சொல்றாங்க. நாங்க காலி பண்ணல. அதனால நாங்க அனுபவிக்கிற கொடுமை . . . . எதிரிக்குக் கூட இந்த நிலை வரக் கூடாது. ஊருல எங்களை ஒதுக்கி வச்சிட்டாங்க. ஊருக்குள்ள யாரும் எங்ககிட்ட பேசுறதில்லை. குடிக்க தண்ணி கேட்டாலும் தரமாட்டாங்க. ராத்திரியில் வீட்டு ஓட்டு மீது கல் கல்லா வந்து விழுது. விறகெல்லாம் தீ வச்சிட்டாங்க. வெள்ளாவிப் பானையையும் அடிச்சு உடைச்சிட்டாங்க. வயதான காலத்தில அனாதையா நிற்கிறோம்∀ என்று அழ ஆரம்பித்தார் முத்தம்மா.

*தமிழன் எக்ஸ்பிரஸ், சனவரி 2002*

**நிகழ்வு 2**

### வேலைக்குப் போனாள், வெந்து திரும்பினாள்

"என் பொண்ணுதாங்க சித்ரா. வாயைக் கட்டி வயித்தைக் கட்டி வாழக்குருத்து மாதிரி வளர்த்த பொண்ணு இப்ப வாழைஇலையில கிடக்கிறத பாத்தீங்களா சாமீ . . . " ஓவென ஒப்பாரி வைத்தார் பூபதியம்மாள். "எனக்கு ஒத்தாசையா வயல் வேலை செஞ்ச பொண்ணை ஒருத்தரின் வீட்டு வேலைக்கு அனுப்பினேன்."

"கொஞ்ச நாள் கழிச்சு அந்த வீட்டுக்காரங்க அவங்களோட சொந்தக்காரங்க வீட்டுக்கு சித்ராவை வேலைக்கு அனுப்பிவிடச் சொன்னாங்க. போன தை மாசம் கொண்டுபோய்விட்டேன். மூணு வேளை சோறு போட்டு மாசம் நூத்தி அம்பது ரூபா தர்றதா சொன்னதோட கண்ணாலம் காட்சின்னா பண்ட பாத்திரம் வாங்கித் தர்றதாகவும் கொன்னாங்க."

"போன அமாவாசை அன்னிக்கு திடீர்னு காலையில பதினொரு மணியிருக்கும். ரெண்டு பேரு பைக்கில என்னைத் தேடி வந்து உங்க பொண்ணு வாந்தி வயித்தால போய் மாயவரம் தனியார் ஆஸ்பத்திரியில சேர்த்திருக்காங்க, போய்ப் பாருங்கன்னு இருபது ரூபாயும் கொடுத்தாங்க. ஓடி வந்து பார்த்தா உடம்பெல்லாம் தீயில பாளம் பாளமா வெடிச்சு சிதைஞ்சு, பேச்சு மூச்சில்லாம கருகிக் கிடக்கிறா."

"கொண்டாந்து சேர்த்தவங்க ரெண்டாயிரம் ரூபா கொடுத்தாங்க. அதுக்கு வைத்தியம் பார்த்தாச்சு. மேற்கொண்டு வைத்தியம் செய்ய பணம் இல்லைன்னா தூக்கிட்டுப் போயிடுங்கனு வெளியே தள்ளிட்டாங்க. பிறகு கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியில சேர்த்தேன். இங்கே வந்ததும் நல்லா கவனிச்சாங்க. தெளிவா பேச ஆரம்பிச்சா. டாக்டர், போலீஸ், நீதிபதின்னு எல்லார்கிட்டயும் நடந்ததைச் சொன்னா. அவுங்க வாக்குமூலம் வாங்கியிருக்காங்க", என்று விசும்பினார் பூபதியம்மாள்.

ரணக்காயங்களுடன் மனக்காயமும் சேர்ந்து சித்ராவை வாட்ட அவர் மெள்ள மெள்ள பேசினார். "அவங்க வீட்ல ஒரு வருசமா வேலை செஞ்சேன். அவுங்களை அக்கான்னுதான் கூப்பிடுவேன். அந்த வீட்டிலுள்ள அண்ணனுக்கு சாப்பாடோ காபியோ நான் கொடுக்கிறது அக்காவுக்குப் பிடிக்காது. உன்னை ஒரு நாளைக்கு என்ன செய்யிறேன் பாரு என்று ஒரு தடவை சொன்னாங்க."

"நான் எந்தத் தப்பும் பண்ணலை. அதனால சீரியசாக எடுத்துக்கலை. சம்பவத்தன்னைக்கி காலையில் அவுங்க செருப்பை எடுத்து என் பையில் வெச்சிட்டு நான் திருடி வெச்சிருக்கிறதா குத்தம் சொல்லி அடிச்சாங்க. அவுங்க பொண்ணும் அக்காவும் சேர்ந்து உங்க சாதி புத்தின்னு சாதி பேரைச் சொல்லித் திட்டி, துடைப்பக்கட்டையாலும் செருப்பாலுமா ரொம்ப நேரம் அடிச்சாங்க. உங்களுக்குப் பிடிக்கலைன்னா நான் ஊருக்கு போயிடறேன்னு சொன்னேன். உன்னை உயிரோடு விட்டாத்தானே ஊருக்குப் போவேன்னு சொல்லி டாய்லெட்டுக்கு தள்ளிக்கிட்டுப் போய் என் மீது மண்ணெண்ணெயை ஊத்தி தீ வெச்சுட்டு வெளிப்பக்கம் தாழ்ப்பாள் போட்டுக்கிட்டாங்க."

"ஐயோ! அக்கா, காப்பாத்துங்க காப்பாத்துங்கன்னு கதறினேன். நான் போட்ட சத்தம் கேட்டு பக்கத்துல வேலை செஞ்சிகிட்டிருந்த ஒரு பொண்ணுதான் கதவைத் திறந்து விட்டுச்சு. நான் ஓடிப்போய் தண்ணித் தொட்டியில விழுந்தேன். அப்புறம் என்ன நடந்ததுன்னு தெரியலை. ஆஸ்பத்திரி வந்த பிறகுதான் நினைவு திரும்பிச்சு. "

"இப்பவும் சொல்றேன் நான் ஒரு தப்பும் பண்ணலை. என்னைக் கொலை பண்ற அளவுக்கு அக்காவுக்கு எப்படித்தான் மனசு வந்ததோ, இனி நான் பொழைப்பேனா", என்று விம்மி விம்மி அழுதார் சித்ரா.

***ஜூனியர் விகடன் 3.4.2002***

## நிகழ்வு 3 குகைக்குள் ஒரு சமூகம்

தருமபுரி மாவட்டம் ராயக்கோட்டை வாழும் பழங்குடி மக்கள் இருளர்கள். இவர்கள் பாறைக் குகைகளில்தான் முடங்கிக் கிடக்கிறாங்க. முன்பு இவர்கள் வாழ்ந்த பகுதிகளை வெளியார் வந்து பட்டா போட்டுக்கொண்டு கேழ்வரகு முதலிய தானியங்களைச் சாகுபடி செய்ய ஆரம்பித்ததும் இவர்களை அங்கிருந்து துரத்திட்டாங்க. சொந்த நிலத்தையெல்லாம் அறியாமையால் இழந்துவிட்ட இவங்க சந்தையிலிருந்து மாவு வாங்கி வந்து கூழ்காய்ச்சிக் குடிக்கிறாங்க. பசியை அடக்குவதற்காக ரிப்பன் போல ஒரு துண்டுத் துணியை வயிற்றைச் சுற்றி இறுகக் கட்டிக்கிறாங்க.. இவங்களை வேறு கோயில்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதேயில்லை. இவங்கள்ல யாருமே படிக்கலை.

பள்ளிக்கூடத்திற்கு மூன்று நாட்கள் சென்றுவிட்டு நின்றுவிட்டவன் ராஜா (வயது 19). ∀படிக்க ஆசைதாங்க. வழி வேணும்ல. சாப்பிடவே கஷ்டப்படுகிறோம். ராதாலிப்பழம் பத்து சாப்பிட்டா வயிறு நிறையும்,∀ என்கிறான் ராஜா. கள்ளி முள்ளி என்ற கள்ளி வகையும் இவங்க பசியாற உதவுது.

இவர்கள் இதுவரை மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சேர்க்கப்படவேயில்லை என்பதுதான் பெரிய விசயம். இவர்கள் பலருக்குச் சாதிச் சான்றிதழ் கிடைக்காததாலும் படிப்பையும் தொடர முடியவில்லை. வீட்டுவசதி, சாலை வசதி, குடிநீர்வசதி, மின் வசதி, குடும்ப அட்டை போன்றவசதிகள் எதுவும் இல்லை. இந்தப் பழங்குடி மக்களின் சனத்தொகையும் அதிகரிக்காம அதே எண்ணிக்கையில்தான் இருக்கிறாங்க.

***இந்தியா டுடே, மார்ச் 14, 2001***

பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா !
மோதி மிதித்துவிடு பாப்பா ! - அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா

- பாரதி

**வகுப்புப் பயிற்சி**

1. மூன்று உண்மை நிகழ்வுகளையும் மூன்று குழுக்களாகப் பிரிந்து வாசிக்கவும். ஒவ்வொரு குழுத் தலைவரும் வகுப்பறையில் எல்லோர் முன்னிலையுலும் தாம் வாசித்த நிகழ்வினைச் சுருக்கமாகச் சொல்லவும்

2. பிறகு இந்த நிகழ்வுகளில் சொல்லப்பட்ட மனிதர்களை இப்படி நடத்துவது சரி அல்லது தவறு என்று மூன்று மாணவர்கள் வகுப்பில் பேசவும்.

3. ஒவ்வொரு நிகழ்விலும் பாதிக்கப்பட்ட மனிதர்கள் யார் என்பதைக் கரும்பலகையில் எழுதவும்.

4. இவர்கள் இப்படி நடத்தப்படுவது நீதியில்லை என்பதற்கான காரணங்களை கரும் பலகையில் எழுதவும்.

5. பாதிக்கப்பட்டோர் உரிமை மறுக்கப்பட்டவர்கள் என்பதைப் புரிஞ்சிருப்பீங்க. என்னென்ன உரிமைகள் மறுக்கப்பட்டது என்பதை வரிசைப்படுத்தவும்.

| வ.எண் | இனம் | இழந்த உரிமைகள் |
|---|---|---|
| 1. | பழங்குடி மக்கள் | |
| 2. | தாழ்த்தப்பட்ட முதியவர்கள் | |
| 3. | வேலைக்குப் போன பெண் | |

**எடுத்துக்காட்டு**

இழந்த உரிமைகள் (உ–ம்)
1. உணவுரிமை
2. வேலையுரிமை
3. கல்வியுரிமை

**சமூகத்தின் செல்வமனைத்தும் பொதுநலத்திற்குப் பயன்படுமாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.**
**பிரிவு 39(ஆ), இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950**

6. ஏழைகள், விதவைகள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு கொடுக்கும் நிலத்தையோ, குடியிருப்பையோ வசதி படைத்தோர் பறித்துக்கொள்வது சரியா? காரணங்களை எழுதுக.

7.அநீதி நிகழ்ச்சிகளை நீ காணும்போது உன்னிடம் எழும் உணர்வுகள் யாவை என்பதனை எழுதுக.

8) நீதி என்றால் என்ன? அநீதி என்றால் என்ன? சில உதாரணங்களோடு எழுதுக.

9) நீதிக்காக உழைத்த பெரிய மனிதர் அல்லது உங்கள் ஊரில் வாழ்கின்ற மனிதர் ஒருவரின் வாழ்வைப்பற்றி 20 வரிகளுக்கு மிகாமல் ஒரு கட்டுரை வரைக. இந்த மனிதரைப் பற்றி உன் பாடப்புத்தகத்தில் படித்திருக்கலாம், கேள்விப்பட்டிருக்கலாம். அல்லது நேரடியாகச் சந்தித்திருக்கலாம்.

**வளர்ச்சி மற்றும் சமூக நீதிக்கான உரிமை: ஒவ்வொரு தனி மனிதருக்கும் வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்கும், சுரண்டல் மற்றும் தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிரான பாதுகாப்புப் பெறவும் உரிமை உடையவர்கள். கல்வி மற்றும் அறிவு பெறவும், உணவு, சுத்தமான குடிநீர் மற்றும் வீடு ஆகியன பெறவும் நலமான இருத்தலுக்காக மருத்துவ வசதி பெறவும் நமக்கு உரிமை உண்டு. தொழில் நுட்பம் மற்றும் உலகப் பொருளாதார வளர்ச்சியின் பயன்களைப் பகிர்ந்து கொள்ள எல்லாத் தனி மனிதர்களுக்கும் மனிதக் குழுக்களுக்கும் உரிமை உண்டு.**

**பிரிவு 7 : 1, ஆசிய மனித உரிமைகள் சாசனம், 1998**

**10)** ஒரு தாய்க்கு இரு குழந்தைகள். ஒரு குழந்தை நல்ல அறிவுள்ள ஆரோக்கியமான குழந்தை. மற்றொரு குழந்தை உடல் ஊனமுற்ற குழந்தை. இரண்டு குழந்தைகளையும் ஒரு தாய் சமமாக நடத்தினால் நீதியா ? அநீதியா ? ஏன் ?

**10) ஒரு நர்சரி பள்ளியில் சேர இரு குழந்தைகள் வருகின்றனர். ஒரு குழந்தை ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தது. அக்குழந்தையின் பெற்றோர் அதிகம் படிக்காதவர்கள். ஏழைகள். மற்றொரு குழந்தை பணக்காரக் குடும்பத்துக் குழந்தை. அக்குழந்தையின் பெற்றோர் நன்கு படித்தவர்கள். இருவருக்கும் நுழைவுத் தேர்வு வைக்கப்படுகிறது. தேர்வில் இருவருக்கும் ஒரே மாதிரியான கேள்விகள் கேட்கப்படுகின்றன. இவர்களில் எந்தக் குழந்தை அதிக மதிப்பெண்கள் வாங்கும்? நிச்சயமாக படித்த பெற்றோர்களின் குழந்தை தான் நல்ல மதிப்பெண்கள் வாங்கும். நுழைவுத் தேர்வின் அடிப்படையில் நல்ல மார்க் வாங்கிய குழந்தைக்கு மட்டும் பள்ளியில் இடம் கொடுத்தால் இது நீதியா? அல்லது அநீதியா? ஏன்?**

**11)** தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஏழைக் குழந்தைகளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள், உடை இலவச பஸ் பாஸ், தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு உதவித்தொகை ஆகியவற்றை அரசு வழங்குதல். இது நீதியான செயலா அல்லது அநீதியான செயலா ? ஏன் ?

**கிணறுகள், குளங்கள், சாலைகள், கடைகள், உணவுக்கூடங்கள் இவைகளை வேறுபாடின்றி பயன்படுத்தும் உரிமை அனைவர்க்குமுண்டு.**

**பிரிவு 15, இந்திய அரசியலமைப்புச் சட்டம், 1950**

13) உங்க ஊர்ல ஒரு கட்டட வேலை நடக்குது. கட்டடத்துல பெண்ணும் ஆணும் சித்தாள் வேலை செய்றாங்க. ஒரே மாதிரியான வேலைதான் செய்றாங்க. ஆனா ஆண் சித்தாளுக்கு மட்டும் அதிக சம்பளம் கொடுக்கிறாங்களே, இது நீதியா? அநீதியா? ஏன்?

14. கீழ்க்காணும் கேள்விகளுக்குச் சரி, சரியில்லை என்று பதில் தரவும்

| | ***சரி*** | ***சரியில்லை*** |
|---|---|---|
| 1. தெருவோரச் சிறுவர்கள் வீதியை அசுத்தப்படுத்துகிறார்கள். ஆகவே அவர்களைத் தண்டிக்க வேண்டும். | | |
| 2. திருடர்கள் உண்மை பேசமாட்டார்கள். ஆகவே, உண்மையை வரவழைக்கத் திருடர்ளைச் சிறைச்சாலையில் சித்ரவதை வேண்டும். | | |
| 3. ஆண்களைவிடப் பெண்கள் அதிகம் படிக்க அவசியமில்லை. | | |
| 4. நகரத்தை அலங்கரிக்க ஏழைக் குடிசைகளைக் காலி செய்வதில் தவறில்லை. | | |
| 5. ஆண் – பெண் பாகுபாடு காட்டாமல் பெற்றோர்கள் குழந்தைகளைச் சமமாக வளர்க்க வேண்டும். | | |
| 6. அரசாங்கம் திறமைக்குதான் மதிப்பு கொடுக்க வேண்டும். சாதி பார்க்கக் கூடாது. | | |
| 7. பல சமயங்கள் இருப்பது ஒற்றுமைக்கு ஆபத்து. ஆகவே இந்தியாவில் ஒரே சமயம்தான் இருக்க வேண்டும். | | |

***அரசு மக்களில் நலிந்த பிரிவினர், குறிப்பாக பட்டியல் குலத்தினர், பட்டியல் பழங்குடியினர் ஆகியோரின் கல்வி, பொருளாதார நலன்களைப் பேணி வளர்க்க வகை செய்ய வேண்டும். சமுதாய அநீதியிலிருந்தும் அனைத்து வகையான சுரண்டல்களிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.***

***பிரிவு 46, இந்திய அரசியலமைப்புச் சட்டம், 1950***

**நாங்கள் வாழ முடியாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சாக முடியாமல் செத்துக்கொண்டிருக்கிறோம். இருப்பினும் சக்தியுள்ள மக்களாக ஒரு நாள் மாறுவோம் என்ற நம்பிக்கையில் வாழ்கிறோம்.**

**- ராஜன், தலித் கவிஞர்**

**வகுப்புப் பயிற்சி**

15) மாணவர்கள் குழுக்களாகச் சென்று தாங்கள் கண்ட நீதி அல்லது அநீதியான நிகழ்வு ஒன்றைக் கலந்துரையாடி அதைச் சிறு நாடக வடிவத்தில் வகுப்பில் நடித்துக்காட்டவும்.

(அ) அண்மையில் செய்தித்தாளில் வெளியான நீதி அல்லது அநீதி நிகழ்வு பற்றிய செய்தி ஒன்றை வகுப்பிற்குக் கொண்டு வரவும்.

(ஆ) மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரிக்கவும். ஒவ்வொரு குழுவும் துண்டுச் செய்திகளை வைத்து ஒரு போஸ்டர் தயாரிக்கவும்.

(இ) போஸ்டரை வகுப்பு மாணவர்களுக்குக் காட்டி குழுவினர் துண்டுச் செய்திகளைப் பற்றிய விவாதத்தை வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.

(ஈ) இறுதியாக ஆசிரியரின் சிந்தனைகள் பகிரப்படும்.

(உ) மாணவர்கள் கொண்டுவந்திருந்த துண்டுச் செய்திகளை மற்ற மாணவர்களின் பார்வைக்காக ஏதாவது ஒரு பொது இடத்தில் வைக்கவும்.


**பூர்வீகக் குடிகளை அவர்கள் வாழுமிடத்திலிருந்தோ நிலத்திலிருந்தோ கட்டாயமாக இடம் பெயரச் சொல்ல யாருக்கும் உரிமை இல்லை.**

**(ஐக்கிய நாட்டவையின் பூர்வீகக் குடிகளுக்கான உரிமைப் பிரகடனம். பகுதி 3, பிரிவு 10.**

# 11. சமத்துவ உணர்வு

**மாணவர்களே!**

**உங்களுக்கெல்லாம் தந்தை பெரியாரைப் பற்றித் தெரிந்திருக்கும். அவர் படத்தைப் பல இடங்களில் பார்த்திருப்பீங்க. அவர் பெயர்ல பல கட்டடங்களைப் பார்த்திருப்பீங்க. அவர் பெயர்ல பல்கலைக்கழகம், கல்லூரிகள் எல்லாம் இருக்கு. ஏன் இவர் பெயரை வைச்சிருக்காங்க. ஏன் இன்னும் அவரைப் புகழ்ந்து பாராட்டுகிறோம் ? அவரைப் பற்றிய ஒரு நிகழ்ச்சியை கேளுங்க.**



தந்தை பெரியார் இளமைப் பருவத்தில் காசியாத்திரை சென்று ஊரைச் சுற்றிப் பார்க்க விரும்பினார். தன் அப்பாவிடம் சென்றார்; தேவையான பணம் வாங்கிக் கொண்டார். காசிக்கு நண்பர்களுடன் சென்றார். ஊரைச் சுற்றிப் பார்த்துக் கையிலிருந்த பணத்தையெல்லாம் செலவிட்டார். அவருடன் வந்த நண்பர்கள் ஊருக்குத் திரும்பினர். ஆனால், அவரிடம் பணம் ஏதும் இல்லை. காசு தீர்ந்த மறுநாள் காலை முழுதும் பட்டினி கிடந்தார். இலவசமாக உணவு கிடைக்கும் இடம் தேடி அலைந்தார்.

மடம் ஒன்று கண்ணில் தென்பட்டது. மதிய நேரம், பசி மயக்கம். ஆவலுடன் உள்ளே நுழைந்தார். அங்கே பலரும் உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் அவரை மடத்துக்கு வெளியே விரட்டியடித்தனர். ஏனென்றால் அது உயர்ந்த சாதியினருக்கு இலவசமாக உணவு வழங்கிய மடம். மடத்துக்கு வெளியே வந்து விழும் எச்சில் இலைகளுக்காகக் காத்திருந்தார். அது வந்து விழுந்ததும் ஓடோடிச் சென்றார். எச்சில் இலை மிச்ச உணவை வழித்துச் சாப்பிட்டார். அவர் நெஞ்சின் ஆழத்தில் ஓர் ஆழமான காயம் ! தான் ஒரு கீழ்ச்சாதியானாக நடத்தப்பட்ட அனுபவத்தை அவரால் வாழ்வின் கடைசி வரை மறக்க முடியவில்லை.

**1.அனைத்து குடிமக்களுக்கும் அரசுப் பணிகளிலும், பதவியிலும் சமத்துவம் இருத்தல் வேண்டும்.**
**2.சமயம், இனம், குலம், பாலினம், குடிவழி, பிறப்பிடம், உறைவிடம் முதலியவற்றை காரணங்களாகக் கொண்டு அரசின் வேலை, பதவிகளில் குடிமக்களிடம் பாகுபாடு காட்டல் கூடாது.**

**- பிரிவு 16, இந்திய அரசியலமைப்புச் சட்டம், 1950.**

நாம இப்போ பேசுறோமே மனித மாண்பு – இம்மாண்பைக் காக்கத்தான் கடைசி வரை தந்தை பெரியார் போராடினார். இச்சமூகத்தில் வாழும் எல்லோர்க்கும் சுயமரியாதை வேணும் என்று சொன்னார். இந்தச் சுயமரியாதை இல்லாதவன் மனிதனே இல்லைன்னார். சுயமரியாதை மனுஷன் எல்லோர்க்கும் இருக்குன்னா, ஏன் ஒரு சில மனிதர்கள் கீழ்த்தரமாக நடத்தப்பட வேண்டும் என்று கேள்வி எழுப்பினார். மனுஷனை பிறப்பை வைத்து அடிமைப்படுத்துவதை எதிர்த்தார். ஒரு இனம் இன்னொரு இனத்தை அடிமைப்படுத்துவதைக் கண்டு கோபப்பட்டார். ஒரு மொழி இன்னொரு மொழியை ஆதிக்கம் செலுத்துவது கண்டு வெகுண்டார். ஆண்கள், பெண்களை அடிமைப்படுத்துவதை ஒழிக்கப் பாடுபட்டார். இவருடைய கொள்கையே சமத்துவம்தான். சமத்துவம் உருவாக அனைத்து மக்களும் தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னார். சமத்துவத்தைக் காப்பாற்ற சமயத்தைக்கூட பெரியார் எதிர்க்க தயங்கவில்லை.

| | | |
|---|---|---|
| ச<br>ம<br>த்<br>து<br>வ<br>ம் | சமூக சமத்துவம் நிலவ வேண்டும் ;<br>பொருளாதாரப் பாதுகாப்பு வேண்டும்;<br>விரும்பும் தொழிலை மேற்கொள்ள உரிமை இருக்க வேண்டும்;<br>அனைவருக்கும் கல்வி அறிவு கிடைக்க வேண்டும். எனவே, பொருள் வளமும் திறமைகளும் உடையோர் அவற்றில் குறைந்தோரை அடக்கி வைக்கும் உரிமை இல்லை. | அ<br>ம்<br>பே<br>த்<br>க<br>ர் |

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவில்லை யெனில்
சகத்தினை யழித்திடுவோம் - பாரதி

**சனநாயகம் என்பது மனிதனுடைய**
**சிந்தனைச் செல்வத்தின் முதிர்ந்த தத்துவப்**
**பழம். அதனுடைய இனிமை மிக்க**
**சுவையை அனுபவிக்கத் தெரிந்த பிறகே**
**அதைச் சமுதாயத்திற்குக் கொடுக்க வேண்டும். - பெர்னார்டு ஷா**

**வகுப்புப் பயிற்சி**

**1.**(அ) உனது வீட்டில் உன்னையும், உன்னுடைய சகோதர, சகோதரிகளையும் பெற்றோர்கள் சமமாக நடத்துகிறார்களா? எந்தெந்த வகையில் சமமாக நடத்துகிறார்கள்? எந்தெந்த வகைகளில் சமமாக நடத்தவில்லை?

| சமமாக நடத்தும் செயல்கள் | சமமாக நடத்தாத செயல்கள் |
|---|---|
| 1 ------------------------ | 1. ------------------------ |
| 2------------------------ | 2. ------------------------ |
| 3------------------------ | 3. ------------------------ |
| 4------------------------ | 4. ------------------------ |
| 5------------------------ | 5. ------------------------ |

(ஆ) உன்னைச் சமமாக நடத்தும் பொழுது உனக்குள்ள உணர்வுகள் என்ன? நடத்தாத போது உனக்குள் ஏற்படும் உணர்வுகள் என்ன?

| சமமாக நடத்தும் போது எனக்குள் ஏற்படும் உணர்வுகள் | சமமாக நடத்தாத போது எனக்குள் ஏற்படும் உணர்வுகள் |
|---|---|
| 1. ------------------------ | 1. ------------------------ |
| 2. ------------------------ | 2. ------------------------ |
| 3. ------------------------ | 3. ------------------------ |
| 4. ------------------------ | 4. ------------------------ |
| 5. ------------------------ | 5. ------------------------ |

**ஆண்கள் பெண்கள் இருசாராருக்கும் ஒத்த வேலைக்கு ஒத்த ஊதியம் உண்டு என்பதே அரசு பின்பற்ற வேண்டிய கொள்கை நெறி.**
**- பிரிவு 39 (ஈ), இந்திய அரசியலமைப்புச் சட்டம், 1950.**

(இ ) பிறரை மனித மாண்புடன் சமமாக நடத்துகிறாயா ? எப்படி ? ஏன் ?

| எப்படி? | ஏன்? |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

* * * * * * * * * * * * * *

**2.இன்னும் தமிழ்நாட்டில் ஆறாயிரம் கிராமங்களில் தீண்டாமை கடைப்பிடிக்கப் படுகிறது. தலித் மக்கள் பொது கிணற்றில் தண்ணீர் எடுக்க முடியாது. உயர்ஜாதிக்காரத் தெருவில் இவர்கள் நடக்க முடியாது. டீக்கடையில் தலித் மக்களுக்கு என்று தனி டம்ளர்களில் டீ வழங்கப் படுகிறது. இது சமத்துவமற்ற நிலையைச் சுட்டிக் காட்டுகிறது.**

(1) கீழேயுள்ள கேள்விகளுக்கான பதில்களை முதலில் தனிப்பட்ட முறையில் எழுதவும்.

(2) பிறகு குழுக்களாகப் பிரிக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும்.

(அ) நீ இவர்களில் ஒருவராக இருந்தால், உனது உணர்வு என்னவாக இருக்கும் ?

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

(ஆ) இக்கொடுமைகளை நீக்கிச் சமத்துவ சமுதாயமாக்க உனது பரிந்துரைகள் என்ன?

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

***வீட்டுப்பயிற்சி***

3.(அ)கீழ்க்கண்ட இடங்களில் அல்லது சூழ்நிலைகளில் (1) சமத்துவம் கடைப்பிடிக்கப்படுகிறதா, இல்லையா? (2) எப்படி என்று நேரடியாகக் கவனித்து, அல்லது மற்றவர்களிடம் விசாரித்து, அனுபவத்தை அல்லது விபரங்களை எழுதிக் கொண்டு வரவும். பிறகு வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.

1. நியாய விலைக்கடையில்
2. கோவில்களில்
3. ஊர்குளத்தில் (அல்லது) கிணற்றில்
4. ஊர்த்திருவிழா (அல்லது) பள்ளியின் விழா நிகழ்வுகளில்
5. கிராமத் தெருவில்
6. கல்வி நிறுவனங்களில்
7. குடும்பத்தில்
8. மருத்துவமனையில்
9. திருமண நிகழ்வுகளில்
10. விவசாய வேலை செய்யும் இடத்தில்

(ஆ) நீங்கள் என்ன சாதி என்று எவரேனும் கேட்கும் போது உங்கள் மனதில் ஏற்படும் உணர்வுகள் என்ன? இந்த உணர்வுகள் எந்த வகையில் உங்கள் உள்ளத்தையும் உங்கள் மனித மாண்பையும் பாதிக்கின்றன?

| என்ன உணர்வுகள் | பாதிப்புகள் |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |

**சொட்டுச் சொட்டா வேர்வை விட்டா**
**பட்டினியால் பாடுபட்டா**
**கட்டுக் கட்டா நோட்டுச் சேருது**
**கெட்டிக்காரன் பொட்டியிலே - அது**
**குட்டியும் போடுது வட்டியிலே**

**பட்டுக்கோட்டையார்**

(இ) தற்செயலாகப் பெண்ணாக நீங்கள் பிறக்க நேரிட்டதால், ஆணைவிடத் தாழ்வாக நீங்கள் நடத்தப்பட்ட அனுபவத்தை மற்றொரு மாணவரிடம் பகிர்ந்து கொள்க. அல்லது தற்செயலாக ஆணாகப் பிறக்க நேரிட்டதால், பெண்ணை ஆணைவிடத் தாழ்வாக நீங்கள் நடத்திய ஒரு நிகழ்வை மற்றொரு மாணவரிடம் கூறவும். இப்படித் தாழ்வாக நடத்தியதால், பெண்ணுக்கும், ஆணுக்கும் உரிய மனித மாண்பு குறைந்ததா ? அல்லது வளர்ந்ததா ? ஏன் என்று விளக்கம் கொடுக்கவும்.

ஏழையென்றும் அடிமையென்றும்
எவனுமில்லை சாதியில்,
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தியாவில் இல்லையே
வாழி கல்வி செல்வ மெய்தி
மன மகிழ்ந்து கூடியே
மனிதர் யாரு மொருநிகர்
சமான மாக வாழ்வமே -பாரதி

**மனிதர் அனைவருமே சமத்துவத்தோடும் மனித மாண்போடும் தாம் பிறக்கின்றனர். எனவே மக்களை ஆண், பெண் என பிரித்து பாகுபாடு காட்டக்கூடாது.**

**பெண்களுக்கெதிரான அனைத்து வகை பாகுபாடு ஒழிப்பு**
**பற்றிய உடன்படிக்கையின் முன்னுரை**

# 12. வேறுபட்டவர்கள் ஆனால் சமமானவர்கள்

**ஒரு நாள் ஆசிரியர் சில அட்டைத் துண்டுகளுடன் வகுப்பறைக்கு வந்தார். அவைகளை மேசை மீது வைத்தார். மாணவிகளைப் பார்த்து, "இதோ பாருங்க. இது உலக வரைபடம். ஆனால், இதைத் துண்டு துண்டாக வெட்டிக் கலந்து வைத்துள்ளேன். இப்போது உங்களில் யாராவது இந்தத் துண்டுகளைச் சரியான இடங்களில் பொருத்தி வைத்து உலக வரைபடத்தை உருவாக்க முடியுமா? முடியும்னு நம்புறவுங்க எழுந்து வரவும்" என்றார்.**

முதலில் ஒரு மாணவி முயற்சி செய்தாள், முடியவில்லை. அடுத்தவள் முயன்றாள். அவளாலும் முடியவில்லை. தொடர்ந்து வந்த ஐந்து மாணவிகளாலும் முடியவில்லை. ஆனால், சாந்தி என்ற மாணவி இதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள். அவர்களால் ஏன் முடியவில்லை என்ற கேள்வி அவளுள் எழுந்தது.

ஆறாவது ஆளாக மாணவி சாந்தி முயற்சி செய்தாள். அவள் அந்த அட்டைகள் அனைத்தையும் தலைகீழாகத் திருப்பினாள். உடனே, ஆசிரியர் "நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் ? " என்று கேட்டார். அதற்கு அவள் "கொஞ்சம் பொறுங்கள், நான் இப்போது தான் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்" என்றாள்.

சாந்தி என்ன செய்தாள் ? தலைகீழாகத் திருப்பி அவைகளை இணைத்த போது, அங்கு ஒரு மனிதனின் உருவத்தைப் பார்த்தாள். எனவே, அவள் அந்த மனிதரின் படத்தை ஒழுங்காக அமைத்தாள். அது அவளுக்கு எளிதாகவும் இருந்தது. ஒரு பக்கம் மனிதனின் உருவம் ஒழுங்காக அமைக்கப்பட்டதும், அடுத்தப் பக்கத்திலிருந்த உலக வரைபடம் தானாகவே ஒழுங்காக அமைந்து விட்டது. ஆசிரியர் சாந்தியைப் பாராட்டினார்.

**இந்தியக் குடிமக்கள் அனைவரின் மாண்புக்கும் நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் உறுதியளிக்கும் தோழமையுணர்வை அரசு வளர்க்க வேண்டும்.**

**(இந்திய அரசியலமைப்புச் சட்டம், முகப்புரை, 1950)**

இந்நிகழ்ச்சி உணர்த்தும் உண்மை என்ன? ***மனிதர்கள் பிளவுபட்டிருப்பதால் தான், உலகமும் பிளவுபட்டிருக்கிறது.*** ஒரு நாட்டில் வாழும் மனிதர்கள் பிளவுபட்டிருந்தால் நாடும் பிளவுபட்டுப்போகும். ஏற்றத் தாழ்வு, ஆதிக்க உணர்வு, சுயநலம் போன்ற குணங்களெல்லாம் மனிதரைப் பிரிக்கின்றன. அப்போது தேசமும் பிரிகிறது. சிதைந்து போகிறது. சமாதானமும் இல்லாமற் போகிறது.

அதே வேளையில் மனிதன் இனம், மொழி, சமயம், கலாச்சாரம் என்ற அடிப்படையில் வேறுபட்டிருப்பது இயற்கையானது, இயல்பானது என்பதனை ஏற்கனவே பன்மைச் சமூகம் எனும் பாடத்தில் பார்த்தோம். இப்பிரிவுகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். மதிக்கவும் வேண்டும். இவைகளை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளும் போது இப்பிரிவுகளுக்குள்ளே உறவும் நல்லிணக்கமும் ஏற்படுகிறது. இந்நல்லிணக்கம் தேசத்தைச் சிதைவுபடாமல் காக்கிறது. ஆகவே, ஒவ்வொரு நாட்டிலுமுள்ள மனிதர்களின் பழக்க வழக்கங்கள், கலாச்சாரம், மதம், மொழி போன்றவற்றை மதித்து ஏற்றுக் கொள்ளும் போது தான் நாம் அனைவரும் இப்பூவுலகின் சகோதர சகோதரிகளாக ஒன்றாக வாழ முடியும் என்பது தான் இவ்விளையாட்டின் நோக்கம் என்னும் கருத்தை ஆசிரியர் விளக்கினார்.

***மனிதச் சிதைவே தேசச் சிதைவு***

ஒரு பெற்றோர் வயிற்றில் பிறந்த பிள்ளைக்கு
எப்படி சம அந்தஸ்தும் சம உரிமையும் உண்டோ,
அப்படியே ஒரு தேசத்தில் பிறந்தவர்களுக்கும்
இருக்க வேண்டியது அவசியமாகும்.

-தந்தை பெரியார்

பூனைக்குட்டிகள்

**வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்**
**வீட்டில் வளருது கண்டீர் ;**
**பிள்ளைகள் பெற்றதப் பூனை - அவை**
**பேருக் கொருநிற மாகும்;**

**சாம்பல் நிறமொரு குட்டி - கருஞ்**
**சாந்து நிறமொரு குட்டி.**
**பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்**
**பாலி னிறமொரு குட்டி.**

**எந்த நிறமிருந் தாலும் - அவை**
**யாவும் ஒரேதர மன்றோ?**
**இந்த நிறம்சிறி தென்றும் - இஃ**
**தேற்றமென் றுஞ்சொல்ல லாமோ?**

**வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் - அதில்**
**மானுடர் வேற்றுமை யில்லை.**
**எண்ணங்கள் செய்கைக ளெல்லாம் - இங்கு**
**யாவர்க்கு மொன்றெனல் காணீர்.**

**- பாரதியார்.**

நாம் பல்வேறு மாநிலத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், பல மொழிகளைப் பேசினாலும், பல்வேறுபட்ட மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், பல கலாச்சாரத்தைப் பின்பற்றினாலும் நாம் அனைவரும் மனிதர்கள் என்ற முறையில் சமமானவர்கள்.

நாம் நமது இனம், மொழி, மதம், கலாச்சாரம் போன்றவற்றையும் மதித்து ஏற்றுக் கொள்ளும் போது தான் சமத்துவத்தின் அடிப்படையில் சமூக நல்லிணக்கம் மலரும்.

**வகுப்புப் பயிற்சி**

**1.**அ) நம்மநாட்டு மக்கள் எப்படி எல்லாம் பிளவுபட்டுக் கிடக்கிறார்கள்? (உ–ம்.) சாதி

1. ------------------------------------------------------------

2. ------------------------------------------------------------

3. ------------------------------------------------------------

4. ------------------------------------------------------------

5. ------------------------------------------------------------

6. ------------------------------------------------------------

ஆ) திரைப்படங்களில், தொலைக்காட்சிகளில் யாரையெல்லாம் தரக்குறைவாகக் காட்டுகிறார்கள்? (உதாரணம்– திரைப்படத்தில் வேலைக்காரரை எப்படி சித்தரிக்கிறார்கள்)

| யாரையெல்லாம் | எப்படியெல்லாம் தரக்குறைவாகக் காட்டுறாங்க? |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

| | |
|---|---|
| இ) உனக்குச் சமுதாயத்தில் பிரிவினையை ஏற்படுத்தும் யாரை-யெல்லாம் பிடிக்காது? ஏன்?<br><br>(உ-ம்) எனக்கு எங்கள் தெருவில் இருக்கும் வட்டிக் கடைக்காரரைப் பிடிக்காது. காரணம் இவர் ஏழைகளிடம் அதிக வட்டி வாங்கி அவர்களை அடிமைப்படுத்துகிறார்.) | |

| யாரைப் பிடிக்காது? | ஏன்? |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

ஒவ்வொரு மனிதர்க்கும் தன் புகழ், தனித்த அடையாளம், குடும்ப வாழ்வு இவற்றைப் பாதுகாக்க உரிமையுண்டு.

- பிரிவு 5, அமெரிக்க மனித உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய பிரகடனம், 1948

2. அ) உன் வகுப்பிலுள்ள மாணவர்களிடம் வேற்றுமை பாராட்டுகிறாயா ? ஆம் என்றால் ஏன் ?

ஆ) வேற்றுமை இருந்தாலும் ஒற்றுமையாக இருக்கிறாயா ? ஏன் ?

3) கொடுக்கப்பட்டுள்ள பாரதியார் கவிதையை, எல்லா மாணவர்களும் சேர்ந்து வாசிக்கவும். வாசித்தபின் மாணவர்கள் இக்கவிதையில் சொல்லப்பட்ட கருத்துக்களை ஒவ்வொருவராக எடுத்துச் சொல்லவும். ஆசிரியர் இறுதியாகத் தன் கருத்தைச் சொல்வார்.

4) கீழே கொடுக்கப்பட்டுள்ள "இந்தியர்களில் பல விதம்" படங்களை நன்றாகக் கவனிக்கவும். அவர்களின் தோற்றம், உடை, கலாச்சாரம், மொழி போன்றவைகளை படத்திற்கு எதிரே உள்ள கட்டத்தில் குறிப்பிடுக.

(அ) படங்களில் நீங்கள் பார்த்த மக்களின் ஒற்றுமைகள் என்ன ?

(ஆ) வேற்றுமைகள் எவை ?

(இ) வேற்றுமைகள் இருந்தாலும் நம்மை ஒன்றுபடச் செய்வது எது ?

| **(அ) ஒற்றுமைகள்** | **(ஆ) வேற்றுமைகள்** |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |

**இந்தியக் குடிமக்கள் ஒரு பகுதியினர், தமக்கெனவுள்ள மொழி, சமயம், எழுத்து, கலாச்சாரத்தைப் பாதுகாத்துக்கொள்ள உரிமையுண்டு.**

**. இந்திய அரசியல் சாசனம், 29(1)**

| (இ) நம் அனைவரையும் ஒருங்கிணைப்பது எது? |
| --- |
| 1. |
| 2. |
| 3. |
| 4. |
| 5. |

***வீட்டுப்பயிற்சி***

5. அ) கீழே கட்டங்களுள் கொடுக்கப்பட்டிருப்போரை நீங்கள் அடிக்கடி சந்தித்திருப்பீர்கள். இவர்களிடம் நீங்கள் கண்ட மூன்று நல்ல பண்புகளை யோசித்து எழுதி வகுப்பிற்குக் கொண்டு வரவும்.

ஆ) சமுதாயத்தில் இவர்களின் மனிதத்தன்மையைப் பாதிக்கக்கூடியவை எவை என்று எழுதவும். இவர்களிடம் நீங்கள் காணும் பண்புகளுள் இவர்களைப் பாதிக்கக்கூடிய பண்புகள் யாவை ?

| நபர்கள் | நல்ல பண்புகள் | பாதிக்கக்கூடியவை |
|---|---|---|
| துப்புரவுத் தொழிலாளி | 1.<br>2.<br>3. | 1.<br>2.<br>3. |
| இந்து | 1.<br>2.<br>3. | 1.<br>2.<br>3. |
| இசுலாமியர் | 1.<br>2.<br>3. | 1.<br>2.<br>3.. |
| கிறிஸ்தவர் | 1.<br>2.<br>3. | 1.<br>2.<br>3. |
| கூலி விவசாயி | 1.<br>2.<br>3. | 1,<br>2,<br>3. |
| குழந்தைத் தொழிலாளி | 1.<br>2.<br>3. | 1.<br>2.<br>3. |

**6)** இப்பாடத்தைப் படித்து முடித்தபின் வீட்டிற்குச் சென்று கொஞ்சம் யோசனை செய். நீ பிறரைப் பற்றி உன்னிடம் கொண்டிருந்த முன்தீர்மானக் கருத்துக்கள் சரியில்லையென்று எண்ணுகிறாய் என்று வைத்துக்கொள்வோம். இதனைப் பிறருக்கு எடுத்துச்சொல்ல என்ன செய்யலாம் என்ற யோசனைகளை எழுதி வகுப்பிற்குக் கொண்டு வந்து பகிர்ந்து கொள்.

## வேற்றுமையுள் ஒற்றுமை காண நமக்கு வேண்டுவன

### ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம்

**மனித மாண்பு ஒன்றுதான். உண்மை! ஆனால் மனிதர்கள் வேறுபட்ட இனங்களாய் உள்ளனர், பல்வேறு சமயத்தவர்களாய் உள்ளனர், பல்வேறு கலாச்சாரமுடையவர்களாய் உள்ளனர், தேசிய இனங்களாய் வேறுபட்டுள்ளனர் என்பதை நாம் உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.**

### அங்கீகாரம்

**மனிதராகப் பிறந்த அனைவர்க்கும் அடிப்படை மனித உரிமைகள் ஒன்றுதான் என்பதை அங்கீகரிக்கும் மனநிலை வேண்டும்.**

### சகிப்புத் தன்மை

**பிற மக்களின் வேறுபட்ட நம்பிக்கைகளை, பழக்கவழக்கங்களை சமூக, பொருளாதார அரசியல் அமைப்புகளைத் தெரிந்துகொண்டு இது இயற்கையானது என ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வேற்றுமைகளைச் சகித்துக்கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும்.**

### பாராட்டும் மனநிலை

**மற்றவர்களுடைய கலாச்சாரங்களிலும் நல்ல அம்சங்கள் இருக்கின்றன என்பதனை ஏற்றுக் கொண்டு அதனையும் பாராட்டுகின்ற மனநிலை வேண்டும். இது தாழ்த்தப்பட்டவர்களின் கலை, அந்நிய மக்களின் கலை, ஆகவே மோசமானது என்று கொள்ளாமல் அதிலும் நல்ல அம்சங்கள் உள்ளன என ஏற்றுக்கொண்டு பாராட்டுதல் வேண்டும்.**

### நுழைதல்

**நல்ல அம்சங்களை ஏற்றுக் கொள்வதோடு நல்லதாக இருந்தால் நாமும் அதைக் கற்கவும் பழகவும் முயல வேண்டும்.**

### விமர்சனக் கண்ணோட்டம்

**பிறரைப்பற்றி சமுதாயம் ஏற்கனவே முன்தீர்மானத்துடன் வகுத்துக் கொண்ட கருத்துக்களை விமர்சனக் கண்ணோட்டத்துடன் பார்த்து மாற்ற வேண்டிய மனநிலை வேண்டும். முன் தீர்மானக் கருத்துக்கள் நாம் உருவாக்கியதல்ல. யாரோ யார் லாபத்துக்காகவோ உருவாக்கிய கருத்துக்களுக்கு நாம் அடிமையாகாமலிருத்தல் அவசியம்.**

### துன்பம் துடைத்தல்

**நம்மோடு வேறுபட்ட மக்களின் பிரச்சினைகளை அன்னியர் பிரச்சினைகள் என்று பாராமல் அவர்களும் மனிதர்களே என்ற கண்ணோட்டத்தோடு அவர்களின் துன்பத்தைத் துடைப்பதற்கு மனித உரிமைக் கண்ணோட்டத்தில் துணை நிற்க வேண்டும்.**

### மொத்தப் பார்வை

**தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள், பழங்குடியினர் போன்ற சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை, அவர்களுக்கு ஏற்படும் மனித உரிமை மீறல்களைத் தனியாகப் பார்க்காமல் தேசிய அளவில், உலகளவில் உருவாக்கப்பட்டிருக்கும் பிரச்சினைகளோடு இணைத்துப் பார்த்தல் மிக அவசியம்.**

**மனித உரிமைகள் தொடர் - அய்க்கிய நாட்டவை - 1989**

# 13. சுதந்திர உணர்வு

**ஆகஸ்ட் 15. பள்ளியில் சுதந்திர தின விழா. மாணாக்கரெல்லாம் மார்பில் தேசியச் கொடி பொறித்த அட்டை அணிந்துள்ளனர். ஊராட்சி மன்றத் தலைவர், பள்ளி வளாகத்தில் நடப்பட்டிருந்த கொடிக்கம்பத்தில் சுதந்திரக் கொடியை ஏற்றி வைக்கிறார். மாணாக்கரெல்லாம் மகிழ்ச்சியோடு கைதட்டுகின்றனர். கொடியேற்றி முடிந்தவுடன் மாணவர்கள் தேசிய கீதம் பாடி முடிக்க, சிறப்பு விருந்தினராகிய உள்ளாட்சி மன்றத்தலைவர் சுதந்திர தின சிறப்புரை வழங்குகிறார்.**

***தலைமையாசிரியர் அவர்களே !***
***ஆசிரியப் பெருமக்களே !***
***பெற்றோர்களே!***
***மாணவ மாணவியரே !***

உங்களுக்கெல்லாம் என் சுதந்திர தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டுதோறும் நம் நாட்டில் இந்த நாளை சுதந்திரதினமாக மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறோம். நாம் கொண்டாடுவது சரிதான். நாம் ஏன் சுதந்திரமாக இருக்கணும். இந்த நாளின் முக்கியத்துவம் என்ன ? இதைப் பற்றியெல்லாம் நாம் சிந்தித்தால்தான் இவ்விழாவைக் கொண்டாடுவதில் அர்த்தமிருக்கும்.

எல்லா மக்களும் வாழணும்னு ஏக்கமிருக்குல்ல ? இந்த ஏக்கம் எதுக்கு ? வாழறதுக்கு தானே ? வாழ்றதுன்னா என்ன ? வாழ்றதுன்னா, சுதந்திரமா வாழணும்னுதான் அர்த்தம். சுதந்திரம்னா உரிமையோடு வாழனும்னு அர்த்தம். எப்படியும் வாழனும்னா, அதுக்குப் பேரு சுதந்திரமா ? நிச்சயமா இல்லை. சுதந்திரத்தோடு வாழ்றதுதான் வாழ்க்கைன்னு உங்களுக்குத் தெரியணும். சுதந்திரமா வாழ்றதுன்னா நம்ம இஷ்டம் போல் வாழ்றதா. அது இல்ல, அதையும் தெரிஞ்சுக்குங்க.

இப்ப நம்ம நாட்டுக்கு வருவோம். நாம ஏன் சுதந்திரதினம் கொண்டாடுறோம் ? அப்ப நம்ம சுதந்திரம் வாங்குறதுக்குமுன்ன – சுதந்திரமில்லாம அடிமையாய் இருந்திருக்கோம்னுதான் அர்த்தம் ! நாம யாருக்கு அடிமையாயிருந்தோம் ?

**மாணவன் ஒருவன்** வெளிநாட்டுக்காரங்களுக்கு

**உள்ளாட்சித் தலைவர்** எப்படி அடிமையாயிருந்தோம் ?

**மாணவர்** அவங்கதான் நம்மை ஆண்டாங்க. அவங்கதான் எல்லா அதிகாரத்தையும் வைச்சிருந்தாங்க. அவங்க என்ன நினைச்சாங்களோ அதைத்தான் நம்மை செய்யச் சொன்னாங்க.

**உள்ளாட்சித் தலைவர்** இதெல்லாம் உண்மைதான். எதுக்கு 6000 மைல்களுக்கு அப்பாலிருந்து வந்து நம்மை ஆண்டாங்க. ஒண்ணு, நம்ம நாட்டை அடிமைப்படுத்தி, நம்ம செல்வத்தைச் சுரண்டுறதுக்கு. இன்னொண்ணு, நமக்கு நம்மை ஆளத் தெரியாது, இவங்கதான் ஆள முடியும்னு நினைச்சாங்க. அப்ப, நமக்கும் மாண்பு இருக்குன்னு அவங்க கவலைப்படல பார்த்தீங்களா ? நம்மிடம் நம் நாட்டை ஆளத் திறமை இல்ல. இவங்க கிட்ட எதுவுமே இல்ல. இவங்க மாண்புள்ள மனிதர்களே இல்லைண்ணு நினைச்சிட்டாங்க பாத்தீங்களா ? இதையெல்லாம் பார்த்துட்டு சும்மா இருக்க முடியுமா ? அதனால்தான் மக்களெல்லாம், ஒண்ணாகி எதிர்த்தாங்க. எதிர்த்த போது அவங்க நம்மைக் குண்டாந்தடியால அடிச்சாங்க, துப்பாக்கியால சுட்டாங்க. சிறையில போட்டாங்க. பலரைக் கொன்னுட்டாங்க. ஆனாலும் விட்டோமா ? இல்லை. காந்தி, நேரு, அம்பேத்கார், காமராசர் போன்ற தலைவர்களெல்லாம், **சுதந்திரம் நம் பிறப்புரிமைன்னு** சொல்லி, மக்களைத் திரட்டி போராட வைச்சாங்க. பல தலைவர்கள் தியாகம் செஞ்சாங்க. பலர் செத்துப் போனாங்க. இவங்களெல்லாம் தங்களுக்காகச் செத்துப் போகல. **சுதந்திரத்திற்காகச் செத்தாங்க.** அப்போ சுதந்திரத்தின் அருமை எவ்வளவு பார்த்தீங்களா ? இப்போ இன்னும் ஒரு முக்கியமான செய்தியைப் பார்க்கணும்.

1947–ல் நாம வாங்கினோமே சுதந்திரம், அதை நினைவுபடுத்த மட்டும் நாம சுதந்திர தினத்தைக் கொண்டாடக் கூடாது. அந்தக் காலத்துல வாங்குன சுதந்திரத்தை நாம காப்பத்தணும். நாம என்னென்ன உரிமைகளுக்காகப் போராடினோமோ, அவ்வுரிமைகள் இப்போ நமக்கு இருக்கான்னு கேட்கணும். கேக்கிறதுக்கு நமக்கு உரிமையிருக்குன்னு நமக்குத் தெரியணும். நாம கண்ணீர் விட்டு வளர்த்த சுதந்திரப் பயிரைக் காக்க வேண்டாமா ? நம்மூர்ல நாம கஷ்டப்பட்டு வாங்குன சுதந்திரத்தை எல்லோரும் அனுபவிக்கணும். ஏன்னா, சுதந்திரம் இல்லைன்னா மனுஷன் மனுஷனாகவே இருக்க முடியாது. ஆகவே, எல்லோரும் சுதந்திரமா இருக்கணும். நாம மட்டும் சுதந்திரமா இருந்தா போதாது. மற்றவங்க சுதந்திரத்திற்காகவும் நாம் பாடுபடணும். சரிதானா ?

**இவ்விழாவில் கலந்துகொள்ள வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி கூறி உரையை முடிக்கிறேன்.** (எல்லோருக்கும் இனிப்பு வழங்க விழா முடிவடைந்தது.)

**வகுப்புப் பயிற்சி**

**1.**(அ) சுதந்திரம் என்றால் என்ன**?** அதைப்பற்றி உனது கருத்துக்களை எழுதி வகுப்பில் பகிர்ந்துகொள்க.

(ஆ) உனக்கு இருக்கின்ற சுதந்திரங்கள் என்ன**?** மறுக்கப்படுகின்ற சுதந்திரங்கள் என்ன**?**

| சுதந்திரங்கள் | மறுக்கப்படுகின்ற சுதந்திரங்கள் |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |
| 6. | 6. |
| 7. | 7. |
| 8. | 8. |

**தனிமனிதனின் வளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும் சுதந்திரமே அச்சாணியாகும். இவ்வளர்ச்சியை சனநாயகம் மட்டுமே தர முடியும். இச்சனநாயகம் தான் வேற்றுமையுள்ளும் ஒற்றுமையை வளர்க்கிறது.**

**- நேரு**

**2.**(அ) சுப்பன் என்பவர் கழிவறை சுத்தம் செய்பவர். இருப்பினும் தனது மகனை நன்றாகப் படிக்க வைத்து அரசு வேலையில் அமர்த்த வேண்டும் என்று ஆசைப்பட்டார். போதிய வசதியில்லாததால், தான் வேலை செய்யும் முதலாளியிடம் தன் மகனின் படிப்பிற்காக உதவி கேட்டார். அதற்கு அவர் "உன் மகன் படித்து என்ன செய்யப் போகிறான்? படித்தாலும் தொடர்ந்து நீ பார்க்கும் வேலையைத்தானே அவனும் செய்யப் போகிறான்? ஆகவே, அவனைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டாம். பிறகு, அவனுடைய திருமணத்திற்கு நீ கேட்கும் உதவியைச் செய்கிறேன்". என்று கூறினார். சுப்பனும் வேறு வழியில்லாமல் தன்னுடைய அன்றாடப் பணியைத் தொடர்ந்தார். சுப்பன் சம்மதித்ததற்குக் காரணம் என்ன?

**(ஆ) கனிமொழி ஏழாவது வகுப்பில் படித்து வந்த சிறந்த மாணவி. அவள் அப்பா தையல் கடைக்காரர். அம்மா வீட்டு வேலை செய்பவர். இருவரும் மகளைப் படிக்க வைத்தனர். ஆனால் அவள் அப்பாவுக்குத் தையல் கடையில் ஆள் தேவைப்பட்டது. கனிமொழியை 'படித்தது போதும். இனி எனக்கு உதவியாகக் கடைக்கு வா' என்றார். ஆனால் அவள் அம்மா ராசாத்திக்கு மகளை எப்படியாவது படிக்க வைக்க ஆசை. கனிமொழியும் படித்துப் பேராசிரியையாக வர ஆசைப்பட்டாள். ஆனால் அப்பாவை மறுத்துப்பேச முடியவில்லை. சூழ்நிலைக் கைதியாக இருந்தாள். ஆசிரியர்கள் எல்லோரும் கனிமொழிக்கு ஆதரவாகப் பேசினர். ஆனால் கனிமொழி பள்ளி தொடங்கியதும் எட்டாம் வகுப்பில் காணவில்லை.**

**கனிமொழியின் நிலையில் நீ இருந்திருந்தால். . . . . ? உன் கருத்துக்களையும், உணர்வுகளையும் எழுதவும்.**

இ) மலர்விழியின் வீடு சாலை ஓரத்தில் இருக்கிறது. சுத்தம் செய்வது என்றால் அவளுக்கு அதிகம் பிடிக்கும். காலையும், மாலையும் வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்து அலங்கரிப்பது அவளது பொழுது போக்கு. ஆனால் தினமும் சேகரித்த குப்பைகளை சாலையில் கொட்டி விடுவாள். இதைப் பார்த்த அவளுடைய தோழிகள், "குப்பைகளை ஏன் தெருமுனையில் இருக்கும் குப்பைத் தொட்டியில் போடாமல் ரோட்டில் கொட்டுகிறாய்?" என்று கேட்டதற்கு, "ரோட்டில் கொட்டுவதற்கு எனக்குச் சுதந்திரம் இருக்கிறது. ஏனெனில், நகராட்சியில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளி தினமும் ரோட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்து கொள்ளட்டும். எனவே, அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை", என்றாள் மலர்விழி. இதைப்பற்றி உனது கருத்து என்ன?

---

---

---

ஈ) மணிமாறன் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவன். இரவு பதினொரு மணிவரை பாடங்களைப் படித்த பிறகு பன்னிரண்டு மணி வரை தன்னுடைய டேப் ரிக்கார்டு வழியாக பாடல்கள் கேட்டு ரசிப்பான். சத்தம் அதிகமாக இருந்தால்தான் அவனுக்குப் பிடிக்கும். அவனது வீட்டிற்கு அருகிலுள்ள அனைவரும் இரவு 10.30 மணிக்கெல்லாம் உறங்கிவிடுவார்கள். மணிமாறனின் டேப் ரிக்கார்டு ஒலி உறங்குபவர்களின் தூக்கத்தைக் கெடுத்தது. பலர் மணிமாறனிடம் புகார் செய்தபோது "எனக்கு பாடல் கேட்கச் சுதந்திரம் இருக்கிறது என்றான்". இதைப் பற்றி உனது கருத்து என்ன?

---

---

---

**இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் (அ) சுதந்திரமாகச் சிந்திக்கவும், பேசவும் (ஆ) அமைதியாகக் கூடுவதற்கும் (இ) சங்கங்கள் அமைப்பதற்கும் (ஈ) இந்தியாவில் தங்கு தடையின்றி நடமாடவும் (உ) குடியிருப்பதற்கும் மற்றும் குடியமர்வதற்கும் (ஊ) விரும்பிய தொழிலை செய்யவும் உரிமையுண்டு.**

**(பிரிவு 19, இந்திய அரசியலமைப்புச் சட்டம், 1950)**

உ) மாலதி பத்தாம் வகுப்பு படிக்கிறாள். அடிக்கடி பள்ளிக்குச் செல்லாமலும் பெற்றோர்களுக்குத் தெரியாமலும் திரைப்படம் பார்க்கச் செல்வாள். அவள் தோழிகள் "நீ செய்வது சரியில்லை" என்று கூறியபோதெல்லாம் அவள் கூறும் பதில் "நான் சுதந்திரமாக வாழ விரும்புகிறேன். நான் விரும்பியதை, விரும்பிய நேரத்தில் செய்யும் சுதந்திரம் எனக்கு இருக்கிறது", என்பதாக இருக்கும். இது பற்றி உனது கருத்து என்ன?

---

---

---

---

ஊ) எழில் இன்ஜினியருக்குப் படிக்க விரும்பினாள். ஆனால், அவளது பெற்றோர் பரம்பரையாக நம் குடும்பத்தினர் டாக்டருக்குப் படித்து மருத்துவத் தொழில் பார்த்தவர்கள். எனவே, நீ டாக்டருக்குத்தான் படிக்க வேண்டும் என்று கூறி அவளை மருத்துவக் கல்லூரியில் சேர்த்து விட்டனர். அவளும் ஆர்வம் இல்லாமல் கல்லூரிக்குச் செல்கிறாள். இதைப்பற்றி உனது கருத்து என்ன?

---

---

---

---

**வீட்டுப்பயிற்சி**

1. உங்கள் வீட்டில் உன் அம்மாவுக்கு எவ்வளவு சுதந்திரம் இருக்கிறது என்று கேள். அவர்களுக்கு என்னென்ன சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, என்னென்ன சுதந்திரம் மறுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டு வகுப்பில் பகிர்ந்து கொள்க.
2. உங்கள் ஊர் மக்களுக்கு என்னென்ன சுதந்திரம் இருக்கிறது, என்னென்ன சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது என்று ஊர்த்தலைவர்கள், பிரமுகர்களிடம் கேட்டு தொகுத்து வரவும்.

> **எல்லா மனிதரும் சுதந்திரத்துடனும், சமத்துவத்துடனும், மாண்புடனும், உரிமையுடனும் பிறக்கின்றனர். ஆகவே, ஒவ்வொருவரும் இனம், நிறம், மொழி போன்ற வேறுபாடின்றி, எல்லா உரிமைகளையும், சுதந்திரத்தையும் பெற உரிமையுடையவர்கள்.**
> **- இனப்பாகுபாடு ஒழிப்பு பற்றிய அகில உலக உடன்படிக்கையின் முன்னுரை, 1948.**

# 14. அடிப்படைத் தேவைகளும், விருப்பங்களும்

**தேவைகள்** அடிப்படைத் தேவைகள் அடிப்படை உரிமைகள். உரிமைகள் மனிதர்க்குரியன. மனிதரிடமிருந்து பிரிக்க முடியாதன. அவரோடு பிறப்பவை. மனிதர் மாண்போடு வாழ்வதற்குத் துணை நிற்பன. எனவே மாநில, மைய அரசுகள் இவ்வுரிமைகளைக் காக்கக் கடமைப்பட்டவை.

**விருப்பங்கள்** இவை உணர்வு சம்பந்தப்பட்டவை. விருப்பங்கள் நியாயமானவைகளாக இருந்தாலும் அரசு இவ்விருப்பங்களை நிறைவேற்றக் கடமைப் பட்டதாகக் கூற முடியாது. தேவையை அல்லது விருப்பங்களை நிறைவு செய்வதைக் கட்டாயமாக்க முடியாது.

**உரிமைகளின்றி வாழ்வில்லை**
**விருப்பங்கள் வாழ்வாவதில்லை**

**நிகழ்வு 1**

அது ஒரு குக்கிராமம். அக்–கிராமத்தில் வாழ்ந்து வரும் மணிகண்டன் ஒரு விவசாயி. அவன் மனைவி முனியம்மாள் நிறைமாத கர்ப்பிணி. அவர்கள் ஊரில் பிரசவத்தின் போது உள்ளூரில் இருக்கும் மருத்துவச்சிதான் பிரசவம் பார்ப்பாள். எப்போதாவது பிரசவம் சிக்கலாயிருச்சுன்னா தாயும் குழந்தையும் பிழைப்பதே சிக்கலாகி–விடும். பிரசவ வேதனை வந்தது. எப்போதும்போல மருத்துவச்சிக்கு ஆள் அனுப்பினாங்க. அந்த அம்மாவும் வந்து பிரசவம் பார்க்கத் தொடங்கினா. நேரம் போய்க்கிட்டே இருந்தது. முனியம்மாவால் வலி தாங்க முடியல. மருத்துவச்சியும்

தனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் செய்து பார்த்தாள். அவளுக்கும் அதுக்குமேல என்ன செய்வது என்று தெரியாமல் "என்னால இனி ஒண்ணும் பண்ண முடியாது. கவர்ன்மெண்ட் ஆசுபத்திரிக்குக் கொண்டு போனாதான் தாயையும் குழந்தையையும் காப்பாத்த முடியும்னு" சொல்லிட்டா. மணிகண்டனுக்கு கையும் ஓடல, காலும் ஓடல. இவங்க கிராமத்திற்கு பஸ் வரதில்ல. பஸ்ஸை பிடிக்கணும்னா அஞ்சு கிலோ மீட்டர் நடந்து போனா மெயின் ரோட்டிலதான் பஸ் வரும். மெயின்ரோட்டுக்குப் போறதுக்கு சரியான ரோடும் கிடையாது. மெயின் ரோட்டுக்குப் போனா பஸ்ல ஏறி டவுனுக்குப் போயி கார் பிடிக்கலாம்னா ரோடு சரியில்லை. கார் வராதுண்ணு கார்காரன் சொல்லுவான். அப்படி வந்தா ஒண்ணுக்குப் பல மடங்கா ரூபா கேட்பான். இவங்களோ அன்றாடங்காய்ச்சிங்க. எப்படி கொடுக்க முடியும்**?** மணிகண்டன் துவண்டு போனான். பக்கத்து வீட்டுக்காரரை கெஞ்சி அவர் மாட்டுவண்டியில் வைத்து கவர்ன்மெண்ட் ஆசுபத்திரிக்குக் கொண்டு போனான். நேரங்கடந்துபோச்சு. மருத்துவமனை போய்ச் சேர்வதற்கு முன்னாடி பிரசவம் ஆயிருச்சு. ஆனா எதிர்பார்த்த குழந்தைதான் செத்துப் போச்சு.

### நிகழ்வு 2

அது ஒரு சிறிய குடும்பம். இரண்டு குழந்தைகள். தந்தை ஒரு தனியார் கம்பெனியில் வேலை செய்கிறார். அவர் வாங்கும் சம்பளம் அந்த குடும்பத்தினரின் மாதாந்திரச் செலவுக்குத்தான் போதுமானதாக இருந்தது. குழந்தையின் படிப்புக்கும் மருத்துவச் செலவுக்கும் சிக்கனமாகச் செலவு செய்தால் ஓரளவு போதும்.

இப்போதுள்ள குடும்பங்களின் தேவைகள் இவைகளோடு நிற்காதே ! குழந்தைகள் அவர்கள் வீட்டில் டி.வி. இல்லையென்றால் அடுத்த வீட்டிற்கு டி.வி. பார்க்கப் போறாங்க. இது மனைவிக்குப் பிடிக்கல. கணவரைக் கட்டாயப்படுத்தி டி.வி. வாங்கினார். நம்ம வீட்ல யாராவது வந்தாங்கண்ணா உட்கார்றதுக்கு பழைய நாற்காலிகள்தான் இருக்கு. சோபா வாங்கினா நல்லாயிருக்கும்ணு மனைவி சொல்ல, "காசில்லையே, எப்படி வாங்குறது"ண்ணு கணவர் கைவிரிச்சாரு. "கை நிறைய காசு வச்சிக்கிட்டா எல்லோரும் சாமான் வாங்கிறாங்க**?** எந்தப் பொருளையும் முதலாவதாகக் கொஞ்சம் காசு கொடுத்து

வாங்கிட்டு பின்னால தவணை முறையில பணம் கட்டிக்கலாம்" என்று மனைவி சொன்னார். கணவனுக்கு என்ன செய்றதுண்ணு தெரியல. குழந்தைகள் நச்சரிச்சிட்டாங்க. ஆக சோபாவும் வாங்கியாச்சு. இப்படியே துணி துவைக்கிற வாஷிங் மெசின், வீடு துடைக்கிற மெசின் என்று தவணையில் கிடைக்குதுண்ணு எல்லாத்தையும் வாங்கி, கடன்காரன் ஆனதுதான் மிச்சம்.

**தேவைகள்**

**மனிதர் உயிர் வாழ்வதற்கும், மனிதராக வாழ்வதற்கும் தேவைப்படும் அடிப்படையான அம்சங்கள். இவை இல்லாமல் மனிதராக வாழ முடியாது. (உ-ம் உணவு, உடை)**

**விருப்பங்கள்**

**நம்முடைய வாழ்வுக்கு அடிப்படைத் தேவையென்று சொல்வதற்கில்லை. இவை இல்லாமல் மனிதர் மனிதராக வாழ்ந்து விடலாம். (உ-ம். குளிர் பதனப்பெட்டி)**

**வகுப்புப் பயிற்சி**

1. *அடிப்படைத் தேவைகள்*

அ) முதல் நிகழ்வில் மணிகண்டன் வாழும் கிராமத்தில் என்னென்ன தேவைகள் மறுக்கப்பட்டதால் குழந்தை இறக்க நேரிட்டது என்பதைத் தொகுக்க. (எ.கா.) சாலை வசதி, போக்குவரத்து வசதி.

ஆ) இத்தேவைகள் மக்களின் அடிப்படை உரிமைகள் என்பதற்கான இரண்டு காரணங்களைத் தருக.

இ) இரண்டாம் நிகழ்வில் வாங்கப்பட்ட பொருட்கள் அடிப்படைத் தேவைகளா? விருப்பங்களா? வகுப்பில் குழுவாகச் சென்று விவாதித்து, கருத்துக்களைத் தொகுத்திடுக.

**அரசு நேர்மையும், மனித நேயமும் உடைய வேலை நிலைமைகள் உறுதியாகக் கிடைக்கச் செய்வதற்காகவும் பேறுகால உதவிக்காகவும் வகை முறையைச் செய்தல் வேண்டும்.**

**பிரிவு 42, இந்திய அரசியலமைப்புச் சட்டம், 1950**

2 அ) நீ மனிதனாக வாழ்வதற்கு வேண்டிய உனது அடிப்படைத் தேவைகளைப் பட்டியலிடுக.

1. ------------------------------ 2 ------------------------------

3 ------------------------------ 4 ------------------------------

5. ------------------------------ 6. ------------------------------

7. ------------------------------ 8. ------------------------------

9. ------------------------------ 10. ------------------------------

**மாறிவரும் சமூகச் சூழலுக்கேற்ப, ஒரு காலத்தில் விருப்பமாகக் கருதப்பட்டவை, பிறகு தேவையாக மாறும். எ.கா. 25 ஆண்டுகளுக்கு முன் டிரான்சிஸ்டர் விருப்பமாக இருந்திருக்கலாம். இன்று மக்களின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகிவிட்டது. சமூக உறவுத் தொடர்பின் முக்கியத்துவம் பெருகிவிட்ட இக்காலத்தில் இப்பொருள் இன்றியமையததாகி விடுகிறது.**

ஆ) இவைகளில் எவையெவை முக்கியமானவை என நீ நினைக்கிறாயோ அவைகளை வரிசைப்படுத்துக.

1. ------------------------------ 2 ------------------------------

3 ------------------------------ 4 ------------------------------

5. ------------------------------ 6. ------------------------------

7. ------------------------------ 8. ------------------------------

9. ------------------------------ 10. ------------------------------

இ) மாணவர் தயாரித்தவற்றை ஆசிரியர் கரும்பலகையில் எழுத வேண்டும். எந்த வகையான தேவைகளுக்கு மாணவர்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள் என்று மாணவரிடமே கேள்விகள் எழுப்பிப் பதில் கண்டு, இறுதியாகத் தமது ஒட்டு மொத்தமான சிந்தனைகளை ஆசிரியர் பகிர்ந்து கொள்ள வேண்டும்

**மனிதரின் அடிப்படைத் தேவைகள்**

**அவரது அடிப்படை உரிமைகள்**

### *3. விருப்பங்கள்*

அ) உனது விருப்பங்களைப் பட்டியலிடுக.

1. ---------------------------- 2 ----------------------------

3 ---------------------------- 4 ----------------------------

5. ---------------------------- 6. ----------------------------

7. ---------------------------- 8. ----------------------------

9. ---------------------------- 10. ----------------------------

ஆ) இவைகளில் எவை முக்கியமானவை என நீ கருதுகிறாயோ அவைகளை வரிசைப் படுத்துக.

1. ---------------------------- 2 ----------------------------

3 ---------------------------- 4 ----------------------------

5. ---------------------------- 6. ----------------------------

7. ---------------------------- 8. ----------------------------

9. ---------------------------- 10. ----------------------------

இ) மாணவர் வரிசைப்படுத்தியவற்றை ஆசிரியர் கரும்பலகையில் எழுத வேண்டும். எந்த வகையான தேவைகளுக்கு மாணவர்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள் என்று மாணவரிடமே கேள்விகள் எழுப்பிப் பதில் கண்டு, இறுதியாகத் தமது ஒட்டு மொத்தமான சிந்தனைகளை ஆசிரியர் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**வேளாண்மை, தொழில் அல்லது பிற துறை உழைப்பாளர் அனைவருக்கும் வேலையும் உயிர்வாழ் உழைப்பூதியம், பண்பார்ந்த வாழ்க்கைத்தரம் அளிக்கும் வேலை நிலைமைகளும் உறுதியாகக் கிடைக்குமாறு அரசு தக்க சட்டமியற்றுதல் வாயிலாகவோ, பொருளாதார ஒழுங்கமைவனம் வாயிலாகவோ, பிற வழி எதிலுமோ பெரு முயற்சி செய்தல் வேண்டும்.**

**பிரிவு 43, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950**

4) நீ வாழ்கிற கிராமம், நகரம் முதலானவற்றைக் கவனத்தில் கொண்டு பின்வரும் கேள்விகளுக்குப் பதில்களைத் தேடி எழுதவும்.

அ) உங்கள் ஊரில் எத்தகைய பொருளாதார நிலையில் வாழும் மக்கள் பிரிவினர் இருக்கிறார்கள் ? (எ.கா. கூலி விவசாயிகள், தச்சுத் தொழில் செய்பவர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள், பெரும் விவசாயிகள், வியாபாரிகள். . . . . )

ஆ) ஒவ்வொரு சாராருக்கும் என்ன அடிப்படைத் தேவைகள் இப்போது இருக்கின்றன ?

இ) என்ன அடிப்படைத் தேவைகள் இவர்களுக்கு இன்னும் வேண்டும் ?

ஈ) இந்த அடிப்படைத் தேவைகள் இன்னும் கிடைக்காததற்குக் காரணங்கள் என்ன ?

| எண் | மக்கள் பிரிவினர் | இருக்கும் அடிப்படைத் தேவைகள் | இன்னும் வேண்டிய அடிப்படைத் தேவைகள் | கிடைக்காமைக்குக் காரணங்கள் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |
| 7. | | | | |
| 8. | | | | |
| 9. | | | | |
| 10. | | | | |

உ) ஏன் மிகப் பலருக்கு அடிப்படைத் தேவைகள் இன்னும் நிறைவு செய்யப்படவில்லை ?

ஊ) ஏன் ஒரு சிலருக்கு மட்டும் அடிப்படைத் தேவைகள் மட்டுமல்ல, அலர்களுடைய விருப்பங்களும் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன ?

எ. இந்த மாதிரியான வேறுபாடுகளைக் காணும்போது உன் மனத்தில் பல கேள்விகள் எழக்கூடும். மூன்று முக்கியமான கேள்விகளை எழுதி, மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும்.

1.

2.

3.

ஏ. ஒரு சாராருக்கு மட்டும் அடிப்படைத் தேவைகள் இன்னும் மறுக்கப்படும் நிலையை நீ ஏற்றுக்கொள்வாயா ? ஏன் ? காரணங்கள் கூறவும்.

1.

2.

3.

**அரசு, அரசமைப்பின் தொடக்கத்திலிருந்து பத்தாண்டு கால அளவுக்குள் சிறுவர்கள் அனைவருக்கும் அவர்களுக்கு பதினான்கு வயது முடியும் வரை இலவச மற்றும் கட்டாயக் கல்விக்காக வகை செய்வதற்குப் பெரு முயற்சி செய்தல் வேண்டும்.**

**பிரிவு 45, இந்திய அரசியலமைப்புச் சட்டம்,1950**

ஐ) இந்த ஒரு சாராரின் அடிப்படைத் தேவைகளே இன்று நிறைவு செய்யப்படாதபோது மற்றவர்களுக்கு விருப்பங்கள் நிறைவு பெறும் நிலையை நீ ஏற்றுக் கொள்வாயா ? ஏன் ? காரணங்கள் கூறவும்.

1. ______________________________

2. ______________________________

3. ______________________________

**வீட்டுப்பயிற்சி**

1.அ) உனது வீட்டில் இருக்கும் பொருள்களைப் பட்டியல் இடுக

1. ------------------------------ 2 ------------------------------

3 ------------------------------ 4 ------------------------------

5. ------------------------------ 6. ------------------------------

7. ------------------------------ 8. ------------------------------

9. ------------------------------ 10. ------------------------------

ஆ) பிறகு எவை அடிப்படைத் தேவையைச் சார்ந்தவை, எவை விருப்பங்களைச் சார்ந்தவை என்று பிரிக்கவும்

| அடிப்படைத் தேவையைச் சார்ந்தவை | விருப்பங்களைச் சார்ந்தவை |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

இ) ஒவ்வொரு பொருளின் பயன் என்னவென்பதை எழுதவும்.

______________________________________________

______________________________________________

______________________________________________

ஈ) எந்தப் பொருள் இருந்தால்தான் வாழ முடியும் என்பதைக் குறிப்பிடவும்.

______________________________________________

______________________________________________

______________________________________________

உ) எந்தப் பொருள் இல்லாவிட்டால் வாழவே முடியாது என்பதைக் குறிப்பிடவும்.

______________________________________________

______________________________________________

______________________________________________

ஊ) எந்தப் பொருள் சுகபோகத்திற்காக, அலங்காரத்திற்காக, அந்தஸ்து உயர்வைக் காட்டுவதற்காக என்பதைக் குறிப்பிடவும்.

______________________________________________

______________________________________________

______________________________________________

### *கையளவு இதயம் – ஆனால் கடலளவு விருப்பங்கள்*

**நாம் பயன்படுத்தாத காலணிகள் வெறுங்காலுடன் நடப்பவருக்குரியவை !**

**நாம் குடியிருக்காமல் கட்டி வைத்திருக்கும் வீடுகள் வீடற்றவருக்கு உரிமையானவை!**

**நாம் உழாமல் சேர்த்து வைத்திருக்கும் நிலங்கள் உழுவோருக்கு உரிமையானவை!**

**நாம் பயன்படுத்தாமல் அலமாரியில் அடுக்கி வைத்திருக்கும் ஆடைகள் ஆடையற்றோர்க்கு உரிமையானவை!**

எ) நீயோ அல்லது உன் வீட்டில் உள்ளவர்களோ பயன்படுத்தாமலே வாங்கி முடக்கி வைத்திருக்கும் பொருள்கள் உள்ளனவா ? ஆம் எனில் அவற்றைப் பட்டியலிடுக

2. அ) உனக்குப் பிடித்த, அடிப்படைத் தேவையை நிறைவு செய்யும் ஏதாவது ஒரு பொருளைப் பெற்றோரிடமிருந்து பெற்று அல்லது நீயாக வாங்கி பள்ளிக்குக் கொண்டு வரவும்.

ஆ) மாணவர்கள் கொண்டு வந்த அனைத்துப் பொருள்களையும் அனைவரும் பார்ப்பதற்கு ஓர் இடத்தில் வைக்கவும்.

இ) ஏன் இந்தப் பொருள்கள் உனக்குப் பிடித்தது என்று வகுப்பில் சொல்லவும்.

ஈ) இந்தப் பொருள்கள் அனைத்தையும் அடிப்படைத் தேவை மறுக்கப்பட்ட நிலையில் இருக்கும் ஓர் ஏழைப் பெண்ணை அழைத்து வந்து அவரிடம் கொடுக்கவும்.

உ) இப்படிக் கொடுத்ததினால் என்ன உணர்வுகள் மாணவர்கள் உள்ளங்களில் எழுந்தனவென்று எழுதி, பிறகு வகுப்பில் ஒவ்வொரு மாணவரும் கூறவும்.

**3**(அ) கால் காணி நிலம் கூட இல்லாமல் கூலிக்காக வேலை செய்யும் பல்லாயிரம் உழவர்கள் நாட்டில் உண்டு. ஆனால், நிலத்தில் நேரடியாக உழவுத் தொழில் செய்யாமல் பல ஆயிரம் ஏக்கர்கள் நிலம் குவித்து வைத்திருப்பவரும் உண்டு. இவர்களை யார் என்று சொல்லலாம் ? இந்த நிலைமைக்கும் மனித உரிமைக்கும் என்ன தொடர்பு உள்ளது என்று எழுதி வகுப்பில் வாசிக்கவும்.

(ஆ) ஒண்டக் குடிசையில்லாத உழைக்கும் மக்கள் பல்லாயிரம் உண்டு. வீடுகள் பலவற்றைக் கட்டி உரிமை ஆக்குவோர் உண்டு. இவர்களை யாரென்று சொல்லலாம்? இந்த நிலைமைக்கும் மனித உரிமைக்கும் என்ன தொடர்பு உள்ளது என்று எழுதி வகுப்பில் வாசிக்கவும்.

---

---

---

---

---

---

*மனிதனே !*

*குத்துவிளக்கு வீட்டின் ஒரு மூலைக்கு மட்டுமே,*
*வெளிச்சம் தருகிறது. அதற்குத் தான் பால், பழம்,*
*பூ, புனிதம் எல்லாம்*
*தெருவிளக்கு தெருவுக்கே வெளிச்சம் தருவது.*
*இருந்தும் பூ வேண்டாம் ; பழம் வேண்டாம்;*
*பறவைகளின் எச்ச அர்ச்சனை நின்ற பாடில்லையே.*
*அதற்காக மனிதனே தெருவிளக்காக இருக்கிற நீ*
*குத்துவிளக்காக உன்னைக் குறுக்கிக் கொள்ளாதே.*

**அரசு, தன் பொருளாதாரத் திறன், வளர்ச்சி ஆகியவற்றின் வரம்புகளுக்குள்ளாக, வேலைக்கும், கல்விக்குமான உரிமையும், வேலையின்மை, முதுமை, பிணியுடைமை, இயலாமை ஆகிய நேர்வுகளிலும் பிற ஏற்றதல்லாத வறுமை நேர்வுகளிலும் பொது உதவிக்கான உரிமையும் உறுதியாகக் கிடைக்கச் செய்வதற்காகத் திறமுடைய வகைமுறையைச் செய்தல் வேண்டும்.**

**பிரிவு 41, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950**

# 15. மனித உரிமைகள்

**1)** உங்க வீட்ல மாட்டுத் தொழுவம் இருக்கா? மாட்டுத் தொழுவத்தில மாட்டைக் கட்டிப் போட்டிருப்போம். நாம நினைக்கிறபோது மாட்டுக்குத் தீவனம் வைப்போம். தண்ணி வைப்போம். சில சமயம் மறந்துபோவோம். அந்த மாடுகள் என்றாவது "நான் உழைக்கிறேனே, நான் உழைக்கிறதாலதானே உங்க குடும்பம் சாப்பிடுது – ஏன் எனக்கு உணவு தரலை"ன்னு கேட்குதா?

உங்க வீடு புதுசாயிருக்கு, எல்லா வசதியும் இருக்கு, வீடும் சுத்தமாயிருக்கு. ஆனா மாட்டுத்தொழுவத்தைப் பாரு. வைக்கோலும் சேறும் நிறைஞ்சிருக்கு. தரையெல்லாம் அழுக்கடைஞ்சி போயிருக்கு. அந்த மாடுக, "நீங்க மட்டும் பெரிய வீட்ல வசதியா இருக்கீங்களே, ஏன் என் தொழுவத்தை மட்டும் இவ்வளவு மோசமா வச்சிருக்கீங்க"ண்ணு என்றாவது கேட்குதா? "நீங்க மட்டும் காலையிலே உலாவப் போறீங்களே என்னை மட்டும் எப்போதும் கட்டியே போட்டு வச்சிருக்கீங்க"ன்னு கேட்குதா?

**2)** வளர்க்கிற ஆட்டைக் கொன்று சாப்பிடுகிறோம். கோழியைச் சாப்பிடுகிறோம். ஆட்டை வெட்டுற போது "என்னுயிரை எடுக்க உனக்கென்ன உரிமை"ன்னு ஆடு கேட்குதா? "எவ்வளவு முட்டை போட்டேன்? முட்டையையும் தின்னுட்டு என்னையும் சாப்பிடப் போறியே"ன்னு கோழி கேட்குதா?

கொஞ்சம் யோசிச்சுப் பார்ப்போமே. மனுசன் மட்டும் ஏன் கேள்வி கேட்கிறான்? ஏன் உரிமை கேட்கிறான்?

உயிர் வாழ உரிமைங்கிறான். குடியிருக்க வீடு கேட்கிறான். உடை, உணவு, படிப்பு அப்படி இப்படின்னு என்னென்ன உரிமையெல்லாம் கேட்கிறானே? இது ஏன்?

உயிருள்ள அனைத்துக்கும் உயிர்வாழ ஏக்கம் இருக்குன்னு பார்த்தோம். அப்படிப் பார்த்தா உயிருள்ள மிருகங்களுக்கும் வாழும் உரிமையுண்டு. ஆனால் அதைக்கேட்கிற அறிவுதான் அவைகளுக்கில்லை.

> **பெண்களுக்கெதிரான அனைத்து பாகுபாட்டு நடவடிக்கைகளைக் கண்டித்து அவற்றை ஒழிக்கத் தேவையான திட்டத்தை சரியான முறையில் தாமதமின்றி மேற்கொள்ள அனைத்து நாடுகளும் முயற்சி எடுக்க வேண்டும்.**
>
> **- பிரிவு 2, பெண்களுக்கெதிரான அனைத்து பாகுபாட்டு நடவடிக்கைள் ஒழிப்பு பற்றிய அகில உலக உடன்படிக்கை.**

ஆனால் மனிதனுக்குத்தான் உரிமை வேணும் என்று கேட்கிற அறிவு இருக்கு. மனிதன்தான் சிந்திக்கிறான். பிறரோடு இணைந்து சரி சமமாக வாழணும்னு நினைக்கிறான். மனிதன்தான் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கிறான். இவன்தான் தன்னுரிமையைக் கேட்கிறான். பிற மக்களுடைய உரிமைப் பாதுகாப்பையும் கடமையாகவும் கருதுகிறான்.

மனிதன்தான் புதிது புதிதாகக் கண்டு பிடிக்கிறான். ஒரு காலத்தில் குகையில் வாழ்ந்தவன் இன்று பெரிய வீடு கட்டி வாழ்கிறான். ஆனால் மிருகங்கள், பறவைகள் எப்போதும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. தூக்கணாங்குருவிக் கூட்டைப் பார்த்திருக்கீங்களா ? அக்கூடு எல்லா ஊரிலும் ஒரே மாதிரிதான் இருக்கும். தொடக்க காலத்தில் என்ன வடிவத்தில் இருந்ததோ, இப்போதும் அப்படியேதானிருக்கும். ஆனா மனிதன் தன் சிந்தனையால் தன் அறிவை வளர்க்கிறான். மாற்றம் செய்கிறான். ஆகவேதான் அவன் உரிமையைப் பற்றியும் பேசுகிறான்.

மனித உரிமையோடு வாழும்போது தான் மனிதர் நிறைவுள்ள மனிதராக வாழ முடியும். வளர முடியும்.

எட்டுமாதக் குழந்தை தனது கைகளையும், கால்களையும் விருப்பம் போல் அசைக்கிறது. எல்லோரையும் பார்த்துச் சிரிக்கிறது. தவழ்கிறது. எழுந்து நடக்க முயற்சி செய்கிறது. மழலை மொழியில் பேசுகிறது. இது எதைக் காட்டுகிறது ? அந்தக் குழந்தைக்கு இருக்கின்ற உரிமைக்கு இருக்கின்ற ஏக்கத்தின் முதல் பகுதி தான் அது.

**உ-ம்.** சிரித்து மகிழ்வதற்கு உரிமை, பேசி உறவாடுவதற்கு உரிமை, நடமாடிச் செல்வதற்கு உரிமை, கூடி வாழ உரிமை.

எனவே, மனித உரிமையோடு வாழும் போதுதான், மனிதர் நிறைவுள்ள மனிதராக வாழ முடியும்.

**மனித உரிமைகள்**

1. ***பிறப்பிலே வருவது:*** **எவ்வாறு உடலிலுள்ள கை, கால் போன்ற உறுப்புக்கள் பிறப்பிலிருந்தே நமக்கு இருக்கின்றனவோ, அதே போல் மனித உரிமையும் நம்மோடு பிறக்கும் போதே இருப்பது.**

2. ***பறிக்க முடியாது*** **: நம்மிடமிருந்து பொருட்களை யாரும் பறித்துக் கொண்டு போகலாம். ஆனா உரிமையைப் பறிக்க முடியாது.**

3. ***எல்லோருக்கும் பொதுவானது*** **: உலகில் மனிதராகப் பிறக்கின்ற எல்லோருக்கும் மனித உரிமை என்பது பொதுவானது. அவர் எம்மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், எந்த நாட்டில் வாழ்பவராக இருந்தாலும், எந்த மொழி பேசுபவராக இருந்தாலும், எந்தச் சாதியை சார்ந்தவராக இருந்தாலும் மனித உரிமை பொதுவானது.**

4. ***அளவுக்கு உட்பட்டது*** **: ஒருவர் தனது விருப்பம் போல் நடப்பது உரிமையல்ல. மாறாக, பிறரது உரிமையையும் மதித்து, பொறுப்புணர்வோடு வாழணும். இதுதான் கடமையுமாகும்.**

5. ***பாதுகாக்கும் கடமை*** **: பிறரது உரிமை பறிக்கப்படும் பொழுது அவர்கள் உரிமையைப் பாதுகாப்பது நம் கடமையாகும்.**

**மனித உரிமைகள் எப்போது செயலிழக்கின்றன?**

**அ. ஒடுக்கப்பட்ட மக்கள் நம்பிக்கை இழக்கின்றபோது**

**ஆ. நீதியோடு கூடிய அமைதி உருவாகிறபோது.**

# ஐ.நா.வின் அகில உலக மனித உரிமைப் பிரகடனம், 10 டிசம்பர் 1948

***சுதந்திரம், சமத்துவம்***

**மனிதர்கள் அனைவரும் சுதந்திரத்தோடும் மாண்போடும் உரிமைகளோடும் சமத்துவத்தோடும் பிறக்கின்றனர். அவர்கள் பகுத்தறிவும் மனசாட்சியும் வாய்க்கப் பெற்றவர்கள். எனவே ஒருவரோடு ஒருவர் சகோதர உணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்.**

**பிரிவு - 1**

**சுதந்திரம் சமத்துவம் எனும் இரண்டு உரிமைகளிலும் நிறம், பால், மொழி, சமயம், அரசியல், சொத்து, பிறப்பு என்னும் அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது. பிரிவு - 2**

## *மனித உரிமைகள் என்றால் என்ன?*

மனித உரிமைகள் மனிதர்களின் மாண்பு சம்பந்தப்பட்டது. இவ்வுரிமைகள் தேசங்கள் உருவாக்கியுள்ள அரசியலமைப்புச் சட்டங்களாலும் அகில உலக மனித உரிமை உடன்படிக்கைகளாலும் உத்தரவாதப்படுத்தப்பட்டு இந்திய நீதி மன்றங்களால் நடைமுறைப் படுத்தப்படுவதாகும்.

**கடவுள் மூன்று முக்கிய நன்கொடைகளை இந்தியாவுக்கு அருளியுள்ளார் :**

1. **பேச்சுரிமை**
2. **கருத்துரிமை**
3. **மேற்கண்ட இரண்டையும் எப்போதுமே கடைபிடிக்காத விவேகமின்மை**

**வி.ஆர். கிருஷ்ணய்யர், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி**

### உயிர் வாழும் உரிமை

மனிதர் அனைவர்க்கும் உயிர்வாழ உரிமையுண்டு. சுதந்திரமாக வாழ உரிமையுண்டு. பாதுகாப்பைப்பெற உரிமையுண்டு. (3)

### ஆரோக்கியத்திற்கான உரிமை

தாமும் தமது குடும்பத்தினரும் போதுமான அளவு உணவு, உடை, வீடு, மருத்துவக் கவனிப்பு மற்றும் தேவையான சமுதாய சேவைகளைப் பெற்று ஆரோக்கியமாக வாழ உரிமை உண்டு. (25.1)

குழந்தைக்கு ஓய்வெடுக்க உரிமையுண்டு. விளையாட்டில் ஈடுபட உரிமையுண்டு.

கலை, கலாச்சார வாழ்வில் சுதந்திரமாக ஈடுபட உரிமையுண்டு.

பிரிவு 31.1 (இ), ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை, 1998

**சமூகப் பாதுகாப்புரிமை**

நோய், இயலாமை, விதவைமை, முதுமை, போன்ற நிலைகளிலும் பாதுகாப்பு பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. (25.1)

***சித்திரவதைக்கு உட்படுத்தப்படாமல் வாழ உரிமை***

**யாரையும் சித்திரவதை செய்யவோ, கொடுமைப் படுத்தவோ, மனிதாபிமானமற்ற முறையிலோ அல்லது தரக்குறைவான முறையிலோ நடத்தவோ தண்டனை அளிக்கவோ கூடாது (5).**

***கலாச்சார உரிமை***

**தாம் சார்ந்த கலாச்சார வாழ்வில் பங்கு கொள்ளவும் கலைகளை அனுபவிக்கவும் அறிவியல் வளர்ச்சி தரும் பயனை அனுபவிக்கவும் ஒவ்வொரு-வருக்கும் உரிமையுண்டு. (27.1)**

**ஒரு நாட்டின் சமூக அமைப்பு, அரசியல், பொருளாதாரம் என்பனவெல்லாம் ஒடுக்கப்பட்ட மக்களைப் பாதுகாக்கின்ற காவலரணாக விளங்கவேண்டும்.**

**பிரிவு 4:3, ஆசிய மனித உரிமைகள் மக்கள் சாசனம், 1998.**

### சமத்துவமும் சட்டப் பாதுகாப்பும்

**சட்டத்தின் முன் அனைவரும் சமம். சட்டத்தைப் பாதுகாப்பதில் எல்லோருக்கும் சம உரிமை உண்டு.**

**எனவே எல்லோருக்கும் சமமான பாதுகாப்பு அளிக்க வேண்டும் (7).**

### சங்கமாகும் உரிமை

**அமைதியான முறையில் கூட்டம் கூடவும், சங்கமாகச் சேருதற்கும் உரிமை உண்டு. (20.1)**

**சங்கங்களில் யாரையும் கட்டாயப்படுத்தி சேர்க்க உரிமை இல்லை (20..2)**

**இந்தியக்குடி மக்களுக்கு**

**அ. பேச்சுரிமை**
**ஆ. அமைதியாகக் கூடும் உரிமை**
**இ. சங்கமாகும் உரிமை**
**ஈ. நாட்டினுள் எங்கு வேண்டுமானாலும் செல்லும் உரிமை**
**உ. நாட்டில் எவ்விடத்தும் தங்கும் உரிமை**
**ஊ.விரும்பிய தொழிலைச் செய்யும் உரிமையுண்டு.**

**இந்திய அரசியல் சாசனம், 19(1)**

### *வாக்களிக்கும் உரிமை*

**ஒவ்வொருவருக்கும் தங்கள் நாட்டு அரசாங்கத்தில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்கேற்கும் உரிமை உண்டு. (21.1)**

**பொதுப்பணிகளில் பங்கேற்கும் உரிமையில் சமவாய்ப்பு அளிக்கப் படவேண்டும். (21.2)**

### ஆண் பெண் சம ஊதியம் பெற உரிமை

எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல் ஒரே வேலைக்கு ஒரே ஊதியம் பெற ஒவ்வொருவக்கும் உரிமை உண்டு (23.2)

### *சொத்துரிமை*

**ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையிலோ அல்லது மற்றவர்களோடு சேர்ந்தோ சொத்துக்களை வைத்துக் கொள்ள உரிமை உண்டு (17.1)**

**அரசு இந்தியக் குடிமக்களை சமயம், இனம், மொழி, ஆண், பெண், குலம் என்னும் அடிப்படையில் பாகுபடுத்தாமல் சமமாக நடத்த வேண்டும்.**

**பிரிவு 15, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950**

## விரும்பியவரைத் திருமணம் செய்து கொள்ள உரிமை

**வயதுக்கு வந்த ஆணும் பெண்ணும் இனம், தேசம், மதம் போன்ற எந்தவிதமான வரைமுறைகளுக்கும் உட்படாமல் ஒருவரை ஒருவர் மணந்து கொண்டு குடும்பத்தை உருவாக்கிக் கொள்ள உரிமை உண்டு. (16.1).**

**திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்கள் இருவரின் சம்மதத்தின் பின்னர்தான் திருமண வாழ்க்கையைத் தொடங்க வேண்டும் (16.2).**

## கல்வி பெறும் உரிமை

**எல்லோருக்கும் கல்வி கற்கும் உரிமையுண்டு. குறைந்த பட்சம் ஆரம்ப அளவிலாவது அடிப்படை நிலைகளிலாவது இலவசக்கல்வி அளிக்க வேண்டும். ஆரம்பக்கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டும். தொழில் நுட்பக் கல்வியும் தொழிற்கல்வியும் எளிதில் எல்லோருக்கும் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். மேலும் தகுதி அடிப்படையில் எல்லோருக்கும் உயர் கல்வி சமமாகக் கிடைக்க வழி செய்ய வேண்டும். (26.1)**

**பெற்றோர் தம் குழந்தைகளுக்குரிய கல்வியைத் தெரிவு செய்யும் உரிமை உண்டு (26.3)**

**மனிதராகப் பிறந்த அனைவருக்கும் உயிர் வாழவும் சுதந்திரத்தோடும், பாதுகாப்போடும் வாழவும் உரிமையுண்டு.**

**பிரிவு - 3, ஐக்கிய நாட்டவையின் மனித உரிமைப் பிரகடனம். 1948.**

**அரசு இந்தியக் குடிமக்களை சமயம், இனம், மொழி, ஆண், பெண், குலம் என்னும் அடிப்படையில் பாகுபடுத்தாமல் சமமாக நடத்த வேண்டும்.**

**பிரிவு 15, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950**

### சமய உரிமை

**சிந்தனை, மனச்சாட்சி, மதம் ஆகியவற்றில் சுதந்திரமாகச் செயல்பட ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ளது. தனது நம்பிக்கையை அல்லது மதத்தை மாற்றிக் கொள்ளவும் தனியாகவோ அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து ஒரு கூட்டமாகவோ தனியிடத்திலோ அல்லது பொது இடத்திலோ போதிப்பதற்கும் பயிற்சி செய்வதற்கும் வழிபாடு செய்வதற்கும் கடைப்பிடிப்பதற்குமான சுதந்திரம் அனைவர்க்கும் உண்டு. (18).**

### குடியிருக்கவும் இடம்பெயரவும் உரிமை

**தான் சார்ந்த நாட்டினுள் எங்கு வேண்டுமானாலும் செல்லவும் குடியிருக்கவும் ஒருவர்க்கு உரிமையுண்டு. (13.1)**

**ஒவ்வொருவருக்கும் தமது சொந்த நாட்டில் இருந்தோ அல்லது வேறு எந்த நாட்டிலிருந்தோ வெளியே செல்லவும் மீண்டும் தமது நாட்டிற்குத் திரும்ப வரவும் உரிமை உண்டு. (13.2)**

அம்மா! நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்களே!
உங்கள் மேனி அழகுக்கு என்ன உபயோகிக்கிறீர்கள்
என்று ஒருவர் கேட்டார். அந்த அம்மா என்ன சொன்னார் தெரியுன்னா?
"என் உதடுகளுக்கு உண்மையும்,
குரலுக்கு இனிமையும்
கண்களுக்கு அனுதாபமும்
கைகளுக்கு கொடையும்
இதயத்திற்கு அன்பையும்
உபயோகிக்கிறேன்" என்றார்.

### குடியுரிமை

ஏதாவதொரு தேசத்தைச் சேர்ந்தவராக இருக்க ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு (15.1)

நியாயமற்ற முறையில் யாருடைய தேச உரிமையையும் பறிக்கக் கூடாது. ஒருவர் தன்னுடைய தேசத்தை மாற்றிக்கொள்ளும் உரிமையையும் மறுக்கக் கூடாது (2).

### கருத்தை வெளிப்படுத்தும் உரிமை

ஒவ்வொருவருக்கும் கருத்துச் சுதந்திரமும் அதை வெளிப்படுத்து-தற்கான உரிமையும் உண்டு. விரும்பிய கருத்துக்களை உருவாக்கிக் கொள்வதற்கும், தேடவோ, பெறவோ விரும்பிய வழியில் பிறருக்கு எடுத்துச் சொல்லவும் உரிமையுண்டு.(19).

நான் யாருக்கும் அடிமையாக இருக்க விரும்பவில்லை.
அதே வேளை யாருக்கும் எசமானும் இல்லை.
.இதைத்தான் நான் சனநாயகம் எனக் கருதுகிறேன்.
இக்கருத்தில் முரண்பாடுகள் எழுமானால்,
அதன் பெயர் **சனநாயகம்** இல்லை.

-ஆபிரகாம் லிங்கன்

### வேலை செய்ய உரிமை

**ஒவ்வொருவருக்கும் வேலை செய்யவும் விரும்பிய வேலையைத் தேர்ந்தெடுக்கவும் நல்ல சூழலில் வேலை செய்யவும் வேலையின்றியிருக்கையில் சமூகப் பாதுகாப்பு பெறவும் உரிமையுண்டு. (23.1)**

**மனித உரிமைகளை ஆறு வகைகளாகப் பிரிக்கலாம்.**

| உரிமை | உதாரணம் |
|---|---|
| 1. கலாச்சார உரிமை | கல்வியுரிமை |
| 2. பொருளாதார உரிமை | நியாயமான ஊதியம் பெறும் உரிமை |
| 3. சமூக உரிமை | சமத்துவமாக வாழ்வதற்கான உரிமை |
| 4. சமய உரிமை | வழிபாட்டு உரிமை |
| 5. அரசியல் உரிமை | பேச்சுரிமை |
| 6. சுற்றுச் சூழல் உரிமை | சுத்தமான காற்றைச் சுவாசிக்கும் உரிமை |

**மலேரியா**

பண்பில் வறுமை, முயற்சியின்மை, உறுதியற்ற
உள்ளம் உடையோரைக் கொண்ட முடமாக்கப்பட்ட ஒரு சமூகத்திற்கு
மலேரியா தான் சரியான நோய் தீர்க்கும் மருந்தாகும்.

- தாகூர்

**வகுப்புப்பயிற்சி**

1. மேலே கொடுக்கப்பட்டுள்ள ஆறு வகைகளின் கீழ் உனக்கிருக்கும் உரிமைகளைப் பட்டியல்படுத்துக

| பொருளாதார உரிமைகள் | சமூக உரிமைகள் | சமய உரிமைகள் | அரசியல் உரிமைகள் | கலாச்சார உரிமைகள் | சுற்றுப்புறச் சூழல் உரிமைகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

2. உனது கடமையையும் உரிமையையும் எழுதுக.

**எழுதப் படிக்கக் கற்றுக்கொள்வது - உரிமை.**

(உ–ம்) பள்ளியில் படிக்கும் மாணவன் தினமும் பள்ளிக்குச் செல்வது – கடமை

**எனது உரிமை**

| வீட்டில் | பள்ளியில் |
|---|---|
| | |

## எனது கடமை

| வீட்டில் | பள்ளியில் |
|---|---|
| | |

## உரிமை

| பெற்றோரின் | குழந்தையின் |
|---|---|
| | |

## கடமை

| பெற்றோரின் | குழந்தையின் |
|---|---|
| | |

**உரிமை**

| ஆசிரியரின் | மாணவரின் |
|---|---|
| | |

**கடமை**

| ஆசிரியரின் | மாணவரின் |
|---|---|
| | |

**உரிமை**

| முதலாளியின் | தொழிலாளியின் |
|---|---|
| | |

**கடமை**

| முதலாளியின் | தொழிலாளியின் |
| --- | --- |
| | |

3.(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள மக்களுக்கு என்னென்ன உரிமைகள் இருக்கின்றன ?

| | |
| --- | --- |
| **ஏழைகள்** | |
| 1. | 2. |
| 3. | 4. |
| 5. | 6. |
| **கூலி வேலை செய்பவர்கள்** | |
| 1. | 2. |
| 3. | 4. |
| 5. | 6. |
| **பெண்கள்** | |
| 1. | 2. |
| 3. | 4. |
| 5. | 6. |

| குழந்தைகள் | |
|---|---|
| 1. | 2. |
| 3. | 4. |
| 5. | 6. |
| **தலித் மக்கள்** | |
| 1. | 2. |
| 3. | 4. |
| 5. | 6. |

(ஆ) இம்மக்களின் உரிமை மீறப்படுவதினால் இவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் எவை?

(இ) இவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க என்ன செய்யலாம்?

| மக்கள் | மீறப்படும் உரிமைகள் | பாதிப்புக்கள் | பாதுகாக்க வழிமுறைகள் |
|---|---|---|---|
| 1. ஏழைகள் | | | |
| 2. கூலி வேலை செய்வோர் | | | |
| 3. பெண்கள் | | | |

| | | | |
|---|---|---|---|
| 4. குழந்தைகள் | | | |
| 5. தலித் மக்கள் | | | |

4. எது சரி, எது தவறு என்று இந்தக் குறி (✓) இடவும். பிறகு காரணங்களை எழுதவும்.

| உரிமைப்பறிப்பு | சரி | தவறு | காரணம் |
|---|---|---|---|
| 1. நீ முகமதியராக இருப்பதால் இந்திய நாட்டில் வசிக்கக் கூடாது | | | |
| 2. நீ ஒரு தலித்தாக இருப்பதால் பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கக் கூடாது. | | | |
| 3. நீ பெண்ணாக இருப்பதால் உனக்குச் சொத்துரிமை கிடையாது. | | | |
| 4. நீ விரும்பிய இடங்களுக்குப் பயணம் செய்யக் கூடாது. | | | |
| 5. நீ விரும்பிய வேலையைச் செய்யக் கூடாது. | | | |
| 6. நீ ஒரு சில கடைகளில் மட்டுமே பொருட்களை வாங்க வேண்டும். | | | |
| 7. பெண்கள் வாகன ஓட்டுநராக இருக்கக் கூடாது. | | | |
| 8. நீ உன் தாய்மொழியில் பேசக் கூடாது. | | | |
| 9. பள்ளி முடிந்தவுடன் பையன்கள் விளையாடச் செல்லலாம். பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும். | | | |
| 10. நீ விரும்பிய மதத்தைத் தழுவக் கூடாது. | | | |
| 11. நீ விரும்பியவரைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது | | | |
| 12. கிராமத்து இளைஞர்கள் மன்றங்களை அமைக்கக் கூடாது. | | | |

5. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களை வாசித்து சரியா, தவறா என்று இந்தக் குறி (|) இடவும். பிறகு காரணங்களை எழுதவும்.

| வாக்கியங்கள் | சரி | தவறு | காரணம் |
|---|---|---|---|
| 1. நாட்டின் வளர்ச்சிக்காகப் பெரிய அணைகளைக் கட்டுகின்ற போது, அங்கு வாழ்கின்ற மக்களை அப்புறப்படுத்துவது தவறில்லை. | | | |
| 2. ஏழைகளுக்கு வீடு கட்டித் தருவது அரசின் கடமையல்ல. ஏனென்றால், ஏழைகள் சோம்பேறிகளாகி விடுவர். | | | |
| 3. தொழிலாளர் வாரத்திற்கு ஏழு நாட்களும் வேலை செய்ய வேண்டும். | | | |
| 4. 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் வருமானத்திற்காக உழைப்பதில் தவறில்லை. | | | |
| 5. விதவை மறுமணம் செய்யக் கூடாது. | | | |
| 6. பெண்களுக்கு ஆண்களைப் போன்று சம ஊதியம் தருவது நியாயமற்றது. | | | |
| 7. அழகுப் பொருட்கள் தயாரிக்கத் தந்தங்களைப் பயன்படுத்துவதற்காக யானைகளைக் கொல்வது தவறல்ல. | | | |
| 8. ஏழைகள் துன்பப்படக் காரணம் சோம்பேறியாக இருப்பதால்தான். | | | |
| 9. நல்ல மனைவிமார்கள் தங்கள் கணவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். | | | |
| 10. தலித் மக்களும் மற்றவர்களைப் போல மதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானது. | | | |
| 11.நகரை அழகுபடுத்தக் குடிசைப் பகுதிகளை அகற்றுவது தவறில்லை. | | | |
| 12.இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைத் தருவது அரசின் கடமையல்ல. | | | |
| 13.ஏழைக் குழந்தைகள் பள்ளிக்குச் சென்று விட்டால் ஆடுமாடுகளைக் காப்பாற்ற முடியாது. எனவே, அவர்கள் ஆடு, மாடு மேய்ப்பது குடும்ப வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். | | | |
| 14.பணக்காரர்களுக்குப் பணமும், தகுதியும் இருப்பதால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது சரியானதே. | | | |

6. (1) இப்பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள ஐக்கிய நாட்டவையின் மனித உரிமைப் பிரகடனத்தில் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை குழுவாகச் சேர்ந்து படிக்கவும். குழுவாகப் படித்தபின்பு, அதில் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை வரிசைப்படுத்தவும்

1.

2.

3.

4. முதலியன

(2) இங்கு கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளில் நீ புதிதாகத் தெரிந்து கொண்ட உரிமைகள் யாவை ?

1.

2.

3. முதலியன

(3).இவ்வுரிமைகளில் உன் அனுபவத்திலிருந்து நம்நாட்டு மக்கள் அனுபவிக்கும் உரிமைகள் யாவையென வரிசைப் படுத்துக.

(4).இவ்வுரிமைகளில் உன் அனுபவத்திலிருந்து நம்நாட்டு மக்களுக்கு மறுக்கப்படும் உரிமைகள் யாவையென வரிசைப் படுத்துக.

**வீட்டுப்பயிற்சி**

7(அ) உனக்குப் பிடித்த உரிமை ஒன்றைத் தேர்வு செய்து இங்கே எழுதவும்.

(ஆ) இதனை நன்கு பிரதிபலிக்கும் வகையில் ஒரு படம் வரையவும்.

(இ ) இந்தப் படத்தை உன் வகுப்பு மாணவர்களிடம் காட்டி,

1. ஏன் இந்த உரிமை உனக்குப் பிடித்திருக்கிறது என்று கூறவும்.
2. இந்தப் படம் அந்த உரிமையை எப்படிப் பிரதிபலிக்கிறது என்றும் கூறவும்.

(ஈ) இந்தப் படத்தை வகுப்பின் அறிக்கைப் பலகையில் மற்றவர்களின் பார்வைக்காக வைக்கவும்.

(உ) வரைபடங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பார்த்த பிறகு, ஆசிரியர் மாணவர்களிடம் சில கேள்விகளை எழுப்பவும்.(உ–ம். நீங்கள் தேர்ந்தெடுத்த உரிமையானது மற்றவர்கள் உங்களுக்குக் கொடுத்த உரிமையா, அல்லது உங்களுடைய உள்ளத்திலிருந்து உருவாகிய உரிமையா ? எப்படி ?)

(ஊ) இறுதியாகத் தம்முடைய ஒட்டுமொத்தமான சிந்தனைப் பகிர்வை ஆசிரியர் மாணவர்களுக்கு அளிக்க வேண்டும்.

## சட்டங்கள் என்ன செய்யும் ?

**1833ம் ஆண்டு சமூக இயலாமைகள் நீக்கச் சட்டம்**

**1925ம் ஆண்டு திருவாங்கூர் அரசின் தீண்டாமை ஒழிப்புப் பிரகடனம்**

**1939ம் ஆண்டு கோயில் நுழைவுச் சட்டம்**

**1950ம் ஆண்டு தீண்டாமை ஒழிப்புச் சட்டம்**

**1989ம் ஆண்டு தீண்டப்படாதோர், பழங்குடியினர் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்.**

**இவ்வளவு சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டபிறகும் தீண்டாமை ஒழியவில்லை. சாதி மோதல்கள் தொடர்கின்றன. இன்னும் ஊருக்கு வெளியேதான் சேரிகள் இருக்கின்றன. சேரிகளுக்கும் நல்ல வீதிகள் இல்லை. சேரி மனிதர்களுக்கு சுடுகாடுகள் இல்லை.**

**சுடுகாடுகள் இருந்தால் அங்கு போவதற்கு பாதைகள் இல்லை. கோயில்களில் நுழைய முடியவில்லை. கோயில் தேர்களைக் கூட தொட உரிமையில்லை.**

# 16. அரசாட்சியும் மக்களாட்சியும்

**ஆசிரியர்** : அருமை மாணவர்களே, மாணவியரே, இன்னைக்கு நாம் மனித உரிமைப் பாடத்துல ஒரு முக்கியமான பாடத்தைப் பற்றிப் பேசப்போறோம்.

**மாணவர்** : ஐயா, ஏதாவது கதை சொல்லப்போறீங்களா ?

**ஆசிரியர்** : கதையில்ல. நமக்கெல்லாம் ரொம்ப தேவையான ஒரு விசயத்தைப் பற்றிப் பேசப்போறோம்.

**மாணவர்** : அது என்னய்யா ? சீக்கிரம் சொல்லுங்கய்யா.

**ஆசிரியர்** : நம்ம வகுப்புல நீங்கள்ளாம் சுதந்திரமாப் பேசுறதப் பார்த்து ரொம்ப சந்தோசமாயிருக்கு.

**மாணவர்** : நாங்களாம் சுதந்திரமாக இருக்கணும்னு, நீங்க தானேய்யா சொல்லித் தர்றீங்க. அதனாலதான் உரிமையோடு வெளிப்படையாப் பேசுறோம்.

**ஆசிரியர்** : இந்தச் சுதந்திரம், உரிமைகள் என்றெல்லாம் பேசுறீங்களே, இதையெல்லாம் உங்களுக்குத் தந்தது யாரு ?

**மாணவர்** : நீங்கதான்.

**ஆசிரியர்** : நானா ? சரி ! அப்படியே வச்சுக்குவோமே ! எனக்குத் தந்தது யாரு ?

**மாணவர்** : உரிமைகளை யாரும் தர்றதில்லை. அது நம்மோட பிறந்ததுன்னு நீங்கதானே சொன்னீங்க ? இதை யாரும் தரமுடியாதில்லே ?

**ஆசிரியர்** : அபாரம் ! ! அழகாச் சொன்னீங்க. உரிமைகள் நம்மோட ஒட்டிப் பிறந்தது உண்மைதான். ஆனால் அதை வெளிப்படுத்த நமக்கு உரிமை வேணுமில்லையா ? அதை யாரு கொடுத்தா ? இதுதான் கேள்வி. இதைத்தான் நாம் இப்ப பார்க்கப் போறோம்.

அதுக்கு முன்னால் இன்னொரு கேள்வி கேட்கிறேன். அதற்குப் பதில் சொல்லுங்கள் பார்ப்போம்.

> **ஊராட்சி மன்றங்கள் தனித்து இயங்கும் அளவிற்கு அதிகாரம் படைத்த அமைப்புக்களாக உருவாக முயற்சிகளை எடுக்க வேண்டியது மாநிலங்களின் கடமையாகும்.**
>
> **- பிரிவு 40, வழிகாட்டும் நெறிமுறைகள், இந்திய அரசியல் சாசனம், 1950**

**மாணவர்** : (பெருத்த குரலில்) என்ன கேள்வியய்யா ?

**ஆசிரியர்** : நம்மை இப்ப யாரு ஆள்றாங்க ?

**மாணவர் 1** : முதலமைச்சர்.

**மாணவர் 2** : இல்ல பிரதம மந்திரி.

**ஆசிரியர்** : சரி சரி. இந்த மந்திரியை நியமிச்சது யாரு ?

**மாணவர்** : கவர்னர் அல்லது குடியசுத் தலைவர்.

**ஆசிரியர்** : கவர்னரும் குடியரசுத்தலைவரும் யாரை வேணுமின்னாலும் தன் விருப்பப்படி நியமிக்கலாமா ?

**மாணவர்** : அது முடியாது. எந்தக்கட்சி அதிகமா இருக்கோ, அந்தக் கட்சியின் தலைவரைத்தான் நியமிப்பாரு.

**ஆசிரியர்** : இந்தக் கட்சிதான் அதிகமா இருக்கணும்னு தீர்மானிக்கிறது யாரு ?

**மாணவர்** : நாமதான். நாம எந்தக்கட்சி ஆட்சிக்கு வரணும்னு நினைக்கிறோமோ அந்தக் கட்சி ஆட்களுக்கு ஓட்டு போடுகிறோம். அவுங்கதான் ஆட்சிக்கு வரமுடியும்.

**ஆசிரியர்** : இப்போதுதான் முக்கியமான கட்டத்துக்கு வர்றோம். அப்போ நம்மை ஆளும் முதலமைச்சரையோ பிரதமரையோ தேர்ந்தெடுப்பது யாரு ?

**மாணவர்** : நாமதான்.

**ஆசிரியர்** : அப்போ நம்மை ஆளுகிற அமைச்சர்களை, தலைவர்களை நம்ம விருப்பப்படி தேர்ந்தெடுக்கிறோம். ஓட்டு மூலமா தேர்ந்தெடுக்கிறோம். நாம இல்லன்னா யாரும் மந்திரியாக முடியாது. இல்லையா ? இதைத்தான் மக்களாட்சின்னு சொல்றோம். நமக்கு யார் நன்மை செய்வாங்க, யார் நம்ம உரிமைகளைக் காப்பாத்துவாங்க என்பதை நாமே முடிவு செய்கிறோம். மக்களே மக்களுக்காக மக்களால் நடத்தப் பெறுகிற ஆட்சி – நாமே எல்லோரும் சேர்ந்து ஆட்சியை அமைக்கிறதுனாலதான் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்னு சொல்லுகிறோம்.

> **அரசுகள் மனித நேயம் கொண்டவையாகவும், திறந்த மனதுடனும், பொறுப்புடனும் செயல்பட வேண்டும்.**
>
> *- பிரிவு 5-2, ஆசிய மனித உரிமைகள் சாசனம், 1998.*

**மாணவர்** : இன்னொரு சந்தேகமய்யா. மன்னர்கள்னு சொல்றீங்களே, மன்னர்கள்னா ஒருத்தர்தானே இருக்க முடியும்? எல்லோரும் எப்படி மன்னராக முடியும்?

***ஆசிரியர்*** : (ஆச்சரியத்துடன்) மனித உரிமைக் கல்வி உண்மையிலேயே நல்லா வேலை செய்யுது. எவ்வளவு கடினமான கேள்வி கேட்கிறே?

மன்னர்னா ஒருத்தர்தான் இருக்க முடியும். உண்மைதான். மன்னராட்சியிலே எல்லா அதிகாரமும் ஒரு ஆளுட்டதான் இருக்கும். அவரத்தான் மன்னருங்கிறோம். மக்கள் மன்னரைத் தேர்ந்தெடுக்க மாட்டாங்க. பல சமயங்கள்ல பரம்பரை பரம்பரையா ஒரு குடும்பத்தைச் சார்ந்தவங்களே மன்னராயிருப்பாங்க.

**மாணவர்** : மன்னர் தப்பு செய்தா கேள்வி கேட்கலாமா? தவறுக்கு தண்டனையுண்டா?

***ஆசிரியர்*** : கேட்பதற்கு உரிமை கிடையாது. மன்னர் இப்படித்தான் ஆட்சி செய்யணும்னு சொல்ல மக்களுக்கு உரிமையும் கிடையாது, சட்டமும் கிடையாது. மக்களாட்சியிலே நமக்கு என்னென்ன உரிமைகள் இருக்குன்னு உங்களுக்குத் தெரியும். ஆனால் மன்னராட்சியில மக்கள் இப்படித்தான் இருக்கணும்னு கடமைகள்தான் இருக்கும். யாரும் உரிமைபற்றிப் பேச முடியாது.

**மாணவர்** : மக்களாட்சியில்தான் அப்ப மனித உரிமைகளே இருக்குமா?

***ஆசிரியர்*** : ஆம்.. சரியாச் சொன்னாய். மக்களால் உருவாகும் அரசு மக்கள் உரிமையைக் காப்பாத்தும்ல. ஆகவேதான் மக்களாட்சியை நாம் பாதுகாக்கணும்னு சொல்றோம். மக்களாட்சி மக்களை மதிக்கிற ஆட்சி. எல்லோரையும் சமமாக மதிக்கிற ஆட்சி. இங்குதான் நீதியிருக்கு.

**மாணவர்** : மன்னர்கள் எவ்வளவோ பேர் நல்லவங்களா இருந்திருக்காங்களே. அவங்களைப் பத்தியெல்லாம் நாம் வரலாற்றுப் பாடத்திலே படிக்கிறோமே.

**ஆசிரியர்** : உண்மைதான். நல்ல கொடைத்தன்மை உள்ள மன்னர்கள் இருந்திருக்காங்க. இரக்கமுள்ளவங்க இருந்திருக்காங்க. கருணையுள்ளவங்க இருந்திருக்காங்க. இல்லைன்னு சொல்லலை. சில மன்னர்களிடம் இம்மாதிரி நல்ல குணங்கள் இல்லைன்னு வச்சுக்குவோம். நாம அவர்களை என்ன செய்ய முடியும்? மாற்ற முடியுமா? முடியாதே. ஆனால் மக்களாட்சியிலே நாமளே தேர்ந்தெடுத்த ஆட்சி தப்பு செய்தாஙகன்னு வைங்க, நம்ம உரிமைகளை மதிக்கலைன்னு வைங்க. அஞ்சு வருசத்திற்கு பிறகு வரும் தேர்தலில் அவங்களை வேண்டாம்னு தூக்கி எறிஞ்சிரலாம்ல? இதுதான் மக்களாட்சி.

இன்னொன்றையும் சொல்லனும்.

மன்னர் மக்களுக்கு கருணையோடும் இரக்கத்தோடும் நல்ல காரியங்கள் செய்யலாம். மக்களாட்சியிலும் இரக்கம், கருணையுள்ளம் வேணும். மறுக்கல. ஆனால் மக்களாட்சியில மக்களுக்கு நல்லது செய்ய வேணும்கிறது ***அரசாங்கத்தின் கடமை.*** இதைச் செய்யலைன்னா மக்கள் அரசைக் கேள்வி கேட்க வேண்டுவது மக்கள் உரிமையாகும். அதற்காகத்தான் அரசியலமைப்புச் சட்டங்கள் வச்சிருக்கோம். அரசாங்கம் சட்டப்படி நடக்கலைன்னா நீதிமன்றத்துக்குப் போறோம்.

**மாணவர்** : மக்களாட்சியில இவ்வளவு சிறப்பு இருக்கா? நாங்க வெறும் ஓட்டுப் போடறது மட்டும்தான் மக்களாட்சின்னு நினைச்சிக்–கிட்டிருந்தோம். ***மக்களாட்சிக்கு ஆணி வேரே மக்கள்தாம் என்பது இப்பத்தான் புரியுது.***

**ஆசிரியர்** : மக்களாட்சியிலே நமக்கெல்லாம் என்ன பெயர் தெரியுமா? மன்னராட்சியில நாமெல்லாம் மன்னருடைய குடிகள். குடிகள் மன்னரைச் சார்ந்து அவருக்குக் கீழ்ப்படிந்துதான் இருக்கணும். ஆனா, மக்களாட்சியில நாமெல்லாம் குடிமக்கள். இங்கு குடிமக்களுக்கு சுதந்திரம் உண்டு; சட்டப் பாதுகாப்பு உண்டு; குடியுரிமை உண்டு. உரிமையெல்லாம் இருக்கு. நாமெல்லாம் எந்த மதத்தைச் சார்ந்தவர்களானாலும், ஆண் பெண் என்றாலும், எந்த மொழி பேசினாலும் எப்போதும் குடிமக்கள்தான்.

இந்த மக்களாட்சிதான் உரிமைகளைத் தந்துள்ளது. மக்களாட்சியாய் இருப்பதால்தான் நாம் நம்ம வகுப்புல மனித உரிமைகளைப் பத்திப் பேச முடியுது. சுருக்கமாச் சொன்னா, நாம ஏற்கனவே பேசிய மனித மாண்பு இங்குதான் போற்றப்படுது.

> ***குடிமக்களுக்கு மனித உரிமைகளை உத்தரவாதப்படுத்தாத எந்தச் சமூகமும், எந்த அரசும் சனநாயகச் சமூகம் என்றும் சனநாயக அரசென்றும் அழைக்கத் தகுதி உடையன அல்ல.***
>
> ***- முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி திரு ஏ.எஸ். ஆனந்த்***

| ***மன்னராட்சி*** | ***மக்கள் ஆட்சி*** |
| --- | --- |
| தனி மனித அதிகாரம் | மக்கள் அதிகாரம் |
| கருணை | கடமை |
| சலுகை | உரிமை |
| அரசர் ஆட்சியில் மக்கள் உரிமையற்ற குடிகள் | மக்கள் ஆட்சியில் சட்டத்தினால் பாதுகாக்கப்பட்ட குடிமக்கள் |
| மன்னர் ஆட்சியில் உணவு உயிரன்று, நீரும் உயிரன்று, மன்னரே உயிர். | மக்கள் ஆட்சியில் மக்களே உயிர். அவர்கள் எல்லோரும் இந்நாட்டு மன்னர். |

***வகுப்புப்பயிற்சி***

**1)** மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து சென்று, கீழ்க்கண்ட கேள்விகளுக்கான பதிலை தயாரித்து, வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.

**1.**(அ) தமிழக அரசு அளிக்கும் சத்துணவு, இலவசப் பாடப்புத்தகம், பள்ளிச் சீருடை போன்றவை சலுகைகளா அல்லது நாம் பெற வேண்டிய உரிமைகளா ? ஏன் ?

---

---

---

---

***18வயது நிரம்பிய ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் வாக்காளராகப் பதிவு செய்ய உரிமை உடையவராகிறார்.***

***- பிரிவு 326, இந்திய அரசியல் சாசனம், 1950***

(ஆ) நம் தமிழக அரசு பொதுவாக மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் சலுகையாகக் கருதுகிறாயா ? கடமையாகக் கருதுகிறாயா ?

(இ)மக்களாட்சியில் அரசுகள் தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய மறுக்கின்ற போது, இதனைத் தட்டிக் கேட்பது உரிமையென்று கருதுகிறாயா ? யாருடைய உரிமை ? ஏன் ?

**2) மாதிரி சட்டசபை**

(அ) சட்டசபை நடப்பதை தொலைக்காட்சியில் பார்த்திருப்பீங்க. அதே போல, உங்கள் மாணவர்களைக் கொண்டு மாதிரி சட்டசபையை அமைத்து, சபாநாயகர், ஆளும் கட்சி, எதிர்கட்சிகள் அமைத்துக் கொள்ளுங்கள்

(ஆ) மருத்துவ வசதி செய்து தரவேண்டுவது அரசின் கடமை. அதைக் கேட்பது மக்களின் உரிமை என்ற விவாதத்தையோ

**அல்லது**

குடிநீர் மக்களின் அடிப்படைத் தேவை. இதைப் பெறுவது மக்களின் அடிப்படை உரிமை. இதைச் செய்ய வேண்டியது அரசின் கடமை என்ற விவாதத்தை முன் வைத்தோ விவாதிக்கவும்.

**இந்திய குடிமக்களாகிய நாம் அனைவரும் இந்தியாவை, ஓர் இறையாண்மை கொண்ட சமத்துவ, சமயச் சார்பற்ற, மக்களாட்சிக் குடியரசாக அமைத்துக் கொள்ள உறுதி பூண்டிருக்கிறோம்**

**- இந்திய அரசியல் சாசனம், முகப்புரை, 1950**

(இ) இந்தச் சட்டசபை அமர்வுகளின் நடவடிக்கைகளில் என்ன உரிமைகள், எப்படி மக்கள் பிரதிநிதிகளால் சட்டமன்றத்தில் பேசப்பட்டன ?

| உரிமைகள் | எப்படி? |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

(ஈ) என்ன உரிமைகள், எப்படி பாதுகாக்கப்பட்டதாகப் பேசப்பட்டன ?

| உரிமைகள் | எப்படி? |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

(உ) என்ன உரிமைகள், எப்படி மீறப்பட்டதாகச் சொல்லப்பட்டன.

| உரிமைகள் | எப்படி? |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

3) (அ) அடிப்படைக் கடமைகள் பட்டியலை நிதானமாக வாசிக்கவும்.

(ஆ) இன்றைய தமிழ்ச் சமுதாய சூழ்நிலையில் பொதுமக்கள் வளமாகவும், பாதுகாப்புடனும் வாழ்வதற்கு, நாம் கடைப்பிடிக்க வேண்டிய அதி முக்கியமான கடமைகள் எவை என்று கூறவும். காரணங்களை விளக்கவும்.

(இ) நீ குறிப்பிட்ட அதி முக்கியமான கடமைகளை நடைமுறைப்படுத்த நீ அளிக்கும் பரிந்துரைகள் யாவை? ஒவ்வொரு கடமைக்கும் உரிய பரிந்துரைகளை எழுதவும்.

| முக்கியக் கடமைகள் | காரணங்கள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

**ஊராட்சி மன்றங்கள் தனித்து இயங்கும் அளவிற்கு அதிகாரம் படைத்த அமைப்புகளாக உருவாக முயற்சிகளை எடுக்க வேண்டியது மாநிலங்களின் கடமையாகும்.**

**- பிரிவு 40, வழிகாட்டும் நெறிமுறைகள் இந்திய அரசியல் சாசனம், 1950**

**வீட்டுப்பயிற்சி**

4) நம் நாட்டில் மக்களின் உரிமைகளை வளமாக்கவும், பாதுகாக்கவும் உன்னுடைய பரிந்துரைகளை எழுதவும்.

(அ) அரசு அமைத்துள்ள ஆளும் கட்சி செய்ய வேண்டிய 10 செயல்பாடுகள் :

1. ------------------------------------------------------------

2. ------------------------------------------------------------

3. ------------------------------------------------------------

4. ------------------------------------------------------------

5. ------------------------------------------------------------

6. ------------------------------------------------------------

7. ------------------------------------------------------------

8. ------------------------------------------------------------

9. ------------------------------------------------------------

10. ------------------------------------------------------------

(ஆ) எதிர்கட்சிகள் செய்ய வேண்டிய 10 செயல்பாடுகள் :

1. ------------------------------------------------------------

2. ------------------------------------------------------------

3. ------------------------------------------------------------

4. ------------------------------------------------------------

5. ------------------------------------------------------------

6. ------------------------------------------------------------

7. ------------------------------------------------------------

8. ------------------------------------------------------------

9. ------------------------------------------------------------

10. ------------------------------------------------------------

(இ) அரசு நிர்வாகத்தில் இருப்போர் செய்ய வேண்டிய 10 செயல்பாடுகள் :

1. ----------------------------------------------------------------

2. ----------------------------------------------------------------

3. ----------------------------------------------------------------

4. ----------------------------------------------------------------

5. ----------------------------------------------------------------

6. ----------------------------------------------------------------

7. ----------------------------------------------------------------

8. ----------------------------------------------------------------

9. ----------------------------------------------------------------

10. ----------------------------------------------------------------

(ஈ) காவல்துறையினர் செய்ய வேண்டிய 10 செயல்பாடுகள் :

1. ----------------------------------------------------------------

2. ----------------------------------------------------------------

3. ----------------------------------------------------------------

4. ----------------------------------------------------------------

5. ----------------------------------------------------------------

6. ----------------------------------------------------------------

7. ----------------------------------------------------------------

8. ----------------------------------------------------------------

9. ----------------------------------------------------------------

10. ----------------------------------------------------------------

**ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற தத்துவம் வெற்றி பெற வேண்டுமாயின் அந்நாட்டின் அரசியலமைப்பானது, அரசியல் சம்பந்தப்பட்டவற்றை மட்டும் நெறிப்படுத்துவது பயனில்லை; மக்களின் சமூக, பொருளாதார, ஏற்றத் தாழ்வுகளையும் அது தீர்க்கவல்லதாய் இருக்க வேண்டும்.**

**- டாக்டர். அம்பேத்கர்.**

(உ) நீதித்துறையினர் செய்ய வேண்டிய 10 செயல்பாடுகள் :

1. ------------------------------------------------------------

2. ------------------------------------------------------------

3. ------------------------------------------------------------

4. ------------------------------------------------------------

5. ------------------------------------------------------------

6. ------------------------------------------------------------

7. ------------------------------------------------------------

8. ------------------------------------------------------------

9. ------------------------------------------------------------

10. ------------------------------------------------------------

**மருத்துவ வசதி**

**இந்தியாவில் ஒரு லட்சம் மக்களுக்கு சராசரியாக 50 மருத்துவர்களே உள்ளனர். கிராமங்களில் வாழும் ஒரு லட்சம் மக்களுக்கு சராசரியாக12.8 மருத்துவர்களே உள்ளனர்.** **Human Scape – May 2002**

(ஊ) தேர்தல் ஆணையம் செய்ய வேண்டிய 10 செயல்பாடுகள் :

1. ------------------------------------------------------------

2. ------------------------------------------------------------

3. ------------------------------------------------------------

4. ------------------------------------------------------------

5. ------------------------------------------------------------

6. ------------------------------------------------------------

7. ------------------------------------------------------------

8. ------------------------------------------------------------

9. ------------------------------------------------------------

10. ------------------------------------------------------------

(எ) குடிமக்கள் செய்ய வேண்டிய 10 செயல்பாடுகள் :

1. ----------------------------------------------------------------

2. ----------------------------------------------------------------

3. ----------------------------------------------------------------

4. ----------------------------------------------------------------

5. ----------------------------------------------------------------

6. ----------------------------------------------------------------

7. ----------------------------------------------------------------

8. ----------------------------------------------------------------

9. ----------------------------------------------------------------

10. ---------------------------------------------------------------

(ஏ) நம்மைப் போன்ற மாணவர் குடிமக்கள் செய்ய வேண்டிய 10 செயல்பாடுகள் :

1. ----------------------------------------------------------------

2. ----------------------------------------------------------------

3. ----------------------------------------------------------------

4. ----------------------------------------------------------------

5. ----------------------------------------------------------------

6. ----------------------------------------------------------------

7. ----------------------------------------------------------------

8. ----------------------------------------------------------------

9. ----------------------------------------------------------------

10. ---------------------------------------------------------------

**கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடவும், சிறுபான்மையினர் கருத்துக்களும் மதிக்கப்படவும், உரிமைகள் கொண்ட பன்மைச் சமூகத்தில்தான் மனித உரிமைகள் மலரும்.**

**- பிரிவு 5-2, ஆசிய மனித உரிமைகள் சாசனம், 1998**

(ஐ) இந்தப் பரிந்துரைகளை வகுப்பில் மாணவர்கள் வாசித்துக் காட்டவும்.

(ஒ) ஆசிரியர் ஒட்டுமொத்தமாக சிந்தனைப் பகிர்வை அளிக்கவும்.

(ஓ) பரிந்துரைகள் அனைத்தையும் தொகுத்து, ஒரு கடித வடிவில் தனித்தனியே கீழ்க்கண்ட முகவரியில் உள்ள நபர்களுக்கு அனுப்பலாம்.

| | |
|---|---|
| (1) தேசியத் தேர்தல் ஆணையம் | (2) மாநிலத் தேர்தல் ஆணையம் |
| (3) பத்திரிகைகள் | (4) தேசிய மனித உரிமை ஆணையம் |
| (5) மாநில மனித உரிமை ஆணையம் | (6) உச்ச நீதிமன்றம் |
| (7) உயர்நீதிமன்றம் | (8) உயர்நீதிமன்றம் |
| (9) உயர்நீதிமன்றம் | (10) எதிர்கட்சித் தலைவர் |
| (11) சட்டசபை சபாநாயகர் | (12) மாநில காவல்துறை அதிகாரி |
| 13) முதல் மந்திரியின் முதன்மைச் செயலர் | |

## இந்திய நாட்டுக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

**(அ) அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்து அதன் நோக்கங்களையும் நிறுவனங்களையும் மதிப்பதுடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்.**

**(ஆ) நமது சுதந்திரப் போராட்டத்தின் நோக்கங்களைப் பேணிக் காத்தல்.**

**(இ) இந்தியாவின் இறையாண்மையையும், ஒற்றுமையையும், ஒருமைப் பாட்டையும் பேணிக் காத்தல்.**

**(ஈ) நாட்டைக் காப்பதுடன், தேவையான போது நாட்டு நலப்பணி செய்தல்.**

**(உ) இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும், நல்லிணக்கத்தையும் வளர்த்தல்; பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்.**

**(ஊ) இந்த நாட்டின் பன்மைச் சமூகக் கூறுகளை வளர்த்தல்.**

**(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்.**

**(ஏ) அறிவியல் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஆராய்ச்சியுணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்.**

**(ஐ) பொதுச்சொத்தைப் பாதுகாத்தல் ; வன்முறையை விட்டொழித்தல்.**

இவையாவும் இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவரின் கடமையாகும்.

**-இந்திய அரசியலமைப்புச் சாசனம், 1950**